மணிவிழா மலர்

# பசுமனச்சிமிழ்




2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J/JAFFNA HINDU LADIES COLLEGE
LIBRARY
2/5/2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.இந்து மகளிர் கல்லூரி
அதிபர்
மதிப்பார்ந்த திருமதி. மிமலாதேவி விமலநாதன்
அவர்களின்

# பசுமனச்சிமிழ்

## மணிவிழா மலர்
## 2023

வெளியீடு :
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் முகம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பசுமனச்சிமிழ் |
| நூலின் வகை | : | மணிவிழா மலர் |
| வெளியீடு | : | ஆசிரியர் நலன்புரிக் கழகம்<br>யாழ். இந்து மகளிர் கல்லூரி. |
| பக்கங்கள் | : | i-vii + 1-114 |
| பிரதிகள் | : | 200 |
| அனுசரணை | : | ANDRA Printers |
| அச்சுப்பதிப்பு | : | ANDRA Printers<br>379, Kasthuriyar Road, Jaffna.<br>Tel : 021 222 8929 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. மிமலாதேவி விமலநாதன் SLPS – I
B.A.(Hons), PGDE, M.Ed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்க்கைத் துணையுடன் முதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழுவினர்

திரு.வி. குகநாதன்

திரு.அ.லிங்கராஜ்

திரு.பொ.உதயராசா

திரு.த.செந்தில்குமரன்

திருமதி.ய.விக்னேஸ்வரமூர்த்தி

செல்வி.க. நமசிவாயம்

திருமதி.பி.தங்கரூபன்

திருமதி.பா.தியாகராஜா

திருமதி.ம.பரமேஸ்வரன்

திருமதி.ல.இந்திரஜித்

திருமதி.சி.சிவரூபன்

திருமதி.சோ.எழிலாதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் இதயத்திலிருந்து

யா/இந்து மகளிர் கல்லூரியில் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக அதிபராக கடமை யாற்றி அகவை அறுபதின் பின்னரும் தன் சேவையை திறம்பட ஆற்றி பணியில் ஓய்வு பெறும் அம்மையார் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களின் கல்விப்புல பயணப் பாதையின் சாதனைத் தடங்களை, வரலாற்றுப்பதிவுகளை, அனுபவத்திரட்டுக்களை தாங்கி யதாக "பசுமனச்சிமிழ்" எனும் மலர் வெளிவருவதை இட்டு கல்லூரிச் சமூகம் மட்டற்ற மகிழ்வு அடைகிறது.

இந்து மகளிர் கல்லூரியில் அம்மையார் இருந்த காலம் கல்லூரி வரலாற்றில் "பொற் காலம்" எனலாம். கல்லூரி பல்வேறு உயர் மட்ட சாதனைகளை நிகழ்த்தி வந்ததோடு யாழ் மாவட்டத்தின் முன்னணி கல்லூரியாக, தேசிய பாடசாலையாக உயர்வு பெற்றமை இதற்கு தக்க சான்றாகும். இத்தருணத்தில் அம்மையார் அவர்களின் சேவைக்கு நன்றி பகரும் முகமாக இம்மலரை சமர்ப்பணம் செய்வதில் மகிழ்வடைகின்றோம்.

இம் மலர் சிறக்க அம்மையாரோடு பணியாற்றிய கல்விப்புலம் சார்ந்த உயர் அதிகாரிகள், பாடசாலை சமூகத்தினர், பெரியோர்கள் ஆன்மீகத் தலைவர்களிடம் அம்மையார் பற்றிய நினைவுப் பகிர்வுகளை கேட்ட போது மறுப்பின்றி எமக்கு எழுத்துப் பிரதியாகவோ, இணையவழி பிரதியாகவோ பலரும் பல்வேறு ஆக்கங்களை அனுப்பியிருந் தார்கள். அம்மையார் பற்றிய அனுபவத் தகவல்களை தந்துதவிய அனைவருக்கும் கோடி நன்றிகள்.

மலருக்கு பாராட்டுரைகள் வழங்கிய பெரியோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரி யர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் இம்மலர் சிறப்புற பல்வேறு உதவிகளையும் புரிந்த கல்லூரி சமூகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

அம்மையார் அவர்களின் அரும் சேவைக்கு இம்மலரை சமர்ப்பணம் செய்து அம்மையார் அவர்களின் எதிர்காலம் சிறப்புற அமைய நடுத்தோட்ட இராஜவரோதய பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து நிற்கின்றோம்.

மலர்க் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரினுள்ளே .................. பார்வைக்கு...

இயல் 01 01-05

ஆசிச் செய்திகள்

1.1 பிரம்ம ஸ்ரீ பா.நகுலேஸ்வர குருக்கள்
(நடுத்தோட்ட ராஜவரோதஜ விநாயக ஆலய பிரதம குரு)
1.2 ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் (நல்லை திருஞான சம்பந்தர் ஆதினம்)
1.3 தவத்திரு வேலன் சுவாமிகள் (சிவகுரு ஆதீனம் - நல்லூர்)
1.4 கலாநிதி.ஆறு.திருமுருகன் (தலைவர் - ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்)

இயல் 02 06-61

வாழ்த்துச் செய்திகள்

2.1 செல்வி.சு.கந்தசாமி கல்லூரி முதல்வர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி
2.2 திரு.ஆ.நடராஜன் (முன்னைநாள் இந்திய துணைத்தூதுவர்- யாழ்ப்பாணம்)
2.3 பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா
(துணைவேந்தர் , கணித பேராசிரியர் - யாழ். பல்கலைக்கழகம்)
2.4 ஓய்வுநிலை பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னைநாள் துணைவேந்தர் - யாழ்.பல்கலைக்கழகம்)
2.5 ஓய்வுநிலை பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் ச.மனோன்மணி
(கக்சுயின் பல்கலைக்கழகம் - ஜப்பான்)
2.6 ஓய்வுநிலை பேராசிரியர் கா.குகபாலன் - யாழ்.பல்கலைக்கழகம்
2.7 திரு.செ.உதயகுமார் (மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)
2.8 திரு.செ.சந்திரராஜா
(ஓய்வுநிலை வலயக் கல்விப்பணிப்பாளர்- யாழ்ப்பாணம்)
2.9 திரு. ந.தெய்வேந்திராஜா
(ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)
2.10 திரு.சு.சுந்திரசிவம் (ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)
2.11 திருமதி.அ.வேதநாயகம் (ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.12 திரு.முத்து இராதகிருஷ்ணன் (வலயக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

2.13 திரு.த.இராஜலிங்கம் (ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

2.14 திரு.பொ.அருணகிரிநாதன் (ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

2.15 திரு.அ.அகிலதாஸ் (ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்- யாழ். கல்வி வலயம்)

2.16 திரு.ச.இரவீந்திரநாதன்
(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்- யாழ். கல்வி வலயம்)

2.17 திரு.சி.மாணிக்கராசா
(ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் - யாழ்.கல்வி வலயம்)

2.18 திரு.நா.சிவநேசன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர் - நல்லூர்)

2.19 திரு.க.முருகவேல் (ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி)

2.20 திரு.த.கிருபாகரன் (வலயக் கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி)

2.21 திருமதி.ல.லிங்கேஸ்வரன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி)

2.22 திருமதி.வே.பேரின்பநாதன் (ஓய்வுநிலை அதிபர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

2.23 திரு.சி.நவரத்தினம் (ஓய்வுநிலை அதிபர் - தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி)

2.24 செல்வி. சூ.அரசரட்ணம் (பிரதி அதிபர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

2.25 திருமதி.ச.சிவநாதன் (ஓய்வுநிலை உபஅதிபர்- யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

2.26 திருமதி.ரோ.பாலஸ்கந்தன் (ஓய்வுநிலை உபஅதிபர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

2.27 திருமதி.சு.சுகுனேந்திரன் (உப அதிபர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

2.28 திருமதி.உ.ரவீகரன் (அதிபர் - யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்கலவன் பாடசாலை)

2.29 செல்வி. மு.செல்வராணி (ஓய்வுநிலை உபஅதிபர், யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்)

2.30 திருமதி.க.தர்மகுணசிங்கம்
(ஓய்வுநிலை பகுதித் தலைவர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

2.31 திருமதி.ச.செபமாலைதாசன்
(ஓய்வுநிலை பகுதித் தலைவர்- யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

2.32 திருமதி.கு.விஜயரகுநாதன்
(ஓய்வுநிலை அதிபர் - யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்)

2.33 திருமதி.ப.தாமோதரகுமார்
(பகுதித் தலைவர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

2.34 திருமதி.க.தனமூர்த்தி
(முன்னைநாள் பகுதித் தலைவர்- யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

2.35 திரு.திருமதி.குகானந்தராசா - (கோட்டக்கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர் பல்கலைக்கழக நண்பர்கள்)

2.36 திரு.செ.அல்பிறட் ( அதிபர், பல்கலைக்கழக நண்பன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 03 62-69

வாழ்க்கைச் சாதனைத் தடங்கள்

3.1 வாழ்வியலின் வழிகாட்டி (செல்வன்.வி.சிந்துஜன்)

3.2 சேவை விபரம்

3.3 வாழ்க்கைப் பாதையில் சாதனைத் தடங்கள்
திருமதி.பிரேமலா தங்கறூபன் (ஆசிரியர்)

இயல் 04

ஆசிரியர் கழகம், பழைய மாணவர் சங்கத் தலைவர்கள்,
பெற்றோர் வாழ்த்துச் செய்திகள் 70-77

4.1 திரு.வி.குகநாதன் (தலைவர், ஆசிரியர் நலன்புரிக் கழகம் -
யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

4.2 திருமதி.அ.கைலாயபிள்ளை
(தலைவர், யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு)

4.3 செல்வி.ந.குழந்தைவேலு
(போஷகர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கனடா)

4.4 திரு.ம.சத்தியகுமார்
(செயலாளர் - பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

4.5 திருமதி.வா.ஜயேந்திரன்
(தலைவி -யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கனடா)

4.6 திருமதி.ஓ.யசோதரன்
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - யாழ்ப்பாணம்)

4.7 திருமதி.ஸ்.சாந்தகுமார்
(தலைவி - யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - சிட்னி கிளை)

4.8 திரு.த.தர்பாகரன்
(பெற்றோர், ஐங்கரன் மோட்டஸ், மானிப்பாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 05

கல்லூரிப் பயணத்தில் எம் அதிபர் 78-80
- செல்வி. விதுஷா விஜயகுமார்

இயல் 06

யாழ்ப்பாணம் இந்து மகளிர் நங்கையுடன் ஒரு செவ்வி 81- 101
- சிரேஷ்ட மாணவ தலைவி செல்வி. தி. தர்மப்பிரியா

இயல் 07

மாணவர்களின் வாழ்த்துச் செய்திகள் 102-107

7.1 மருத்துவபீட மாணவிகளின் வாழ்த்துச் செய்திகள்
7.2 உயர் பெறுபேறு பெற்ற 2016 வர்த்தகப் பிரிவு மாணவிகளின் வாழ்த்துச் செய்தி
7.2 மாவட்ட நிலையில் முதல்நிலை பெற்ற மாணவிகளின் வாழ்த்து
7.2 கணித - விஞ்ஞான துறையில் சாதித்த மாணவர்கள் (2021)
7.3 க.பொ.த. (சா/த) இல் 9A சித்தி பெற்ற மாணவர்கள் (2021)

இயல் 08

க.பொ.த. [சா/த], க.பொ.த [உ/த] மாணவர்களின் உயர் பெறுபேறுகள் 2021 / 2022

இணைபாடவிதான முடிவுகள் [தேசிய மட்டம்] 108-114



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர் குழாம் - 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபருக்கு சேவை நயப்பு ஆசியுரை

பெண் கல்விக்கு யாழ் நகரில் காத்திரமான பங்களிப்பை செய்யும் இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்றுப்பாதையில் தனக்கென தனியான இடத்தைப் பெற்று கல்லூ ரித் தாயை வளர்ச்சிப்பாதையில் திசைகாட்டும் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அதிபர் அவர்களின் கல்விச்சேவைக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பாடசாலையின் மனித வளங்களான பிரதி அதிபர், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவிகள், பழைய மாணவிகள் போன்றோரை உரிய முறையில் வழிகாட்டி கல்லூரித்தாய் மகிழ்வடையும்படி கல்வி அபிவிருத்தியையும் இணைக்கலைத் திட்ட செயன்முறையையும், பௌதீக வளமேம்பாடையும் ஏற்படுத்தி ஆளுமை மிக்க தலைமைத்துவப் பண்புகளோடு கல்லூரியை வளர்ச்சிப்பாதையில் ஒரு தசாப்த காலம் (2012 - 2022) வழிகாட்டிய இந்த கல்லூரித்தாய் பெற்ற மகளாக கடமை உயர்வோடு இறைபக்தியை அடித் தளமாகக் கொண்டு சேவையாற்றிய மாண்புமிகு அதிபர் ஓய்வுபெறுவது கல்லூரியைப் பொறுத்த வரையில் வருத்தமாக இருந்தாலும் காலத்தின் நியதி யாக உள்ளது. அவரின் ஓய்வு காலம் சீரும் சிறப்புமாகக் காணப்பட எல்லாம் வல்ல நடுத் தோட்ட ராஜ வரோதஜ விநாயகர் அருள் புரிய பிரார்த்திக்கின்றேன்.

இந்து மகளிர் கல்லூரி முன்னுதாரணமான பாடசாலைகளுக்கு சவால் விடக் கூடிய சகல கட்டுமானங்களையும் பெற்று விளங்க காரணமாகத் திகழ்ந்தவர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள். அந்தவகையில் தனது முதல்வர் பணியை நேர்த்தியாக நிறைவேற்றி மனநிறைவுடன் அதிபர் ஓய்வுபெறுகின்றார். அதிபர் அவர்கள் விட்டுச்செல்லும் உயரிய பணி யைத் தொடர இறையருள் கைகூட வேண்டும். தொடர்ந்து அதிபருடைய வழிகாட்டல் இப் பாடசாலைக்கு கிடைக்க விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகனை வணங்கி ஆசி வழங்கி நிறைவு செய்கின்றேன்.

சுபம்

**பிரம்ம ஸ்ரீ பா.நகுலேஸ்வர குருக்கள்**

ஆலய பிரதம குரு,

நடுத்தோட்ட ராஜ வரோதஜ விநாயகர் ஆலயம்,

யாழ்.இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளாசிச் செய்தி

கல்வி சார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறும் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் மணி விழாக் காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்து சமய மகளிருக்காக உருவான பாடசாலை இந்து கலாசாரங்களை பேணுவதில் பெரும்பங்கு வகித்தமை பாராட்டுக்குரியது. இதற்கு இந்தக் கல்விப் புலம் சார்ந்தவர்களின் பணி அளப்பரியது. இந்தச் சேவை நலன் பாராட்டுக்குரிய அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் ஆசிரியராக, அதிபராக இருந்து நல்ல பண்புகள் மிக்க சுபாவத்தோடு கூடிய இவரது சேவை கல்விப் புலத்திற்கு மேலும் கிடைத்திட இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமஹாசந்நிதானம்.
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக,**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" அதிலும் பிறருக்காக வாழ்ந்து மகிழ்ச்சி அடைதல் என்பது ஒரு அரியதவமாகும். அந்தவகையில் ஆசிரியப் பணியை "நம் கடன் பணி செய்து கிடப்பதே" எனத் தலைமேற் கொண்டு 1989ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரை 33 வருட காலமாக ஆசிரியராகவும், அதிபராகவும் கடைமையாற்றிய அம்மையாரின் பணி சாலச்சிறந்தது. அம்மையார் கிளிநொச்சி மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மிக நெருக்கடியான சூழல்களிலும் பகீரதப்பிரயத்தனத்துடன் பணியாற்றினார் என்பது பாராட்டுக்குரியது.

இவ்வாறான காலகட்டத்தில் தமது சேவையை திறம்பட ஆற்றி மாணவர்களை சிறக்க வைப்பது என்பது மிகப் பாரிய பணியாகும். இவ்வண்ணம் ஆசிரியப் பணியை ஆற்றிய அம்மணியின் சேவை அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாகும்.

அம்மையார் தமது சேவைக்காலத்தின் நிறைவுக்காலமாகிய யா/ இந்து மகளிர் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பொற்காலமாகும். யாழ் நகரின் பிரபல முன்னணிப் பெண்கள் பாடசாலைகளில் ஒன்றாகியதும், சமய ஆச்சார விழுமியங்களில் முன்னணியில் உள்ளதுமான இப் பாடசாலையின் பாரம்பரியத்தை வழுவவிடாமலும் நவீன தொழில்நுட்பங்களை கல்லூரியில் ஏற்றமடையச் செய்வதிலும் இவரது பணி அளப்பரியது.

இணைப்பாடவிதானங்களில் மிக ஊக்கம் காட்டி மாணவர்கள் தேசிய மட்டம் வரை சென்று தங்கப்பதக்கங்கள் பெற்று வருவதற்கும், மருத்துவம், பொறியியல், வணிகம் போன்ற துறைகளில் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தமைக்கும் அம்மையார் அவர்களே பிரதான காரணி என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அத்துடன் பாடசாலையின் பௌதிகச்சூழல் வகுப்பறைக் கவின்நிலை போன்றவை மாணவர்களின் கற்றற் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் என அறிந்து அதற்கேற்ப பாடசாலையை அழகுற அமைத்துள்ளமையும் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுடைய வாழ்க்கையில் மூன்றாவது ஆஷ்ரமமாகிய வானப்பிரஸ்த ஆஷ்ரம் 60 வயதிலிருந்து ஆரம்பிக்கின்றது. இவ்வளவு காலமும் பெற்ற அறிவு, ஆற்றல், அனுபவம், ஆகியவற்றை இனிவரும் காலங்களில் சமுதாய நன்மைக்காக, இறைபணிக்காக, பலனை எதிர்பாராத பொருத்தொண்டுக்காக பயன்படுத்த வேண்டும் என்று எமது சமய சாத்திரங்கள் சொல்லியிருக்கின்றன. அந்தவகையில் அம்மையார் அவர்கள் ஓய்வு காலத்தை மேற் கூறியபடி சமுதாய நன்மைக்காக பயன்படுத்த வேண்டும் என்பது எமது அன்பான வேண்டுகோளாகும்.

திருமதி.மிமலாதேவி விமலநாதன் தனது குடும்பத்தினருடன் நீண்ட ஆயுளுடன், தேக ஆரோக்கியத்துடன், மன அமைதியுடன், ஆன்மீக நெறியில் வாழ ஆசிவேண்டி எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
அவனித் தொண்டே அவ(ர)ன் தொண்டென
சிவத் தொண்டு செய்வோம் வாரீர்.

இறைபணியில்,
**தவத்திரு வேலன் சுவாமிகள்.**
சிவகுரு ஆதினம்,
692, பருத்தித்துறை வீதி,நல்லூர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

சரித்திரம் நிறைந்த யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அரியாசனத்தை அலங்கரித்த அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களின் பிரியாவிடை குறித்து வாழ்த்தி ஆசீர் வதிப்பதில் ஆனந்தமடைகிறேன். யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிகார சபை நிறுவிய இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் பதவி என்பது மகத்துவமானது.

புகழ் பூத்த அதிபர்கள் தம் உன்னத சேவையால் கட்டி வளர்த்த கல்லூரி யின் சிறப்பை கடந்த 10 வருடங்களாக நிர்வகித்த பெருமை அம்மையாரைச் சாரும். அம்மையார் பௌதீக வளங்களை பெருக்குவதில் மிகவும் அக்கறை காட்டினார். அவரது ஓய்வு காலத்தில் சகல நலன்களோடும் மகிழ்வாக வாழ துர்க்கை அம்மனைப் பிரார்த்தித்து. இந்து மகளிர் கல்லூரியின் சிறப்பு மேலும் பிரகாசிக்க மீண்டும் இறையருளை வேண்டி அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்,**
தலைவர்,
ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



ஈழமணித் திருநாட்டில் வடபால் அமைந்த யாழ்நகரில் புகழ் பூத்த கல்லூரியான யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராகப் பன்னிரண்டு வருடகாலம் சேவை யாற்றி ஓய்வுபெற்றுச் சென்றிருக்கும் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களை வாழ்த் துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கல்லூரி மாணவர்களின் கல்வி, கலாசாரம், பண்பாடுகள் சிறந்தோங்க திறம்பட வழிநடத்திச் சென்ற நல்ல தலைமைத்துவம் மிக்க பெண்மணியான அதிபர் அவர்கள், மாணவர்களின் கலை, இலக்கியம் மற்றும் விளையாட்டுத்துறை வளர்ச்சியில் ஆர்வத் துடன் வழிநடத்திச் சென்றவர். கல்லூரியின் பழைய மாணவிகள் நலன் விரும்பிகள் அனைவரையும் ஒன்றிணைந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு தன்னலமற்ற சேவையாற்றிச் சென்றிருக்கும் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்வடை கின்றேன்.

சேவைத் திருப்தியுடன் ஓய்வுபெற்றுச் சென்றிருக்கும் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் தனது வாழ்நாளில் தனது துணைவர், பிள்ளையுடன் சீரும் சிறப்பும் பெற்று வாழ கல்லூரியின் இராஜவரோதய விநாயப்பெருமானின் ஆசிவேண்டி வாழ்த்துகின்றேன்.

**செல்வி. சுமதி கந்தசாமி.**
அதிபர்,
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி. மிமலாதேவி விமல நாதன் அம்மையார் அவர்களுடைய மணிவிழாவுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவராக நான் 2015ஆம் ஆண்டிலே பொறுப்பேற்று அங்கு கடமையாற்றிய மூன்று வருடங்களில் பலருடன் பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. ஆயிரக்கணக்கான மக்களுடன் நாம் பழகினாலும், பணியாற்றி னாலும் அவர்களில் சிலர் எமது மனதில் என்றும் மறக்க முடியாதவர்களாகி விடுகின்றனர். அந்த வகையில் எனது பணிக்காலத்தில் நான் பார்த்து வியந்த ஆளுமைகளில் முக்கிய மான ஒருவராக யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அம்மையார் விளங்குகின்றார்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு பல தடவைகள் பணி நிமித்தமாக சென்றுள்ளேன். அங்கு அம்மையார் அவர்களை முதன் முதலில் பார்க்கும் பொழுது அவர் புன்னகை பூத்த மகிழ்வான முகத்துடன் அமைதியாக வரவேற்றார். அவரது அமைதியான புன்னகை பூத்த முகம், அவரது நிர்வாக ஆளுமையை காட்டியது அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் அவர் மீது வைத்துள்ள அன்பையும் மரியாதையும் அறியக்கூடியதாக இருந்தது.

இந்தியத் துணைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச யோகா தினம், சர்வதேச நடன தினம், இந்திய சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் ஏனைய கலாசார நிகழ்வுகள் அனைத்திற்கும் யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்க ளுடைய பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கவை மறக்கமுடியாதவை. அவர்கள் பங்கெடுத்த அனைத்து நிகழ்வுகளிலும் அனைவரதும் பாராட்டுக்களையும் பெற்றனர். இதற்கு அதிபர் அவர்களது வழிகாட்டுதல்களும் ஊக்கமுமே காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுவதும் "கொரனா தீநுண்மி" தாக்கத்தால் முடங்கிக் கிடந்த காலத்தில் அங்கு நான் பணியாற்றாவிடினும் அங்குள்ளவர்களின் நலன்கள் தொடர்பில் அறிந்து கொள்வேன். அந்த வகையில் தனது மாணவர்களது சுகாதாரப் பாதுகாப்பு விடயத்தில் மிகவும் அக்கறை யாகவும் அதே நேரம் அவர்களது கல்விச் செயற்பாடுகள் பாதிக்காவண்ணம் மிகவும் பொ றுப்புடனும் அக்கறையுடனும் அவர் பாடசாலையை நடத்தியமை குறித்து அறிந்து பெரு மகிழ்ச்சி அடைந்தேன்.

இவ்வாறான சிறப்புக்கள் கொண்ட அம்மையாரது மணிவிழா நன்நாளில் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களை மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு. ஆ. நடராஜன்,**
யாழ்ப்பாணத்திற்கான முன்னாள் இந்திய துணைத்தூதுவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவை நயந்து பாராட்டுகின்றேன்

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் இலங்கையின் கல்வி வரலாற்றில் தனித்துவமான பல இயல்புகளைக் கொண்டது. குறிப்பாக பெண் கல்வி மரபு என்பது யாழ்ப்பாணத்தில் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே ஆரம்பமாகிவிட்டது.

காலனித்துவ ஆட்சியின் தாக்கம் சைவத் தமிழ்க் கல்வி மரபில் ஏற்படுத்திய தாக்கத்தினால் ஆறுமுக நாவலர் அவர்களால் சைவக் கல்விப் பாரம்பரியத்தில் உருவாக்கப்பட்ட புரட்சி ஈழ தேசமெங்கும் வியாபகம் பெற்றது. குறிப்பாக சைவப் பெருவள்ளலார் சேர். பொன். இராமநாதன் பெண்களுக்கு என சைவத் தமிழ்ப் பாரம்பரியம் மிக்க கல்லூரியை உருவாக்கினார். அதனுடைய தொடர்ச்சியாக ஆரம்பிக்கப்பட்ட இந்துப் பண்பாட்டுப் பின்னணியுடனான கல்லூரிகளில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி முதன்மையானது.

இக்கல்லூரியின் அதிபர் ஆசனத்தை அலங்கரித்த பெண் ஆளுமைகள் ஈழத்துப் பெண் கல்வி மரபில் கனதியான செல்வாக்கினைக் கொண்டவர்கள். இன்று திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களும் அத்தகைய உயர்ந்ததோர் வரிசையில் ஒருவராகத் தனது கல்விச் சேவையில் நிறைவு காண்கின்றார். அதிலும் குறிப்பாக திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் கல்வி புல சேவையில் மாணவி, ஆசிரியை, அதிபர் எனும் முந்நிலை வகிபாகங்களை கொண்டவர்.

எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடம் வெளியிட்ட பெண் ஆளுமைகளுள் இவரும் முக்கியமானவர் ஆவர். இன்று தனது 60 ஆவது வயதை பூர்த்தி செய்கின்றமையையும் மணிவிழாக் காண்பதையுமிட்டு மகிழ்வுறுகின்றேன்.

கல்வித் துறையில் கனதியான பங்காற்றிய திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் நீடித்த நித்திய ஆரோக்கியத்துடன் நிறைவாக வாழ எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பணிந்து வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர். சி. சிறிசற்குணராஜா,**
துணைவேந்தர் - கணிதப் பேராசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாதனையாளர்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதனின் மணிவிழாவையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மணிவிழா நாயகி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவி. ஆசிரியப் பணியின் பின் அதிபர் சேவையில் இணைந்து பலவருட அனுபவங்களின் பின் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் பணியாற்றிவரும் இவர் ஆற்றலும், ஆளுமையும், மிக்கவராகத் திகழ்கின்றார்.

இவரது காலத்தில் கல்லூரி பல்துறைகளில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. புதிய மாடிக் கட்டடங்கள், ஆய்வுகூடம், நுழைவாயில் மற்றும் புனருத்தாரணப் பணிகள் இவரின் சாதனைகளுள் சிலவாகும். மேலும் இக்கல்லூரியில் இருந்து இன்று பல்கலைக் கழகங்கள், மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர் தொகை துரித மாக அதிகரித்துச் செல்கின்றது. இக் கல்லூரி தேசியப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப் பட்டதும் சிறப்புக்குரியது.

அதிபரின் பணி சிறக்கவும், வாழ்வு வளம் பெறவும் வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை** *Phd-Durham,*
வாழ்நாட் பேராசிரியர் - முன்னாள் துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக நீண்ட காலமாகப் பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி.மிமலாதேவி விமலநாதனைப் பாராட்டி கல்லூரிச் சமூகம் மலர் ஒன்றினை வெளியிடத் தீர்மானித்துள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். அதிபரின் பணியினைக் கல்லூரிச் சமூகம் நன்கு உணர்ந்துள்ளமையை இம்முயற்சி வெளிப்படுத்துகிறது. இவரு டைய காலத்தில் இக்கல்லூரியின் பல நிகழ்வுகளையும் பலர் பதிவுசெய்வதற்கு இம்முயற்சி உதவி உள்ளது. இதில் எங்கள் வாழ்த்துக்களையும் பதிவு செய்யக் கேட்டமைக்கு வெளியீட் டுக் குழுவினர்க்கு எம் நன்றியினைக் கூறுகிறோம்.

திருமதி.விமலநாதனை எமக்கு நீண்ட காலமாகத் தெரியும். அவரும் அவருடைய மூத்த சகோதரியும் பல்கலைக் கழகத்திலே என்னிடம்(அ.சண்முகதாஸ்) படித்தவர்கள். மனோன்மணியும் நானும் அவர்களுடைய குடும்பத்தினருடன் நெருங்கிய தொடர்புகொண்ட வர்கள். மென்மையான பேச்சும் ஆரவாரமில்லாத அதிகாரமும் கொண்டவராக அவர் திகழ்ந்து வந்துள்ளதை நாம் கண்டுள்ளோம்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக வருபவர்கள் நீண்ட காலமாக அப்பதவியினை வகித்து ஓய்வு பெறுவதை நாம் கண்டுள்ளோம். மிமலாதேவியும் அவ்வாறே நீண்டகாலச் சேவையினை ஆற்றியுள்ளார். கல்விச் சேவையிலே பணியாற்றி வந்த அவர் கணவர் அவருடைய மதிப்பார்ந்த முயற்சிகளுக்குத் துணையாக நின்றுள்ளார்.

திருமதி மிமலாதேவி விமலநாதனின் கல்விச் சேவையினைப் பாராட்டி வாழ்த்து கின்ற இந்த வேளையில் அவருடைய ஓய்வு வாழ்வு மிகச் சிறப்பாகவும் சீருடனும் செழிப் புடனும் அமைய எம் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறி இந்த வாழ்த்துச் செய்தி யினை நிறைவுசெய்கிறோம்.

**தகைசால் வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ்,**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

**முனைவர் ச. மனோன்மணி**

ஓய்வுநிலைப் பேராசிரியர்,

கக்சுயின் பல்கலைக் கழகம் - ஜப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட அதிபர்



யாழ்ப்பாண நகரில் சைவப் பெண்களின் கல்வியில் அக்கறை கொண்ட பெரியார்களால் நிறுவப்பட்ட இந்து மகளிர் கல்லூரி பவளவிழாவினைக் கண்டு நூற் றாண்டினை நோக்கிச் செல்லும் நிலையில் இக்கல்லூரியை அலங்கரித்த அதிபர்களின் தன்ன லமற்ற சேவையினால் ஆலவிருட்சமாக வளர்ச்சி இக் கல்லூரி கண்டுள்ளது. இந்த அதிபர்கள். வரிசையில் கல்லூரியின் பழைய மாணவியான திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் 2012 - 2022ம் ஆண்டுகளிடையில் பத்தாண்டுகளாக புகழ் பூத்த அதிபராகக் கடமையாற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த அரும் பாடுபட்டவர் என்றால் மிகையா காது. இவரது அதிபர் பதவிக்காலமானது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல் லாது கல்லூரியின் உட்கட்டுமான வளர்ச்சியிலும் பெரும் பங்கு கொண்டு சகல வசதிகளை யும் உள்ளடக்கிய பாடசாலையாக உருவாக்கிய பெருமைக் குரியவராகத் திகழ்கின்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1982 - 1986 கல்வியாண்டில் புவியியல் சிறப்புக் கலை பயின்று சிறப்புச் சித்தி பெற்ற திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் டிப்ளோமாவையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகல்வி மாணிப் பட்டத்தையும் பெற்றதன் மூலம் கல்விப்புலமையுடன் நிர்வாகத்திறமையையும் வளர்த்துக்கொண்டதன் வாயிலாக கல்லூரியை நேரான பாதையில் பயணிப்பதற்கு அவரது பங்களிப்பு பெரிதும் உதவியது எனலாம். இவரது பதவிக் காலத்தில் விஞ்ஞான, வணிக, கலைத்துறைகளில் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படி யாக உயர்வடைந்து சென்றமையானது அவரது நிர்வாகத் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் 1989ஆம் ஆண்டில் ஆசி ரியத்துவத்தை விரும்பியேற்று 33 ஆண்டுகள் கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை மாவட்டங்களில் நல்லாசிரியராக வலம் வந்தவர். தான் கற்ற புவியியற்கல்வியை சிறப்போடு மாணவர்களுக்கு கற்பித்து பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிசமைத்தவர். அத்துடன் இயல்பாகவே நிர்வாகத்திறமையை வளர்த்துக் கொண்டதன் பயனாக யாழ்.இந்து மகளிர் கல்லூரியை சரியான பாதையில் கொண்டு சென்ற படகோட்டியாக நான் பார்க்கின்றேன்.

பெற்றோர், மாணவர்கள், மற்றும் உயர் நிர்வாகிகளுடன் புன்னகையுடன் கூடிய சாந்தமான பண்புகளுடன் பயணித்ததன் விளைவாக கல்லூரி நிர்வாகத்தை செவ்வனே செயற்படுத்தி கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்தில் எனது மாணவர்களாகவிருந்த அதிபர் மிமலாதேவியும் அவரது கணவர் விமலநாதன் அவர்களும் கல்வி வளர்ச்சி மற்றும் கல்வி நிர்வாகத்தில் உயர் நிலையிலிருந்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஆற்றிய பணியையிட்டு நான் அக மகிழ்வு கொள்கின்றேன். அவர்களது ஓய்வு காலம் ஒளிமயமாகவிருக்க கல்லூரிச் சமூகத்தை அருள்பாலித்துக் கொண்டிருக்கும் நடுத்தோட்ட விநாயகர் என்றும் அருள்பாலிப்பார். அத்துடன் அவர்களது கல்விப்புலமை தொடர்ந்து கல்விச் சமூகத்திற்கு கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர். கா. குகபாலன்,**
ஓய்வு நிலைப் பேராசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அதிபராகக் கடமையாற்றி மணி விழா காணும் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களது மணிவிழாவினையொட்டி அவரது சேவைகளைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ் மாவட்டத்தில் சிறந்ததோர் மகளிர் பாடசாலையாகத் திகழும் யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வளர்ச்சியில் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியவை.

இப்பாடசாலை ஏறத்தாழ 2000 மாணவிகளைத் தன்னகத்தே கொண்டதாக சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் மாகாணப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கு கின்றது. இப்பாடசாலை மாணவிகள் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறப்பான சாதனைகளை தொடர்ந்தும் வெளிக்காட்டி வருகின்றனர்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தினது செயற்பாடுகளுக்கு பாடசாலையில் இடவசதிகளை வழங்கியதோடு திணைக்கள நிகழ்வுகளை சிறப்பாக நடத்துவதற்கு இவர் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கியுள்ளார். இவர் தனது சேவைக்காலத்தில் கல்வித் துறைக்கு ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவர் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

**திரு. செ. உதயகுமார்,**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் முதன்மையான பெண்கள் பாடசாலையாகிய இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களின் கல்விப் புலத்தில் 33 ஆண்டுகள் பணியாற்றிய சேவைத் திருப்தியுடன் மணிவிழாக்காணுவது பெருமைக் குரியது!

கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் பாடசாலைகளை நிர்வகித்தல் என்பது மிக முக்கியமானதும் கடினமானதுமான பணி. கல்வி நிர்வாகத்தைப் புரிந்துகொள்வதற்கு அல்லது கற்பதற்கு விரும்பும் ஒருவர், அவர் எத்தனை பட்டங்களைப் பெற்றிருந்தாலும், அனுபவ ரீதியாக, கட்டாயமாக வகித்துப்பார்க்க வேண்டிய பதவி அதிபர் பதவி. கல்வி நிர்வாக மட்டத்தில் அதிகளவான ஆளுமைப்பண்புகள் அவசியம் தேவைப்படுகின்ற பதவி. பொதுவாகவே இத் தலைமைத்துவப் பதவியை வெற்றிகரமாக வகிப்பவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

சமகாலத்தில் பாடசாலைகளின் வெளியீடு என்பது மிகப்பரந்துபட்ட கூறுகளை வேண்டிநிற்கும் நிலையில், பாடசாலைத் தலைமையின் செயற்பாடுகளும் அவ்வாறே திட்டமிடப்பட வேண்டியவையாக உள்ளன. இருப்பினும், பல கனதியான பாடசாலைகளில் அதிபர்கள் பல சவால்களை எதிர்நோக்கி, ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய சூழ்நிலைகள் உள்ளன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெற்றோர்கள், பல்லாயிரத்துக்கும் மேற்பட்ட பழைய மாணவர்கள், சமூக நிறுவனங்கள், மற்றும் மத்திய கல்வி அமைச்சிலிருந்து கீழ்நிலை வரையிலான அதிகார நிலை, அயலில் போட்டிபோட்டு முன்னேறும் பாடசாலைகள் என ஆயிரக்கணக்கானோரின் பார்வை ஒன்றுகுவிக்கப்படும் கல்விக் கேந்திரமாகப் பாடசாலைகள் உள்ளன. இந்நிலையில், "அதிபர் தலைமையிலான ஆசிரியர் குழாம்" இவற்றைச் சாதகமாகக் கையாண்டு தனது இலட்சியத்தை அடையவேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில், யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் 10 ஆண்டுகள் தனது கனதியான தலைமைத்துவத்தை வழங்கிப் பணியாற்றியுள்ள திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களைப் பாராட்டுகிறேன். இவரது புலமை, கல்வி நிர்வாக அனுபவம், விடயங்களைக் கையாளும் திறன், ஆசிரியர்களுடனான ஒன்றிப்பு என்பன கல்லூரியின் வளர்ச்சியில் சிறந்த பங்களிப்பினை வழங்கியுள்ளன. பாடசாலையின் தரத்தினைத் தக்க வைப்பதில் இவர் தலைமையிலான ஆசிரியர் குழாம் சிறந்த பணியை ஆற்றி வருகிறது என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

உங்கள் எதிர்காலம் உங்கள் குடும்பத்தினருடன் சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

**திரு.செல்வரட்ணம் சந்திரராஜா**
முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண வலயம்.
(18.04.2019 - 13.03.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா வாழ்த்துச் செய்தி

மணிவிழா காணும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வெவ்வேறு மாவட்டங்களிலும், பிரபல பாடசாலைகளிலும் பணிபுரிந்து பெற்றுக் கொண்ட அனுபவத்தை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் திறமையாக வெளிப்படுத்திய பெருமைக்குரியவர். தொடர்ச்சியாக 10 வருடங்களாக பிரபல பாடசாலையொன்றின் அதிபராக இருந்தது மிகுந்த சவாலுக்குரியது. தனது ஆளுமையாலும், வசீகரத்தாலும் அச் சவால்களை வென்று தனக்கென ஒரு தனித்துவமான இடத்தை நிலைநிறுத்தியவர்.

மாணவர்களின் அன்பையும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பையும் பெற்று பாடசாலையை திறம்பட முகாமை செய்து வருகின்றார். அவரது காலத்தில் பரீட்சைப் பெறுபேறுகளும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளும் வளர்ச்சியடைந்து உயர்நிலையை அடைந்துள்ளன. அதற்காக ஆசிரியர்களை சிறப்பாக நெறிப்படுத்தி தனது இடையறாத முயற்சியினால் தன் இலட்சியத்தில் வெற்றியடைந்துள்ளார்.

அவரது காலத்தில் பௌதீகவள அபிவிருத்தி துரிதமாக இடம்பெற்றது. மிகுந்த சுறு சுறுப்புடன் செயற்படும் அவர் தனது பணியில் கண்ணும் கருத்துமாக இருந்து பாடசாலையை வெற்றிகரமாக முன்னகர்த்திச் சென்றவர். தனது நிறுவனத்தின் ஒவ்வொரு அலகையும் ஒழுங்கமைப்பதிலும், ஆளணியினரை முகாமை செய்வதிலும் விசேட ஆற்றலைப் பெற்றி ருந்தார். கல்வித் திணைக்களத்துடன் சிறந்த தொடர்பாடலைப்பேணி தனது பாடசாலைக் கருமங்களை செவ்வனே நிறைவேற்றியவர். சக அதிபர்கள் மற்றும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தவர்களுடன் நல்லுறவைப் பேணி வந்தவர்.

தனது அர்ப்பணிப்பான சேவையை மேலும் தொடரவேண்டும் என வாழ்த்துகின்றேன். பாடசாலைத் தலைமையாக மட்டுமன்றி நல்ல குடும்பத்தலைவியாகவும் விளங்கும் அவர் தமது குடும்பத்தினருடன் மகிழ்வுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. ந. தெய்வேந்திரராஜா,**
முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

தாய்மொழிப்பற்று, சமயப்பற்று, அறிவியல் மேம்பாடு, கலை கலாசாரப் பண்பாடு களை பேணிக் காத்தல் போன்ற பல்வியாபகப் பாங்கான பரிமாணங்களினூடாக சிறந்த மனிதவளத் தெகுதியினரை நாட்டுக்கு கையளிப்பதில் பாடசாலைகள் வரலாற்று ரீதியாக காத்திரமான பங்களிப்புக்களை நல்கி வருகின்றன. இந்த வகையில் பெண்கள் கல்வி பயில வேண்டும் என்ற விழிப்புணர்வு சமூக மட்டத்தில் தோற்றம் பெற்ற பொழுது அதன் செயல் வடிவமாக கலவன் பாடசாலைக்கு மேலதிகமாக பெண்களுக்கான பிரத்தியேக பாடசாலை கள் தோற்றம் பெற்றன. வடபகுதியில் தோற்றம் பெற்ற விரல் விட்டு எண்ணக்கூடிய பெண் கள் பாடசாலைகளில் ஒன்றாக யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விளங்குகின்றது. யாழ் மாவட்டத்தின் சகல பிரதேசங்களையும் சேர்ந்த மாணவிகள் ஒன்று கூடுகின்ற பெரும் கல்விக் கூடமாக விளங்குகின்ற இக்கல்விச்சாலையில் ஏறக்குறைய கடந்த பத்து வருட காலமாக அதிக பதவியின் ஊடாக சிறந்த தலைமைத்துவ பண்புகளை நல்கி சாதனைகள் பல படைத்து இளைப்பாறி செல்கின்ற திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களை பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்வேறுபட்ட சமூகப் பின்னணிகளிலிருந்து பல்வேறுபட்ட குடும்ப சூழ்நிலைக ளிலிருந்து பல்வகைப்பட்ட உளப்பாங்குகளுடன் சமுகமளிக்கின்ற ஆயிரக்கணக்கான மாணவர்களையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து முகாமைப் படுத்தி கல்வி இலக்குகளை அடையச்செய்தல் பெரும் சவாலுக்குரிய விடயமாகும். உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்குகின்ற ஏனைய நிறுவனங்களை போலன்றி கால ஓட்டத்திற் கேற்ப பொருத்தமான அறிவுத்தொகுதியை கையளித்து உடல் உள ரீதியான முன்னேற் றத்தை ஏற்படுத்துகின்ற மகோன்னதமான பணியினை பாடசாலைகள் ஆற்றி வருகின்றன. நாளாந்தம் ஏற்படுகின்ற நெருக்கடிகள் சவால்களை பொறுமை எனும் ஆயுதத்தை கடைப் பிடித்து சிறப்பான தலைமைத்துவத்தினை இவர் வழங்கியபடியினால் நீண்டகாலமாக தொய்வு நிலையில் இருந்த தேசிய பரீட்சை பெறுபேறுகள் முன்னேற்றமடைந்தமை மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய மட்ட, மாகாண மட்ட, வலய மட்ட சாதனைகள் பல நிகழ்ந்தேறியமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை, விடாமுயற்சி தீர்க்கதரிசன பார்வையுடன் சிறப்பான தீர்மானங்களை உவப்பாக மேற்கொண்டு கல்வியாளர்களின் பார்வையினை தனது பாடசாலையை நோக்கி திசை திருப்பும் வகையில் கனதியான முகாமைத்துவ பண்புக் கோலங்களை வெளிப்படுத்தி அகவை அறுபதில் இளைப்பாறிச் செல்கின்ற அதிபர் அவர்களை நெஞ்சாரப் பாராட்டி இனிய மணிவிழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் நீண்ட ஆயுளுடன் சுகதேகியாக வாழ எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**திரு.சு.சுந்தரசிவம்**
முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் கல்விவலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துகிறேன் வாழ்க!

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகம் மிக மலர்கின்றேன். இன் முகமும் இனிய சொல்லும் இறைவன் உங்களிற்கு தந்த கொடை. மாணவர், பெற்றோர், ஆசிரியர் பெரு மதிப்பை உணர்ந்ததினால் அவர்களிற்கு எப்போதும் தாங்கள் மதிப்பளித்து, இன் முகத்துடன் அன்பாகப் பழகி நட்பு நலம் சார்ந்து இலக்கை நோக்கி வேகமாகப் பயணித்தீர்கள்.

பலநூறு மாணவர்களை கல்வி அறிவும், தொழில் அறிவும், ஒழுக்கம் பழக்கம் பற்றிய உயர் அறிவும் கொண்டவர்களாக சமூகத்திற்கு வழங்கினீர்கள். "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்கின்றார் கணியன் பூங்குன்றனார். நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக் கும் சமனான இறைநீதி எமக்குக் கிடைத்துவிடும். எனவே உன்னத பணியாற்றிய நீங்க ளும் உங்கள் அன்புக் குடும்பமும் உயர்வடைய வாழ்த்துகின்றேன்.

"வெள்ளத் தணைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் துணையது யர்வே".

வாழ்க வளமுடன்

**திருமதி.அருளேஸ்வரி வேதநாயகம்,**
ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுமைமிக்க அதிபருக்கு மணிவிழா வாழ்த்துக்கள்



வடபுலத்தின் கல்விக்கண்ணாகிய யாழ்ப்பாணத்தின் தனித்துவ அடையாளங்களில் ஒன்றாக திகழும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் சிறப்புமிக்க அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அம்மணி அவர்கள் தனது அறுபதாவது அகவையினை அடைந்து மணி விழா காணுகின்றார். ஆளுமைமிக்க பெண்ணாக சிறப்பாக செயற்பட்ட அம்மணிக்கு எமது மணிவிழா வாழ்த்துக்கள்.

1989 ஆம் ஆண்டு புவியியல் சிறப்புப் பட்டதாரியாக ஆசிரிய சேவையில் இணைந்து கிளிநொச்சி வட்டக்கச்சியில் தொடங்கிய இவரது கல்விப்பணி வவுனியா, திருகோணமலை என விரிந்து தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் அதிபர் பணியை ஆரம்பித்து யாழ்ப்பாண வலயத்தில் இந்து மகளிர் கல்லூரியில் முப்பத்து மூன்று அகவையை தொட்டிருக்கின்றது.

கல்விப் பணியில் 33 வருடங்கள் என்பது சாதாரணமல்ல அதுவும் கடந்து வந்த காலம் கண்ணீரும் செந்நீரும் நிறைந்த கற்பனைக்கெட்டாத துயரம் நிறைந்த யுத்த காலம் செய்த பணியின் சீரிய தன்மை பற்றி இன்றைய தலைமுறையினருக்கு தெரிய வாய்ப்பில்லை, விருப்பமும் இல்லை. ஆனால் "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்ற கீதோபசேசம் இதற்குத்தான் போலும்.

கடந்த 10 ஆண்டு காலமாக யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்து பாடசாலையின் பண்புத்திறனை, கல்வியடைவை, பௌதிக வளத்தை என செயற்றிறன் மிக்க வகையில் நல்மாற்றங்களை ஏற்படுத்திய ஒருவர். இன்று தேசிய பாடசாலையாக பரிணமிக்கும் வகையில் இம்மாற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பது முக்கியமானது. மணிவிழாக்காணும் திருமதி. மிமலாதேவியும் இவரது கணவர் விமலநாதன் அவர்களும் யாழ்.பல்கலைக்கழக புவியியல் குழுமத்தை சேர்ந்தவர்கள் என்பது எனக்கு பெருமை மிக்கதாகின்றது.

ஒய்வுக்குப் பின்னரான வாழ்வு மகிழ்ச்சியாகவும் நலமாகவும் இருக்க எமது வாழ்த்துக்கள். வாழ்க பல்லாண்டு.

**திரு.முத்து இராதாகிருஷ்ணன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துச் செய்தி



கிளி - வட்டக்கச்சி மத்திய கல்லூரியில் 1989ஆம் ஆண்டு அளவில் தன் சேவையை ஆரம்பித்து வவுனியா இறம்பைக்குளம் வரை ஆசிரியப்பணியை ஆற்றி தி/உவர்மலை விவேகானந்த வித்தியாலயம் வரை விஸ்தரித்து யாழ்ப்பாணத்திலும் பல பாடசாலை களில் தன் சேவையை மேற்கொண்டு இறுதியாக யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகளில் ஒன்றான இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் ஸ்தானத்தை அலங்கரித்து இன்று மணி விழாக் காணும் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களின் சேவை நயப்பில் வாழ்த் தும் வாய்ப்புக் கிடைத்தமையை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

புள்ளி விபரங்களின் படி பார்த்தால் கல்விப் பொது சாதாரணதர மற்றும் உயர் தரப் பெறுபேறுகளில் கல்லூரியை உச்ச நிலைக்கு இட்டுச் சென்றுள்ளமை போற்று தற் குரியது. வருடாவருடம் மருத்துவ மற்றும் பொறியியல் துறைகளுக்கு பல்கலைக்கழக ஏனைய பீடங்களுக்கு, கல்வியியற் கல்லூரிகளுக்கு இந்து மகளிர் கல்லூரியின் பிள்ளைகள் செல்வதற்குரிய முறையில் கல்விச் சமூகம் என்னும் நிர்வாக இயந்திரத்தை முடுக்கி விட்டுச் செயற்படுத்தியுள்ளார். அதுமட்டுமன்றி முன்னரே இருந்த தேசிய பாடசாலை களுக்குப் போட்டிமிகு அச்சுறுத்தல் இவரது கல்லூரிப் பயணத்தில் உள்ளமை இக்கல்லூரி யில் இணைய நெருக்குவாரப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை வைத்து கணிப்பிட முடியும்.

கல்வியின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மட்டுமன்றி இணைப்பாடவிதானத் தின் முழுப்பாகங்களுக்கும் அதாவது தமிழ்த்தினப் போட்டியாகட்டும், விஞ்ஞான கணித போட்டியாகட்டும் விளையாட்டு மெய்வல்லுனர் போட்டியாகட்டும் எல்லாவற்றிலும் எமது பிள்ளைகள் முத்திரை பதிக்க ஆவன செய்துள்ள ஓர் சேவையாளர். அந்தந்த வருடங்க ளில் அந்தந்த பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து வாய்ப்பு வசதிகளையும் வழங்கி அல்லது பெற்றுக் கொடுத்து கல்லூரியின் ஸ்தானத்தை முன்நோக்கி நகர்த்திச் சென்றுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் அவர் முகம் சுழிக்காமல் மலர்ந்த முகத்துடன் தன் கீழ் பணிபுரிபவர் அனைவரையும் அரவணைத்துச் செல்வது மட்டுமன்றி வலய, கோட்ட, மாகாண, தேசிய மட்ட நிர்வாகத்தினரின் அனுசரணைகளை உரிய முறையில் பெற்று சேவையாற்றிய தந்திரோபாய நிர்வாகி என்று குறிப்பிடுவதில் தவறேதும் இல்லை. அறிவை உரிய முறையில் பயன்படுத்திய இச்சேவையாளர் தன் எதிர்கால வாழ்வில் குடும்பத்தினருடன் ஆரோக்கியத்துடனும் சுபீட்சத்துடனும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இறைவன் ஆசிகளை வேண்டி நிற்கின்றேன்.

"அறிவு அற்றம் காக்கும் கருவி - செறுவார்க்கு
முன்னழிக்க வாகா வரண்"

**திரு.த. இராஜலிங்கம்.**
ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
ஆரம்பப்பிரிவு,
வட மாகாண கல்வித்திணைக்களம்,
வட மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

# முகமலர்ச்சியுடன் கூடிய நட்புரீதியான முகாமைத்துவநுட்பங்களை பயன்படுத்திய அதிபர்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் மதிப்பார்ந்த அதிபர் திருமதி. மிமலா தேவி விமலநாதன் அவர்கள் 31-12-2022 இல் அரச பணியில் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையொட்டி கல்லூரியில் இருந்து வெளியிடப்படும் பாராட்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

2013 - 2016 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாண கல்வி வலய கல்விச் செயற்பாடு களில் எங்களோடு இணைந்து பணியாற்றிய அதிபர்களில் முதன்மையானவர். வலய, கோட்ட, மாகாண, தேசிய மட்ட போட்டிகளின் போது இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் பல சாதனைகளை நிலைநாட்டியமைக்கு பின்புலத்தில் இருந்து ஆசிரியர்களுக்கும் மாண வர்களுக்கும் உந்து சக்தியை வழங்கியவர். தமிழ் சமூக பெண் பிள்ளைகளின் பல்துறை ஆற்றல்களை வளர்த்தெடுப்பதில் உன்னதமான பங்கினை வழங்கியதை கல்விச் சமூகம் நினைவில்கொள்ளும்.

கல்லூரியில் ஒரு புன்சிரிப்புடன் காட்டிய நட்புரீதியான முகாமைத்துவ நுட்பங் களைப் பயன்படுத்தி கல்லூரி ஆசிரியர்களையும், கல்லூரிச் சமூகத்தையும் வழிநடத்தி யதை காணக்கூடியதாக இருந்தது. எவருடனும் முரண்படாது சூழலுக்கு ஏற்ற வகையில் இசைவாக்கமடைந்து கல்லூரியை நிருவகித்து வந்தவர்.

சமூக உறவுகளை பேணுவதிலும், சமூகத்தின் நன்மை தீமைகளில் கலந்து சமூக ஊடாட்டம் மிக்க அதிபராக விளங்கியவர். கல்லூரியின் அதிபர் பதவியென்பது இலகுவான விடயமல்ல. பல்வேறு சவால்கள், நெருக்கடிகள், பல்துறையாளர்களுடனான செயற்பாடுகள், முரண்பாடுகள் இத்தனைக்குள்ளும் இவர் தனது பணியை நிறைவு செய்வது பாராட்டிற் குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பிரதேசத்தில் பாடசாலைக்கு அதிபர்களை தேடுவதில் இன்று பல சவால்கள் ஏற்பட்டுள்ளது. செயற்பாட்டு அனுபவம் வாய்ந்த அதிபர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுவது கல்வி உலகில் பாரிய இடைவெளிகளை ஏற்படுத்தி வருகிறது. இது மாணவர்களின் கல்வி யில் நீண்டகாலத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவரும்.

அரச பணி என்பது பல வரையறைகளுக்கு உடபட்டதே. ஓய்வு எப்போது ஒரு நாள் அரச பணியாளர்களுக்கு வந்தே தீரும். ஆனாலும் மாணவர்களுக்கும், சமூகத்திற்கும் அர்பணிப்போடு சேவை பெற்றவர்கள் என்றும் மனதில் நிலைத்திருப்பர்.

இவரது ஓய்வு காலம் சிறக்கவும், குடும்பத்தினரோடு மகிழ்ச்சியாக, நிறைவாக வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.பொன்னம்பலம் அருணகிரிநாதன்,**
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்பாண கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரியின் வரலாற்று நாயகி

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் தலை சிறந்த மகளிர் கல்லூரியாக மிளிர்வது இந்து மகளிர் கல்லூரியாகும். இக்கல்லூரி உயர்ந்த இலட்சிய எண்ணக்கருவுடன் தமிழையும் பண்பாட்டையும் இந்து கலாசாரத்தையும் மாணவிகளின் தனித்துவமான ஒழுக்க விழுமி யங்களையும் பேணி பாதுகாத்து வருகின்றது. இவ் இலட்சிய எண்ணக்கருவிற்கு வடிவம் கொடுப்பவர்களாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் விளங்குகின்றனர். இக் கல்லூரியில் ஒரு தசாப்த காலம் வினைத்திறனுடன் செயலாற்றி ஓய்வு பெற்று இருக்கும் திருமதி. மிமலாதேவி விமலநாதன் பல வகைகளில் சரித்திர நாயகியாக விளங்குகின்றார்.

இக்கல்லூரி அமைதியான இயற்கை சூழலில் சிறப்பாக இயங்குகின்றது. இக் கல்லூ ரியை வழிநடாத்திய அதிபர்கள் பலரும் சிறப்பான பங்களிப்பை வழங்கியதை நான் அறிவேன். திருமதி. மி. விமலநாதன் காலத்தில் நாட்டுச் சூழல் அமைதியாக இருந்தது. இதனால் இக் கல்லூரி பல சாதனைகளைப் பெற்றுள்ளது. இவருடைய காலத்தில் மாணவிகளின் சேர்வு வீதம் மிக உயர்வாக அதிகரித்து 2000ஐ தாண்டியது. மாணவிகள் அனுமதிக்கு போட்டிக் குரிய கல்லூரியாக மாறியது. தேசிய மாகாண ரீதியாக மேற்கொள்ளப்படும் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையால் ஆற்றலும் அனுபவமுள்ள ஆளுமையும் நிறைந்த வினைத் திறன் மிக்க ஆசிரியர்களை இயல்பாகவே ஈர்க்கச் செய்துள்ளது. அண்மைய ஆண்டுகளில் மாணவர் சார்பான எதிர் மறைவான எண்ணங்களும் மனித உரிமை அமைப்புக்களின் கடினமான செயற்பாடுகளும் ஆசிரியர்கள் சுதந்திரமாக செயல்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இக்கல்லூரி மாணவிகள் விதிவிலக்காக இருப்பதனால் ஆசிரியர்கள் போட்டி போட்டு இடமாற்றம் பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. அதன் பின்புலமே அதிபரின் சாதனைகளுக்கு மறைமுகமாக அமைந்துள்ளது.

கல்லூரியின் பரீட்சை பெறுபேறுகள் அண்மைய ஆண்டுகளில் சிறப்பான அடைவு மட்டத்தை பதிவு செய்துள்ளது. க.பொ.த சாதாரண சித்திப் பெறுபேறு 90% ஐ தாண்டியுள்ளது. க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவோர் 60%மாக அதிகரித்துள்ளது. இவ் அனுமதியில் 50% கணித, விஞ்ஞான பிரிவை சார்ந்தவர்கள். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்லூரியில் பெறுபேற்றில் மிகப்பெரிய மாற்றமாக கருத முடியும். பல மாணவர்கள் மருத்துவ, பொறியியல் பீடங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்றனர். 2021 இல் இக்கல்லூரி யின் வரலாற்றில் 12 மாணவர்கள் 3A பெற்று சாதனை படைத்தனர். இச்சாதனைகளுக்கு அதிபரின் முகாமைத்துவ நுட்ப திறன்களே காரணமெனலாம்.

இணைப்பாட விதான செயற்பாடுகளில் தேசிய மட்டம் வரை சென்று ஆண்டு தோறும் தங்க வேட்டையாடும் கல்லூரியாகவும் மிளிர்கின்றது. தமிழ்த்தின போட்டிகளில் நடனம், நாட்டிய நாடகம், இலக்கணப் போட்டி போன்ற தேசிய மட்டப் போட்டிகளில் தங்கம் வென்றுள்ளதுடன் நாட்டிய நாடகத்தில் வடமாகாணத்தில் புதிய உத்திகளையும் நுட்பங்க ளையும் முதன்முதலில் புகுத்தி மிகுந்த வரவேற்பைப் பெற்ற பெருமை இக்கல்லூரியையே சாரும். விளையாட்டுத் துறையில் உள்ளக விளையாட்டுக்களில் மாகாணம், தேசியம் வரை பல மாணவிகள் சாதனை நிகழ்த்தியுள்ளனர். இவர்களை சரியான முறையில் வழிப் படுத்தி நெறிப்படுத்திய பெருமை கல்லூரி முதல்வரையே சாரும். இவர் பழைய மாணவி களின் அனுசரனையோடு கல்வி அமைச்சின் துணை மூலமும் பல மாடிக் கட்டடங்களை யும் கட்டி மாணவர்களின் வகுப்றை பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளதுடன் வகுப் பறைக் கவின் நிலை புதிய கற்பித்தல் சாதனங்களின் ஊடாக கற்றல் கற்பித்தலை இலகு படுத்தி பயனுறுதி வாய்ந்த கற்பித்தல் செயற்பாட்டிற்கு உந்து சக்தியாக இருந்துள்ளதுடன் பாடசாலையின் எழிலுறு கவிநிலைக்கு காரண கர்த்தாவாகவும் இருந்துள்ளார்.

இவரது செயற்பாட்டிற்கு மகுடம் சூட்டுவது போல் கல்வி அமைச்சினால் ஆண்டு தோறும் வழங்கப்படும் "குரு பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை இவரது சேவைக்கு கிடைத்த அங்கீகாரமாகும். பெருமைக்குரிய அம்மணி சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் நீண்ட ஆயுளுடன் நீடூழி வாழ்ந்து சமூகத்திற்கு சேவையாற்ற எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றேன்.

**அ.அகிலதாஸ்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
(ஓய்வுநிலை)
யாழ்ப்பாண கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிவிழா வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் பேரொளியென மிளிர்கின்ற கல்வியைப் பெண்களும் கசடறக் கற்க வேண்டும் எனும் உன்னத நோக்குடன் முகிழ்ந்தெழுந்து இன்று புகழ் பூத்த கல்லூரியாக விளங்கும் யா/ இந்து மகளிர் கல்லூரியில் ஆளுமை மிக்க அதிபராக அரும்பணியாற்றி அகவை அறுபது நிறைவில் பணிநயப்பு பெறும் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களது அளப்பரிய சேவைகளை மீட்டுப் பார்ப்பதில் பெருமையடைகின்றேன்.

இப்பாடசாலை இன்று வானளவு பெருவிருட்சமாக வளர வழிகோலிய பெருமை அதிபர் அவர்களது அரும்பணிக்குச் சான்றாக அமையும். அந்த வகையில் நவீன விஞ்ஞான ஆய்வு கூடம், US AID நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வகுப்பறை மாடிக் கட்டிடத் தொகுதி, பழைய மாணவிகளால் அமைக்கப்பட்ட வகுப்பறை மாடிக் கட்டிடத் தொகுதி, பிரதான மண்டபத்தை நவீனமயமாக்கல் என்ற வகையில் பௌதீக வளப்பெறுகையில் பாரிய பணி யாற்றியுள்ளார்.

மேலும் கல்வித்தர அபிவிருத்தி என்ற வகையில் க.பொ.த(சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பெறுபேறுகளை வளர்ச்சிப் போக்கில் திசைகோட்படுத்தி அதன் பேறாக யா/ இந்து மகளிர் கல்லூரிக்குத் தேசிய பாடசாலை அல்லது முதன்மைப் பாடசாலை எனும் மகுடம் சூடவைத்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

வடபுலப் பாடசாலைகளில் யா/ இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உயரிய ஒழுக்கம், விழுமியப்பண்புகள், தலைமைத்துவம் போன்றவற்றைப் போதித்து சமூகம் எதிர்பார்க்கும் நற்பிரஜைகளை உருவாக்கும் சாதனைப் பாடசாலை எனும் தரச்சிறப்பைப் பெற வழித்தடம் அமைத்த அதிபர் அவர்கள் சிறப்பிடம் பெறுகின்றார். அந்த வகையில் என்றும் புன்னகையுடன் கூடிய இனிய சுபாவத்துடன் அனைவரையும் ஒன்றிணைத்து பாடசாலையின் கீர்த்தியை மிளிரச் செய்த அதிபர் அவர்களது பணி நிறைவுக் காலமானது குடும்பத்துடன் குதூகலமாக அமைய கல்லூரியில் எல்லாம் வல்ல காவல் தெய்வமாக அமர்ந்துள்ள கணபதி துணை புரியட்டும்.

**திரு. S. இரவீந்திரநாதன்,**
ஓய்வுநிலை, பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்.கல்வி வலயம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதற் பெண்மணி அதிபர் மிமலாதேவி அவர்கள்

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அதிபர் அவர்களின் கல்விப்பணி 33 ஆண்டுகளை கடந்து மிகச்சிறந்த அனுபவ முதிர்ச்சியுடன் பெண் அதிபர்களுக்கு எல்லாம் உதாரண நிர்வாகியாக ஓய்வுபெறுவது எல்லோருக்கும் கிடைக்காத பேறாகும்.

இவரிடம் பலரும் கண்ட சிறப்பு பல்பரிமாண ஆளுமையாகும்.பல்வேறு நாடுகளின் பெண் நிர்வாகிகளுடன் ஒப்பிட்டுப் பேசக்கூடியவர்.

**சிறந்த கற்பித்தல் நுட்பம் கொண்ட ஆசிரியர்**

ஆசிரியராக பணியாற்றிய இடங்களில் எல்லாம் மாணவர்களால் பெரிதும் விரும்பப் பட்ட ஆசிரியர்களில் ஒருவராக இவர் திகழ்ந்ததை எவரும் மறக்க மாட்டார்கள். இவர் கற்பித்த பாடத்தில் மாணவர்கள் உயர் பெறுபேறுகளை பெற்று பல்கலைக்கழகம் சென்றதுடன் கல்விகற்ற மாணவர்களில் அனேகர் உயர் ஒழுக்க விழுமியம் கொண்டவர்களாக ஆக்குவதில் வெற்றி கண்ட ஆசிரியர்.

**மற்றவர் மனங்களை புண்பட வைக்காத நிர்வாகி**

ஆசிரியராக கடமையாற்றிய காலத்திலும் சரி அதிபராக நிர்வாக கடமைகளை ஆற்றிய காலத்திலும் எவர் மனங்களையும் புண்படுத்தாத மொழிப்பிரயோகத்தில் அனைவர் உள்ளங்களையும் வென்று தான் பாடசாலையில் எதைச் செய்ய வேண்டும் என்று நினைத்து அதைச் சாதித்துக்காட்டிய முதற்தர அதிபர் என்றதனாலேயே முதற் பெண் மணி என விளித்தேன்.

**அதிஷ்டம் நிறைந்த அதிபர்**

திருமண வாழ்க்கையில் முதல் அதிஷ்டம் இவருக்கு கிடைத்தது 16 செல்வங்களும் நிறையப்பெற்ற கணவர் மற்றும் பிள்ளை. அதிபர் கடமையேற்ற ஒவ்வொரு பாடசாலையும் இவரது காலத்தில் அபிவிருத்தி மற்றும் கல்வி உயர்வைக்கண்டது எவரும் மறக்க முடியாது. சிறப்பாக இந்து மகளிர் கல்லூரிக்கு இவர் அதிபராக கிடைத்தது பாடசாலை பெற்ற உயர் பாக்கியம் என்றே கருதுவேன் . காரணங்கள் பல அவற்றில் சில ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடசாலையின் பழைய மாணவர் சங்க கட்டமைப்பை வலுப்படுத்தியவர்*

உள்நாட்டு வெளிநாட்டு பழைய மாணவர் சங்கங்களுடன் நம்பிக்கை தரும் தொடர்புகளை பேணியதனால் பல்வேறு உதவிகளை பாடசாலை அபிவிருத்திக்காக இவர்காலத்தில் பெறப்பட்டது முதல் அதிஷ்டம் .

*புதிய பல பல வகுப்பறை கட்டடங்கள்*

இவரது காலடி பாடசாலையில் பட்டதும் பாடசாலை அழகுக்கோலமாக மாறிய அதிஷ்டம் மறக்க முடியாது. கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் அயராத முயற்சியினால் முன்னாள் ஜனாதிபதி மேதகு மகிந்த ராஜபக்ச அவர்கள் பாடசாலைக்கு அழைக்கப் பட்டார். அதற்கு முன்னாயத்தமாக பாடசாலையின் முன்பக்க கிடங்குகள் பல மில்லியன் செலவில் நிரப்பப்பட்டு தார் போடப்பட்டது . சகல கட்டடங்களும் வர்ணம் பூசப்பட்டது . புதிய பல கட்டடங்கள் உருவாக்கப்பட்டு பாடசாலை அழகுவர்ணமாக்கப்பட்டது. அது மாத்திர மல்ல விசாலாட்சி மண்டபம் அரசின் பல மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் புதுப் பொலிவு பெறச் செய்யப்பட்டது.

வடமாகாணத்தின் மகளிர் பாடசாலை அதிபர்களுள் முதல் தரத்தில் வைத்து எண்ணப்பட்ட அதிபர் அவர்கள் தன் தலைமைத் துவத்தில் எவ்வாறு முதல் தரமாக இருந் தாரோ அதேவண்ணம் தனது அலுவலகத்தையும் மாணவர் வகுப்பறைகளையும் புதுப் பொலிவுறச்செய்தது பாடசாலைக்கு பல அதிஷ்டங்கள் கிடைக்க வழி கோலியது.

*மாணவர்களது போட்டி பெறுபேறும், பரீட்சை பெறுபேறும்*

இவரது காலம் இந்து மகளிர் கல்லூரியின் பொற்காலம் என பெற்றோர்கள் பலர் பேசக் கேட்டிருக்கிறேன். இவரது காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்ட போட்டிகள் பலவற்றில் மூக்கில் விரலைவைக்க கூடிய சாதனைகளை ஈட்டி வடமாகாணத்தை தலைநிமிர வைத்த சாதனை அதிபர் திருமதி.மிமலாதேவி விமலநாதன் என்றால் மிகையாகாது. உண்மையில் இவருக்கு நிறைவான விசுவாசத்திற்கு உரியவர்களாக போட்டிகளுக்காக ஆசிரியர்கள் செயற்பட் டமையை எண்ணி அதிபர் பெருமைப்பட்டதை கண்டிருக்கின்றேன்.

பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளில் வரலாற்றுச்சாதனையை தனது காலத்தில் நிலைநாட்டிய பெருமை அதிபர் திருமதி.மிமலாதேவி விமலநாதனையே சாரும். வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலையை எட்டிப்பிடிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என அறிஞர் உலகம் கணக்கிட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அதிபரின் மணிவிழா வந்தி ருப்பது வேதனையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சல் மிக்க ஆசிரியர் ஆளணியின் துணையுடன் இரும்பு பெண்மணியாக நிர்வாக திறமையுடன் ஆளுமைக்கு ஆளுமை இவர் தான் என்று கூறுமளவிற்கு சிறந்த கல்வியறிவும் ஒழுக்கமும் உள்ள மாணவர் பரம்பரையை இந்து மகளிர் கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் உருவாக்கிவிட்டு ஓய்வு பெறும் திருமதி மிமலாதேவி விமல நாதன் அவர்களின் பதவிப்பெயர் இந்து மகளிர் கல்லூரி உள்ளவரை உலகம் பேசும் என்பது உறுதி.

வாழ்க வாழ்க நூற்றாண்டு என மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு. சி. மாணிக்கராசா**
ஓய்வு நிலை பொது நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்.கல்வி வலயம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோட்டக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

### சாதனைப் பெண்ணாகத் தடம் பதித்தவர்

யாழ். இந்து மகளிர் கல்லூரியானது இன்று 2435 மாணவர்களையும் 126 ஆசிரியர்களையும் தன்னகத்தே கொண்டு, யாழ் நகரின் மத்தியில் சீரிய கல்விப் பணியாற்றி வரும் ஒரு தலை சிறந்த பாடசாலையாகும். இதன் அதிபரான திருமதி . மிமலாதேவி விமல நாதன் அவர்கள் 31.12.2022 இல் ஓய்வு பெறுவதையிட்டு வாழ்த்துச்செய்தி வழுங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

21ஆம் நூற்றாண்டிலே நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். இந்நூற்றாண்டில் அறிவுப் பிரவாகம் எடுத்திருக்கிறது. இவ்வறிவுப் பிரவாகத்தில் சவால்களை வெற்றி கொண்டு பயணிப்பதற்கு இளையோரிடம் பல்வேறு திறமைகளை வளர்க்க வேண்டியது அதிபர்களின் கட்டாய பணியாகவுள்ளது. ஓவ்வொரு மாணவர்களிடமும் வேறுபட்ட பல்வேறு திறமைகள் மறைந்திருக்கின்றன. அவற்றை இனங்கண்டு எதிர்கால வேலை உலகை நோக்கி திசைமுகப்படுத்துபவர் இவ்வதிபர்.

இப்பாடசாலை கடந்த 10 ஆண்டுகளாகப் பல சோதனைகளைத் தாண்டி விஞ்ஞான கணிதத்துறை உட்பட க.பொ.த (உ/த) இல் பெருமளவான மாணவர்களைப் பல்கலைக் கழக அனுமதிபெற வைத்துள்ளது. க.பொ.த (சா/த)இல் 9A கள் உட்பட முழு மாண வர்கள் மீதும் கவனம் செலுத்தி உயர் அடைவு மட்டம் பெற வைத்து சாதனைகள் பல நிலை நாட்டியுள்ளது. இணைபாட விதான செயற்பாடுகளில் வருடாவருடம் யாழ் மாவட்டத்துக்கு தங்கப் பதக்கங்கள் பலவற்றைத் தேசிய மட்டத்திலிருந்து பெற்றுக்கொடுத்த அதிபர். பாடசாலையில் எட்டுப் பாட வேளைகளும் நாளாந்தம் நடைபெற வேண்டும் என்பதில் கண்ணும் கருத் துமாக இருப்பவர். கல்வித் தகைமை, அதியுயர் தன்மை, பழக்கவழக்கம், நடத்தை, திறமை ஆகியற்றை அரச, தனியார் தொழில் வழுங்குநர்கள் தொழில் பெறுநர்களிடமி ருந்து எதிர்பார்க்கின்றனர். இவற்றை முறையாக மாணவர்களிடத்தே வளர்த்து யா/இந்து மகளிர் கல்லூரியிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு மாணவர்களையும் வெற்றிகரமான தொழில் உலகை நோக்கி வழிகாட்டும் உன்னத அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமுகாமைத்துவம், மனிதநேயப்பண்பு, கோபத்தைவென்றமை, இயற்கையோடும் இறைவனோடும் சேர்ந்து இணைந்து வாழுதல், குழுவாகச் சேர்ந்து வினையாற்றல், கடின உழைப்பு, ஆரோக்கியமான உடல்நலம், நல்லவற்றில் ஆர்வம் காட்டுதல், நல்ல நண்பர்களைத் தேடிக்கொள்ளல், இனிமையாகப் பேசுதல், நல்ல தலைவராகச் செயற்படல், மிகுந்த சகிப்புத் தன்மை உட்பட நற்பண்புகளைப் பாடசாலையில் நிலைநிறுத்தி மாணவச் செல்வங்களை அரவணைத்து நன்னிலைப்படுத்திய பெருந்தகை. ஓய்வு காலத்தில் எல்லா நலன்களும் பெற்று மன அமைதியோடு நோய்நொடியின்றி குடும்பத்தாருடன் நூற்றாண்டு காலம் ஆனந்தமாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.நா.சிவநேசன்**
கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
கோட்டக்கல்விஅலுவலகம்,
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிவிழா நாயகிக்கு
## கிளிநொச்சி ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளரின்
## வாழ்த்துரை

அரச சேவையிலிருந்து 31.12.2022 தினம் ஓய்வுபெறும் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களுக்கான மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி பெரிதும் மனம் மகிழ்வடைகிறேன்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சி மத்திய கல்லூரியில் தனது ஆசிரிய பணியை 1989ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து 8 வருடங்கள் இப்பள்ளியிலே மிகவும் அர்ப்பணிப் புடன் தனது சேவைகளை ஆற்றினார்.

மணிவிழா நாயகியும் அவரின் கணவனும் வட்டக்கச்சி ம.வி இன் ஆசிரியர் விடுதி யில் தங்கியிருந்து கற்பித்த காலங்கள் அவர்களுக்குரிய பொற்காலம் எனலாம். அக் காலங்களில் நானும் வட்டக்கச்சியில் எனது குடும்பத்தவர்களுடன் வசித்த காரணத்தாலும் நானும் ஆசிரியபணியை மேற்கொண்ட காரணத்தினாலும் எங்கள் குடும்ப உறவுகள் வலுப்பெற்றன. அவர்கள் அதே ஊரில் தங்கிநின்று கற்பித்தகாரணத்தினால் விடுமுறை தினங்கள், சனி,ஞாயிறு தினங்கள் என பெரும்பாலான நேரங்கள் இவர்களின் கற்பித் தல் காலங்கள் ஆகின. இவர் அதிபர் சேவையைப் பெற்றுக்கொண்ட காரணத்தினால் திருகோணமலையிலுள்ள பிரபல பள்ளியான உவர்மலை வித்தியாலயத்தில் பிரதி அதிபர் கடமைப்பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.

நாமும் கடமை நிமித்தம் திருகோணமலை செல்லும் காலங்களில் இவர் கடமை புரிந்த பள்ளியிலே தங்கவேண்டிய சந்தர்பங்களில் இவர் எங்களுக்கு வேண்டிய உதவி களை அன்போடு வழங்கினார்.தனது சொந்த பள்ளியான இந்து மகளிர் கல்லாரியில் அதிபர் கடமைகளை மிகவும் சிறப்பாக ஆற்றி மன திருப்தியோடு ஓய்வு பெறுகின்றார்.

2000ற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு அதுவும் பெண் பிள்ளைகளுக்கு பொறுப்பாக இருந்து செவ்வனே கடமைகளை நேர்த்தியாக செய்த திருப்தியுடன் ஓய்வுபெறுகின்றார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் நான்கு மாவட்டங்களில் கல்விப்பணி ஆற்றிய தங்களை மனம் நிறைய வாழ்த்தி பாராட்டி மகிழ்வடைகிறேன். தங்களின் அரச சேவைக்கான ஓய்வு காலம் உடல், உள நலத்துடன் மகிழ்வுடன் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.க.முருகவேல்**
முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிவிழா நாயகிக்கு
## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை

யாழ் வலயத்தினைச் சேர்ந்த யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதில் அக மகிழ்கின்றேன்.

கிளி / வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் கல்விப் பணியினைத் தொடங்கிய இவர் 13 வருடங்கள் ஆசிரியராகவும் 20 வருடங்கள் அதிபராகவும் கல்வித் துறைக்கு ஆற்றிய பணிக்கு இவரது மாணவர்களும், இவரது வழிகாட்டலில் கற்பித்த ஆசிரியர்களும் என்றென்றும் சான்றாய் விளங்குவர். புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் கல்வி முதுமாணிப் பட்டத்தினையும் கற்று தன்னை வளர்த்துக் கொண்டவர். அத்துடன் கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை யாழ்ப்பாணம் எனப் பல்வேறு பிரதேசங்களிலும் கடமை புரிந்த அனுபவத்தினூடாகவும் தன்னை முன்னேற்றிக் கொண்டவர்.

திருகோணமலை மாவட்ட உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நான் இவருடன் ஒன்றாகக் கடமையாற்றியுள்ளேன். அங்கு க.பொ.த சாதாரண மாணவர்களுக்கு கற்றலில் மேலதிக செயற்பாடுகளை முனைப்புடன் வழங்கியிருந்தார். கலைகளில் ஈடுபாடுடையவராகவும் சிறந்த ஆளுமைப் பண்புள்ளவராகவும் நிதானமான செயற்பாடுடையவராகவும் சிறந்த புவியியல் ஆசானாகவும் விளங்கினார். யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் சிறந்த பௌதிக வள அபிவிருத்தியினை மேற்கொண்டு தன் பெயரினை நிலைநிறுத்திக் கொண்டவர்.

இவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் சமூகப் பணியினைத் தொடர்ந்து புரியும் வல்லமையை இறைவன் இவருக்கு அருளவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

**மித்திரை மிமலா மேதினி மீதில் மேன்மைகள் பலபெற்று**
**மங்கலமாய் மாண்புடன் மாநிலத்தோர் போற்ற**
**மண்ணின்மிசை மங்காப் புகழுடனே வாழ்கவென**
**மனமுவந்து வாழ்த்துகின்றேன் வாழியவே!**

**திரு. த.கிருபாகரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணி விழா வாழ்த்துச் செய்தி

வட மாகாணத்தின் புகழ்பூத்த பெண்கள் கல்லூரியின் அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் அதிபர் திருமதி. மி.விமலநாதன் அவர்கள் இப் பாடசாலையின் பழைய மாணவியும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. சிறந்த நிர்வாகத் திறனுடைய இவர் பாடசாலைகளில் ஏற்படக் கூடிய பல்வேறு விதமான சவால்களுக்கும் முகம் கொடுக்கும் போது நிதானமாகவும் பதற்றமின்றியும் எப்பொழுதும் புன்னகை மாறாத முகத்துடனும் செயற்பட்டு ஒவ்வொரு பிரச்சினைக்கும் வெற்றிகரமான தீர்வுகளைக் காண்பதில் வல்லவர் என்பதனை இந்து மகளிர் கல்லூரியில் நான் கடமையாற்றிய காலங்களில் அவதானிக்க முடிந்தது.

தமிழிலும் கலைகளிலும் அவருக்கு உள்ள ஈடுபாடு காரணமாக சிறந்த ஆசிரியர்களின் பங்களிப்புடன் தேசிய மட்டத்தில் கவின்கலைப்போட்டிகளிலும் தமிழ்த் தினப்போட்டிகளிலும் மாணவர்கள் வருடாந்தம் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். இவ்வாறான வெற்றிகளைப் பெறுவதற்கு பாடசாலைப் போட்டிகளின் பயிற்சியின்போது தானும் ஆசிரியர்களுடன் இணைந்து செயலாற்றி ஊக்குவிப்பு வழங்கினார் என்றால் அது மிகையாகாது. மேலும் ஒரு அதிபருக்குரிய நிறைவான தோற்றமும் முகப்பொலிவும் கொண்டவர். ஆளுமைத் திறன் மிக்கவர். முரண்பாடுகள் வேறுபட்ட சிந்தனைத்திறனுள்ள அனைவரையும் சமாதானப்படுத்தி ஒன்றிணைத்து வேலை செய்விக்கக் கூடிய ஆற்றலை பாடசாலை நிகழ்வுகளின் போது காணமுடிந்தது.

இவர் அதிபராக இருந்த காலப்பகுதியில் பாடசாலை கட்டட தேவைகளும் ஏனைய பௌதீக தேவைகளும் பெருமளவு நிறைவு பெற்றது எனலாம். பாடசாலையில் நடைபெறும் விழாக்களின் போது நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு மற்றும் நேர முகாமைத்துவம் என்பவற்றை கருத்தினில் இருத்தி கச்சிதமாக செய்து முடிப்பதில் வல்லவர். அதிபர் சேவையில் இருபது ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்து ஓய்வு பெறும் அதிபரின் ஓய்வுக் காலமும் சிறப்புற அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திருமதி.ல.லிங்கேஸ்வரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி பணிமனை, தென்மராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக சுமார் 10 ஆண்டுகள் அரும் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். அவர்களின் ஓய்வுக்குப்பிந்திய எதிர்காலம் வளமுடனும் மகிழ்வுடனும் அமைய வேண்டுமென மனம் நிறைந்து வாழ்த்து கின்றேன்.

எங்கள் கல்லூரியின் புதிய அதிபராக 2012 இல் அவர் பதவியேற்ற போது அது வரைகாலமும் அதிபராக கடமையாற்றியிருந்த நான் அவரிடம் கல்லூரிப் பொறுப்புக்களை உரியமுறையில் கையளித்துவிட்டு பதவியுயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தேன். ஏற்கனவே நாம் இருவரும் அன்போடும் பண்போடும் சகோதர உறவோடும் பழகியிருந்த காலம் அது. நிற்பந்தங்களுக்கு மத்தியில் கல்லூரி நிர்வாகப் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டாலும் எங்கள் இருவருக்குமிடையேயுள்ள அன்பும், மதிப்பும், மரியாதையும் குறைந்து விடவில்லை.

கல்லூரியின் முன்னைய அதிபர்களின் மரபைப்பின்பற்றி தமது நிர்வாகத்தை முன்னெடுத்துச் சென்றதை நான் அறிந்து மகிழ்வடைந்தேன். கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் ஏனைய கல்லூரிச் சமூகத்தினர், கல்வித் திணைக்களத்தினர் அனைவரையும் அனுசரித்து கல்லூரியின் வளர்ச்சியில் தொய்வு ஏற்படாதவாறு தனது பணியினை செவ்வனே அவர் நிறைவேற்றியுள்ளமை பாராட்டத்தக்கது. இவரது காலத்திலேயே கல்லூரியின் வகுப்பறைக் கட்டடத் தொகுதிகள், மகிந்தோதய தொழில் நுட்ப ஆய்வுகூடம் என்பன அமைக்கப்பட்டமை இவருக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது.

எந்தவொரு பதவியும் எவருக்கும் நிரந்தரமானதல்ல, சூழ்நிலைகளும் சந்தர்ப்பங் களுமே அவற்றைத் தீர்மானிக்கின்றன. திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் தனது கல்லூரி நிர்வாக காலத்தில் ஏற்பட்ட பல்வேறு சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்து அவற்றைச் சாதுரியமாக சமாளித்து கல்லூரியை வழிநடத்தியமை அவரது ஆளுமைத் திறனாகும். அவரது ஓய்வுக்குப் பிந்திய காலத்திலும் தம்மால் முடிந்தவரை கல்விப்பணி, சமூகப்பணி ஆகியவற்றில் தொடர்ந்து உழைக்க வேண்டுமென விரும்புகின் றேன். யாழ்பாணம் இந்து மகளிர் கல்லூரித்தாயை என்றும் நெஞ்சில் இருத்தி செயலாற்ற உடல் வலுவுடனும், உளநலத்துடனும் நீண்ட ஆயுளுடன் வாழ எல்லாம் வல்ல நடுத் தோட்ட இராஜவரோதய விநாயகர் அருள் வேண்டி அமைகின்றேன்.

**திருமதி. வேதநாயகி பேரின்பநாதன்**
முன்னாள் அதிபர்(யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி),
ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமைதியான ஆளுமை திருமதி. மிமலாதேவி விமலநாதன்

வரலாறுகளும் சம்பவங்களும் நிகழ்வுகளும் ஒருவருடைய மனதிலிருந்து அல்லது பதிவுகளிலிருந்து அழிந்து போனாலும் அவை ஏதோவொரு சந்தர்ப்பத்தில் எமது நினைவு களில் முட்டி மோதிக் கொண்டு அவற்றை ஞாபகத்துக்கு கொண்டு வருகி றது. நான் ஆசிரியத் தொழிலில் இருந்து அதிபர் பதவியிலிருந்தும் இளைப்பாறி சுமார் ஒரு தசாப்தத்தை தாண்டி விட்டாலுங்கூட என் பதவிக்காலத்தில், கடமைக்காலத்தில் என்னோடு பணியாற்றி கொண் டவர்கள் பற்றி நான் பல சந்தர்ப்பங்களில் நினைத்து ஆச்சரியப்படுவ துண்டு. ஆனந்தம் அடைவதுமுண்டு.

மிமலா ஆசிரியை அவர்களை நான் ஒரு விவாத அரங்கில் முதன் முறை சந்தித்தேன். அவரின் விவாத திறமையையும், ஆளுமையையும் பார்த்த யான் இவரை எனது பாடசாலைக்கு உதவி அதிபராக எடுக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு ஊறத் தொடங்கியது. அப்போது அவர் சாம்பல்தீவிலுள்ள ஒரு பாடசாலையில் கடமை யாற்றிக் கொண்டிருந்ததாக ஞாபகம். வடக்கிற்கு நெருக்கடிகள் உச்சம் அடைந்திருந்த காலம் யாழ்ப்பாணத்திலிருந்து பெருந் தொகையான ஆசிரியர்கள் திருகோணமலையை நோக்கி இடம்பெயர்ந்து கொண்டிருந்த காலத்தில் தான் பல நெருக்கடிகளை யான் சந்தித்தேன். அவ் வேளையில்தான் மிமலா எனது பாடசாலைக்கு உப அதிபராக நியமிக்கப்பட்டார். அமைதி யான ஆளுமைமிக்க ஒருவ ராக மாத்திரமல்ல கல்வியில் அனுபவமும், ஆற்றலும் அவரி டம் நிறையவே இருந்ததைக் கண்டதன் காரணமாக பாடசாலையின் நிர்வாக மற்றும் புறக் கிருத்திய செயற்பாடுகளில் நான் முன்னுரிமைப்படுத்தினேன். ஏற்றுக் கொண்ட கடமை களை மிகப்பொறுப்புடனும் அமைதியுடனும் ஆற்றலுடனும் செய்த போது அவர் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் என்னை அறியாமலே எனக்குள் வளரமுற்பட்டது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் 2003ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு அனு மதி தொடர்பாக ஒரு பெற்றோர் எனக்கு எதிராக உச்ச நீதிமன்றிலும், உயர் நீதி மன்றிலும் வழக்கொன்றை தொடுத்திருந்தார். இதேவேளை அப்போது சம்பூரிலிருந்து திருகோண மலை மாவட்டத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முனைந்திருந்த இயக்கம் சார்ந்தவர்களிடம் என்னைப்பற்றி தவறான பிரசாரத்தை விதைத்து என்மீது நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கும்படி தூண்டியிருந்தார்கள். அதை நம்பியவர்கள் என்னை அப்பாடசாலையின் கதிரையிலிருந்து தூக்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டது மாத்திரமல்ல இல்லாத பொல்லாத குற்றச்சாட்டுக்களை சுமத்தி என்னை வெளியே போடுவதற்கு நிதிக்குற்றச்சாட்டு, நிர்வாகக் குற்றச்சாட்டுக்களை வரைந்து பலநெருக்கடிகளைத் தந்தார்கள். நான் உயிருக் காக பயந்து ஒதுங்கிப் போயிருந்தேன்.

இவ்வேளையில் எனது உதவி அதிபராக இருந்து மிமலா அவர்கள் எனக்காக வந்தவர் களோடு தர்க்கித்தது மாத்திரமல்ல நடுநிலை தவறாத தனது நியாயத்தை கூறி அவர்களோடு போராடியது மாத்திரமல்ல மிகச் சிறந்த விசுவாசத் தன்மையோடு நடந்து கொண்டதை நான் மறந்துவிடமுடியாது. உண்மையைக் கூறுவதாக இருந்தால் அவ்வேளையில் என்னை வெளியேற்றிவிடும் அளவுக்கு உயிர் அச்சுறுத்தலுக்கு உட்பட்டேன்.

அத்தகைய நேர்மை, விசுவாசம், அர்ப்பணிப்பு, ஆளுமை கொண்ட ஒருவர் எதிர் காலத்தில் நல்லதொரு நிர்வாகியாக திகழ்வார் என்ற எனது மனக்கணிப்பு பிழை போக வில்லை. இன்று வடபுல பாடசாலையொன்றின் அதிபராக இருந்து அவர் ஆற்றி வந்த சாத னைகளை கேள்வியுற்றபோது பெருமகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். மனதால் பாராட்டியும் இருக்கின்றேன்.

இத்தகையதொரு ஆளுமை தனது அளப்பரிய கடமைகளை முடித்து ஓய்வு பெறவி ருப்பது மனதளவால் துயர் தந்தாலும் ஓயாது ஒழியாது தொடர்ந்து கடமையாற்ற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சி.நவரத்தினம்,**
திருமலை நவம்,
முன்னாள் அதிபர்,
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவத்தின் தரமான அணிகலம்

எமது கல்லூரியின் சகல தலைமைத்துவ பண்புகளும் கொண்ட அதிபராக கல்லூரியை ஒரு தசாப்த காலம் தலைமையேற்று வழிநடத்தி சிறப்பான நிலைக்கு உயர்த் தியவர் மதிப்பார்ந்த அதிபர் திருமதி.மிமலாதேவி விமலநாதன் என்றால் மிகையில்லை.

எமது கல்லூரியின் கல்வி அறுவடை தரமான பாடசாலைகளோடு ஒப்பிடக் கூடிய உயரிய நிலையை நோக்கி வீறுநடை போடுவதற்கும் விளையாட்டு, தமிழ்த் தினம், ஆங்கில தினம் போன்ற போட்டிகளில் தேசிய ரீதியில் மாணவிகள் முதல் நிலையை தக்கவைப் பதற்கு, ஆசிரியர்களுக்கும், மாணவிகளுக்கும் ஆலோசனைகளையும் வழி காட்டல்களை யும் வழங்கி , நெறிப்படுத்தியவர் அதிபர் அவர்கள் என்றால் கருத்து வேறுபாடு இல்லை.

கல்லூரியின் உள்ளக மேற்பார்வை, கூட்டுணர்வு மேம்பாடு, வளப்பயன்பாடு, பௌதீக வள மேம்பாடு போன்ற செயற்பாடுகளை நேரடியாகவும் உரிய ஆளணியை நிய மித்தும் தமது கல்விச் சேவைக் காலத்தில் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் செயற்படுத் தியவர் என்பது சுட்டிக் காட்டத்தக்கது.

கல்லூரியையும் கல்லூரிச் சமூகத்தையும் கல்லூரியுடன் இணைத்து மாணவி களின் மேம்பாட்டிற்கு உழைத்தவர். வலய, மாகாண மட்ட போட்டிகள் போன்றவற்றை கூட எமது கல்லூரியில் வெற்றிகரமாக நடத்த உறுதுணையாக இருந்தவர். மாணவிகளின் ஆளுமை மேம்பாட்டில் அளப்பரிய சேவை செய்தவர். பல்வேறு போட்டிகளை நடத்துவதற் கும் களம் அமைத்துக் கொடுத்தவர். கல்லூரியின் கட்டட மேம்பாடு, மைதான விஸ் தரிப்பு, ஆளணி பெறல் , கற்றல் உபகரண பெருக்கம் என கல்லூரித்தாய் உளப்பூரிப் படை யக் கூடிய வகையில் செயற்றிட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்திய பெருமை அதிபர் அவர்களை சாரும்.

எண்ணியது முடிதல் வேண்டும்
நல்லவையே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்...

என்ற பாரதியின் வாக்கிற்கு பாத்திரமானவர் எங்கள் அதிபர். அதிக மன உழைச்சல் இல்லாது கல்வி, கல்வி சாரா ஊழியர்களிடம் சேவையை பெற்று திறமை யான நிர்வாக கட்டமைப்போடு திட்டமிட்டு செயற்படுத்தி உள்ளார். கல்லூரி வரலாற்றில் தனி இடத்தை பெற்ற முதல்வர் திருமதி.மிமலாதேவி விமலநாதனின் ஓய்வு காலம் ஆரோக்கி யமாகவும், வளமாகவும் அமைய கல்லூரியின் நடுத்தோட்ட விநாயகனை இறைஞ்சி நிறைவு செய்கின்றேன்

நன்றி

**செல்வி.கூ.அரசரட்ணம்**
பிரதி அதிபர்,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணி விழா வாழ்த்துச் செய்தி

திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்கள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் 10 வருடங் களாக அதிபராக சேவையாற்றி ஓய்வு பெறுகின்றார். அவருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்கும்படி கேட்டிருந்த கல்லூரியின் இன்றைய ஆசிரிய நலன்புரிக் கழகத் தினருக்கு எனது நன்றிகள்.

சில பழைய நினைவுகளைத் திரும்பிப் பார்க்கின்றேன். அந்நினைவுகள் எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. நான் இந்து மகளிர் கல்லூரியில் கடமையாற்றிய 19 வருட கால ஆசிரிய சேவையில் மூன்று அதிபர்களைச்சந்தித்தேன். மூவரும் தனித்தவமான பாணி யில் கல்லூரி வளர்ச்சிக்கு உதவமுன் வந்தனர் என்பதனை நாம் அறிவோம். அறிவால் பண்பால் பேச்சு வன்மையால் எனத் தம்மிட மிருந்த பன்முகப்பட்ட திறமைகளால் இந்து மகளிர் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்கள்.

அவ்வழியில் தம் பேச்சு வன்மையாலும் கவர்ச்சியான தோற்றத்தாலும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மேலதிகாரிகள் எனப் பல்வேறு தரப்பினருடனும் பேசி தான் நினைத்ததை செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றல் திருமதி.மி.விமலநாதன் அவர்களிட மிருந்தது.

காலச் சூழ்நிலையால் புதிய கட்டடங்கள் எழுந்தன அம்மையாருக்கும் அவர்தம் காலத்தில் சேவையாற்றிய பலருக்கும் இப்பெருமைகள் உரித்தாகும்.

மேலதிகாரிகள் முதல் சிற்றூழியர்கள் வரை அனைவரும் அன்புடன் அம்மையா ருடன் பழகினர். இவர் ஆசிரியர்களின் சேவையை கௌரவித்தார். அந்த வகையில் பாடசாலை நிர்வாகத்தை நெகிழ்வுடன் நடத்தியவர்.

நான் ஓய்வு பெற்ற பின்னரும் சைவவித்தியாவிருத்திச் சங்க சிறுவர் இல்லப் பிள்ளைகளின் அனுமதியின் பொருட்டு இந்து மகளிர் கல்லூரியினை நாடிய போது எவ்வித மறுப்பும் தெரிவிக்காது முழு மனதுடன் அவர்களை அனுமதித்தவர். இச் சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓய்வு காலம் சிறப்பதோடு இவர் தனது கணவருடனும் மகனுடனும் சிறப்பான முறையில் வாழ வாழ்த்துகிறேன். சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயனுடையதாக இவரது எதிர்காலம் அமையும் என நம்புகிறேன்.

**திருமதி.ச.சிவநாதன்**
முன்னாள் உபஅதிபர். பகுதித் தலைவர்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சேவை நலன் பாராட்டு

சகல வளங்களும் நிறைந்த வடமராட்சி மண்ணின் மகளாய், யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாய், நல்லாசிரியராய், எமது கல்லூரியின் அதிபராய் சிறந்த சேவை வழங்கிய திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களின் பணி பாராட்டுக்குரிய தாகும். 2012 ஆம் ஆண்டு எமது கல்லூரியின் அதிபராக தனது கடமைகளைப் பொறுப்பேற்ற அதிபர் அவர்கள் ஒரு தசாப்த கால சேவையை எமது கல்லூரிக்காக வழங்கியது சிறப் பானதே. தனது அழகினாலும், புன்சிரிப்பாலும் இனிமையாக பழகும் சுபாவத்தாலும் எடுத்த விடயத்தை செவ்வனே செய்து முடிக்கும் செயற்றிறனாலும், எல்லோர் மனதிலும் தனியிடத்தை பெற்ற அதிபர் அவர்கள் தனது கடமைகளை சிறப்பாக செய்ய வேண்டுமென்பதில் மிகுந்த உறுதியுடனும், தன்னம்பிக்கையுடனும் செயற்பட்டவர். "கல்லூரியின் வளர்ச்சியும் மாண வர்களின் உயர்வும் அதிபரின் திறமையிலேயே தங்கியுள்ளது" என்னும் உண்மையை தனது அர்ப்பணிப்பான சேவையினால் அனைவரையும் உணரவைத்தவர். கண்ணியத் துடன் அதேவேளை கட்டுப்பாடாக மாணவிகளை வழிநடத்தி கல்லூரியின் பெருமையை நாடறியச் செய்த இவர், நான் கண்டு வியந்த பெண் ஆளுமையாளர்களில் ஒருவராவார்.

கல்லூரியின் வளர்சிக்காக அதிபர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை. நிமிர்ந்து நிற்கும் கல்லூரியில் புதிதாக கட்டப்பட்ட, புதிய மெருகூட்டப்பட்ட கட்டடங்கள் எம் அதிபரை என்றும் நினைவுபடுத்துபவையாக அமையும். மாணவர்களின் கல்வியில் மிகுந்த கரிசனையுடைய அதிபர் அவர்கள் கற்றல் இணைபாடவிதான செயற்பாடுகளுக்கும், ஆசிரி யர்களின் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக வழிகாட்டியாக விளங்குவதில் என்றும் பின்னின்றதில்லை. இவரின் பதவிக்காலத்திலேயே அதிக எண்ணிக்கையான மாணவிகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய வரலாற்றுப் பெருமையும், தேசிய மட்டப் போட்டிகளில் மாணவிகள் பெற்ற வெற்றிகளின் பெருமையும் இவரையே சாரும்.

அதிபரின் சேவைக்காலத்திலேயே எமது கல்லூரி தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டதும் அவரின்சேவையை கௌரவிப்பதாக அமைகின்றது.அதிபரின் கடின உழைப்பும் தன்னலமற்ற சேவையும் கல்லூரியின் வரலாற்றில் என்றும் இடம்பெறும். சிறப் பாக பணியாற்றி சேவையில் இருந்து ஓய்வு பெறும் எமது கல்லூரியின் அதிபர் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களின் ஓய்வு காலம் மகிழ்ச்சிகரமாகவும், ஆரோக் கியமானதாகவும் அமைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**திருமதி.ரோகினி பாலஸ்கந்தன்.**

(ஓய்வுநிலை உபஅதிபர் 1991-2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Born Leader



A person can be born with natural leadership abilities, and someone can learn how to be a good leader at work. Our principal Mrs. Mimaladevy Vimalanathan is a fine exemplify character for a great leader. At this moment I recall the poem by P. B. Shelley titled Ozymandias. It talks about a king who made monuments and statues of himself. But as years passed by they were all destroyed and buried in the vast endless desert sands.

Unlike this king some others leave their legacy in the hearts of people which is never destroyed. Such a person has been our Principal. She has scripted love and enduring respect in the hearts of all those who came in touch with her. Unlike buried monuments of stone what she has authored in our hearts will live on.

Yes, one of the greatest lessons you have shown us is that you cared for all of us. Therefore you earned the trust and respect of all who came into contact with you.

The respect you showed to each one of us, your willingness and eagerness to involve us in taking major decisions are things that will be remembered. You were dedicated to your task, sincere to the core, simple in life, able to remain calm under pressure, and never yielding to anger.

You were not only able to improve results in education as well as in extracurricular activities but also created a stress-free learning environment for students. You tried your best to improve the quality of faculty and encouraged their development through education and research.

Your student-friendly approach and your understanding of the background of each student showing extra concern for those having problems - both academic and personal - will be lovingly remembered for a long time to come. Your systematic approach to things and your emphasis on punctuality made working with you a pleasant experience.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With all my heart and with the blessings of all present here I wish you a contented and joyous retired life. May you find useful ways to engage yourself in the service of God and men in the days to come. There is no doubt in saying that you are the epitome of a perfect human being. A human has a beautiful inside and out. A free soul. I still remember how we could see you roaming around for monitoring all. It gives us immense grief to let you go. You have set amazing examples for the young generations to follow.. You always provided us with the most comfortable environment to work in.

I wish there was a way to make you stay a bit longer and to let us enjoy her beautiful company. It wrenches my heart to say Goodbye to your mesmerizing human being. I hope you  to stay happy wherever you go. May all the odds be in your favor.

**Mrs. Sujitha Sugunenthiran**
**Asst.Principal (SLPS III),**
**J/Jaffna Hindu Ladies' College.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

அருள் நிறைந்த நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகரின் கழல் பணிந்து மணிவிழா கண்டின்புறும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் பெருமதிப் பிற்குரிய திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்கு வதில் பேருவையடைகின்றேன்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி தமக்கென உரிய அறிவுப்பலத்தையும் உயர் நிலை இந்து தமிழ் சமய பண்பாடுகளையும் பேணிப்பாதுகாத்து வழங்கும் தகைமைசார் நிர்வாகத்திறன் கொண்ட பிரதி அதிபர்களையும் உப அதிபர்களையும் மற்றும் அறிவுச் செழுமை கொண்ட நல் ஆசிரியர்களையும் கொண்ட பெரு விருட்சத்தில் தோன்றிய வித்துக்களாக உலகெங்கும் தடம் பதிக்கும் ஆயிரக்கணக்கான மாணவச் செல்வங்களையும் உருவாக்கி வரும் கல்விக்கூடத்தின் உயர் பதவியினை கடந்த 10 ஆண்டுகளாக அலங்கரித்து இரண்டாயிரத்து இருபத்தி இரண்டில் மணிவிழா கண்டு திளைக்கும் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய திருமதி.மி.விமலநாதன் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து தனது குடும்பத்தினருடன் நிறைவாக எல்லா நன்மைகளையும் பெற வாழ்த்துக்களை வழங்கி இன்புறுகின்றேன்.

**திருமதி. உமாவதி ரவீகரன்**
அதிபர்,
யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சன்மார்க்கத்தில் முதற்பெண் அதிபர்

யா/ சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர்கள் வரிசையில் முதலாவது பெண் அதிபராகக் கடமையாற்றி, யா/இந்து மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற எமது அதிபர் இறையருள் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

2009 தொடக்கம் 2012 வரை 3 ஆண்டுகளே கடமையாற்றிய போதும், அவர் செய்த சேவைகளும் அதனால்கிடைத்த பயனும் அளப்பரியது.

சுற்றுச்சூழல் தூய்மையுடனும், அழகுடனும் காட்சியளித்தல் கற்றல் செயற்பாடு களுக்கு அவசியம் எனவுணர்ந்து, தினமும் சூழலைப்பார்வையிட்டு தானும் களத்தில் இறங்கி, ஆசிரியர்கள் மாணவர்களுடன் செயற்படும் பண்புடையவர்.

தனது பார்வையாலும், மௌன மொழியாலும் ஆசிரியர்களை வழிப்படுத்தும் திறமைமிக்கவர். ஒரு நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு மிக, மிக முக்கியம் நேரந்த வறாமையாகும். பாடசாலை ஆரம்பிக்க முன் ஆசிரியர் வருகைக்கு முன்பே சமுகமளித்து, பாடசாலை நிறைவு பெற்ற பின்னும் நீண்டநேரம் கடமையாற்றியவர் எமது அதிபர், பாட சாலைச் செயற்பாடுகளை உரியவேளையில் செய்துமுடிக்கும் திறமையாலேயே வெற்றிப் பாதையை நோக்கி பயணிக்க முடிந்தது.

வன் மொழியினாலும், பிரம்படியாலும் மாணவர்களைத் தண்டித்து வெற்றிபெற முடியாது என்பதறிந்து, பெற்றோரை வரவழைத்து மாணவர்களிடமும், பெற்றோரிடமும் கலந்துரையாடி மாணவர்களை நல்வழிப்படுத்துவதில் வல்லவர்.

இவர் கவின் கலை ஆற்றல் மிக்கவர் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்குவது பான்ட் அணியினருக்கு வடிவமைத்த ஆடைவடிவமைப்பாகும். பான்ட்வாத்தியம் இசைக்க தேவைப்படும் காலங்களில் தாமும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்து சிறப்பாக அமைய வழி காட்டியவர் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைக் காலங்களில் அடைவுமட்டம் உயர தாமும் கற்பித்தலில் ஈடுபட்டு சிறந்தபெறுபேறு பெற வழிசமைத்தவர். சிறப்பாக புலமைப்பரிசில், சாதாரணதர, உயர்தர பெறுபேறுகள் சிறப் பாக அமைய வழிப்படுத்தியவர். வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, நூலகத்தைப் புனரமைத்து வாசிப்புத்தூண்டலை ஏற்படுத்தி வெற்றிகண்டவர்.

கற்றலில் இடர்ப்படும் மாணவர்களுக்கு சிறந்த பயிற்சியளிக்க வேண்டுமென ஆசிரி யர்களை அன்புடன் வழிப்படுத்தியவர். கற்றலுக்கு வறுமை தடையாக இருக்கும் மாணவர் களை இனங்கண்டு அவர்களுக்காக கல்விக் காருண்யம் மிக்கவர்களிடம் உதவிபெற்று கல்வியைத்தொடர வழிவகுத்தவர்.

ஆசிரியர் மாணவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுக்கும் இவர், எனது தாயாரின் இறுதிச்சடங்கில் தமது வாகனத்தை தந்துதவியதை என்னால் மறக்கவே முடியாது. மாணவர் ஒருவரின் இறப்புச்செய்தியறிந்து உடனடியாகவே வருகைதந்து இறுதிவரை கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியமை நற்பண்புக்கு எடுத்துக்காட்டு.

இவரது நற்பண்பினால் இறைவன் அளித்த சிறந்த வாழ்க்கைத் துணையுடனும், அன்புமகனுடனும் வளங்கள் பலபெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

**செல்வி. மு.செல்வராணி.**
முன்னாள் உபஅதிபர்,
யா/ சன்மார்க்க மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *The Lady behind the successful Journey of English Language*



I have great pleasure in giving this message on this very special occasion of our madam principal Mrs.M.Vimalanathan on her retirement. On this significant moment, we congratulate her for her immense contributions she has rendered to our alma mater during these past ten years of her service at J/Jaffna Hindu Ladies' College. Under her stewardship the school has been striving towards greater heights in both curricular and extra-curricular activities. We wouldn't have reached the standards of par excellence in all the sectors without her remarkable leadership.

In retrospect, we realize that she made our work easier and enjoyable at school because of her cheery disposition, tireless efforts and genuine concern. As a result of her true devotion, the conducive atmosphere she created and the countless hours she has put into make each and every endeavour perfect, teachers have been able to achieve many success.

- Annual English Day Celebrations have been conducted with great pompous under her management, displaying the delicacies of English Language.
- Six leaves of 'Ladies Leap', the English magazine have been released from 2014 providing a forum to showcase the talents and creativity of the students.
- There has been a remarkable increase of places secured in English Language Day Competitions at the Divisional, Zonal, Provincial and National Level. In 2017 a first place was obtained for cursive script hand writing in English and in 2022 two second places were won for Dictation and Cursive writing at the National Level.
- She has shown great enthusiasm in staging English Dramas. We have been able to win places at the English Drama Competitions owing to her valuable guidance.
- Our school was awarded the 'International School Award' twice in 2013 and 2016for the projects implemented at the school involving the entire school in collaboration



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

with the partner schools abroad. The fruitful monitoring and the fullest co-operation of our principal made this a reality.

- GEMP project has been implemented from 2018 in order to improve the reading, writing, listening and speaking skills of the students and their knowledge of English. Under her direction our school has been placed in the first rank for successfully executing the project in the zone.

- The constructive counselling she gives leads to the efficient functioning of Mahindhothaya Language Lab in the process of teaching and learning of the English Language.
- Above all, the teachers of English have been able to upgrade the achievement level of English Language at the G.C.E. (O/L) gradually and consistently because of her keen interest and real concern in teaching English Language. To her credit, the pass percentage peaked in 2021mounting to 96.99% which is truly a Himalayan achievement.

We, teachers of English congratulate and appreciate her for her peerless performance substantially in the subject of English. Many of us have additional personal reasons for our gratitude, for she has given special attention to our specific needs. While expressing our special thanks for her caring,

We wish her happy retirement !
May God bless her and her family !!
Au revoir Madam !!!

**Mrs. K.Tharmakunasingam,**
Former Subject C0-Ordinator (English),
& Sectional Head (Grade 11)
Jaffna Hindu Ladies' College.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் கண்ட அதிபர்

இரண்டாயிரத்துப் பன்னிரண்டாமாண்டு
இந்துமகளிர்கல்லூரியின் அதிபராய் நீங்கள்
வந்த இருவாரத்தில் தமிழாசிரியையாய் நானும் வந்தேன்
கல்லூரித்தாய் என் அன்னை என்றாலும் கடமை ஏற்கையில்
ஒருவித கலக்கம்.. ஒருவித பதட்டம்..
நானும் புதிது தான் நீரும் - புதிது தான் என்றே கூறி
இயல்பாய் செயல்பட நல்லூக்கம் தந்தீர்
தமிழை உயிராய் உணர்வாய் எனக்களித்த கல்லூரிக்குத்
தக்கபணி செய்யக் கிடைத்த வாய்ப்பை
மேலும் மேலும் ஊக்கமளித்து பாட இணைப்பாளராய்,
உயர்தர பிரிவு பகுதித்தலைவராய் கல்லூரித்
தமிழ்ப் பெருமன்றத்தின் தனிப்பெரும் பொறுப்பும்
இன்னும் பலபல வழிகளில் செயல்பட என்னை
ஊக்கமளித்தே ஓங்கிட வைத்தீர். முதற்கண் நன்றி
கல்லூரித் தாயின் கவினுறு மகளாய்
சொல்லாலும் செயலாலும் வல்லமை கொண்டு
நல்லதே செய்திட நடுத்தோட்ட விநாயகனை நாளும் பணிந்து
பல்லோரும் ஏற்றிடப் பணிபல செய்தவர்
எத்தனை இடர்கள் சூழ்ந்திட்ட போதிலும்
இரும்புச்சீமாட்டியாய் இருந்தே எங்கள்
கல்லூரி என்னும் பெருங்கடல் தன்னில்
நிர்வாகக் கப்பலின் மாலுமியாக துணிவுடன் நின்றவர்
அடிக்கடி கூட்டம் அடிக்கடி சந்திப்பு
ஆளுமை மிக்க அதிபரின் கீழே ஆசிரியர்கள்
இயந்திரமாகி கற்பித்தல் , கணிப்பீடு, மதிப்பீடென்று
கடமையில் கருத்தாய் இருந்தோம் ஒன்றாய்
அடைவுமட்டம் மேலோங்கியது! அளப்பரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகள் அடிக்கடி வந்தது!
எல்லாப் பாடத்துறையிலும் எங்கள்
சாதனை மட்டம் உயர்ந்தே சென்றது
சாற்றிடும் புகழுக்கு உரியவர் இவரே
கல்விச் சுற்றுலா சென்றிடும் போது
களிப்புடன் கலந்து கூடவே வருவார்
காலைப் பிரார்த்தனை அதிபர் உரையில்
"குப்பை அகற்றுதல்" தொனிப்பொருளாக
நாளும் நாளும் சொன்னதனாலே பசுஞ்
சோலை என எம் கல்லூரி இன்று
சூழல் அழகுடன் மிளிர்ந்திட வைத்தவர்.
பாங்குறு பழைய மாணவியரின் பக்க பலத்துடன்
பவள விழாவை சிறப்புற நடத்திய பெருமை கொண்டவர்
பள்ளி விழாக்களின் பெருமைகள் ஓங்கிட
பக்குவமாகவே ஒத்திகை பார்த்துத் தட்டிக் கொடுத்தே
தன்னாலான அறிவுரை வழங்கி வெற்றிகள் பெற்றிடும் வழிகள் சொன்னவர்
மாணவியரின் பழக்கவழக்கம் பண்புகளோடே
படிப்பின் அவசியம் உணர்த்தி நின்றவர்
விவாதக் கழக வீராங்கனைகளில் சொல்
வீச்சை வளர்க்க வழிபல சொன்னவர்
மாகாணமட்டம் தேசிய மட்டம் என அனைத்து பாடநெறிகளிலும்
விருதுகள் குவித்திட வேகம் கொடுத்தவர்
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர்கள் வரிசையில்
சிறப்பிடம் பெறும் திருமதி.மிமலாதேவி விமலநாதனுடன்
சேர்ந்தே பயணித்த சில நினைவுகளால்
பூமாலை சூடிய பொன்மகளுக்கு
பாமாலையாய் என் எண்ணங்கள் பகிர்ந்தேன்
ஓய்வு காலம் ஒளிபெற வேண்டும்
உடல் உள சுகத்துடன் வாழ்ந்திட வேண்டும்...

**திருமதி.சத்தியபவானி செபமாலைதாசன்**
(பழைய மாணவியும் ஓய்வுநிலை ஆசிரியையும்)
(முன்னாள் பகுதித்தலைவர். க.பொ.த உ/த கலைப்பிரிவு
தொழிற்பாட இணைப்பாளர்)
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பணி நயந்து பாராட்டுகின்றோம்

பார்க்க இனியவர், பழக எளியவர், பன்முக ஆளுமையாளர், பாடறிந்து ஒழுகுபவர், பலரையும் கவர்பவர், பணி நுட்பம் அறிந்தவர், பணியிடம் பற்றிய கற்பனைகள் பலித்திட பிள்ளையார் துணையோடு பாடுபட்டவர். பல்கலையும் பரிணாமிக்க பகுத்தறிந்து பலர் பணியை தம் பள்ளிக்கே பயனுறுத்தி பரிசில்களும் பாராட்டுக்களும் பெற்றவர். பௌதீக வளங்களையும் பற்றுடன் பேணி பல் வழிகளிலும் பெருக்கி பார்ப்போர் பிரமிக்க தான் பயின்ற பள்ளியை பரிபாலித்தவர். பலர் கருத்துக்களையும் புலம்பல்களையும் பரிசீலித்து பக்குவமாய் தன் கருத்தை பலரிடத்தும் பதிய வைத்து பத்திரமாய் படை நகர்த்தும் பாங்கினர்.

பழைமைகளையும் பேணி புதுமைகளையும் புகுத்தி பல்லாற்றல் திறன்களையும் பரிவுடன் பெற்று பண்புறு மகளிர் கல்லூரியை பிரியமாய்ப் பேணி வளர்த்து பார் போற்றச் செய்தவர். பணிப்பாளர்கள் , பணியாளர்கள் பாராட்டுக்களைப் பெற்றவர். அவர் தம் பணி நயந்து பாராட்டுகிறேன். அவ்வப்போது நாமும் பயனுற பல் வழிகளிலும் ஆலோசனைகள் வழங்கி தான் முன் பணியாற்றிய எம் வித்தியாலயத்தையும் பரிபாலிக்க உதவிய பண்பினையும் நன்றியோடு நினைத்து நட்பு மிகு மிமலா விமலநாதன் நலம் பல பெற்று சுற்றம் சூழ நிறைவாக மகிழ்வாக நீடு வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**திருமதி.குககுமாரி விஜயரகுநாதன்**
B.A,PGDE,M.Ed,M.Phil,SLPS I
ஓய்வுநிலை அதிபர்,
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகத் திறமை கொண்ட ஆளுமை மிக்க அதிபர்



"தோன்றிற் புகழொடு தோன்றுக. அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய எமது கல்லூரி வரலாற்றில் புகழோடு வாழ்ந்து வரும் எமது மாணவச் செல்வங்களால் "கல்லூரித்தாய்" என அன்போடு அழைக்கப்படும் கல்லூரியின் பழைய மாணவியான அதிபர் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

ஆளுமை மிக்க அர்ப்பணிப்போடு சேவையாற்றிய முன்னைய அதிபர்களின் முன் மாதிரியான செயற்பாடுகளின் தொடர்ச்சியாக 01.06.2012இல் எமது கல்லூரிக்கு அதிபராக கால்பதித்து அன்றிலிருந்தே தன்னை முழுமையாக கல்லூரிக்கே அர்ப்பணித்து செயலாற்றத் தொடங்கியமையை நாம் கண்கூடாக காணமுடிகிறது. 1989இல் ஆசிரிய சேவைக்குள் பிரவேசித்த எமது அதிபர் சகல பிரதேசங்களிலும் பல்வேறு வகைப் பாடசாலைகளிலும் பணி ஆற்றிப் பெற்றுக் கொண்ட அனுபவ ஆற்றல்கள் யாவற்றையும் ஒன்று சேர்த்து எமது கல்லூரியை வரலாற்றுச் சாதனை புரிய வைத்துள்ளார். வடமாகாணத்தில் அதிக மாணவிகளை எண்ணிக்கையினைக் கொண்ட தனித்துவம் மிக்க பெண்கள் பாடசாலையாக மிளிர வைத்த பெருமைக்குரியவர்.

"சட்டங்கள் செய்யவும் பட்டங்கள் ஆளவும் பாரினில் பெண்கள் படைக்க வந்தோம்" என்ற பாரதியின் கூற்றிற்கு வலுச் சேர்க்கும் வகையில் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக கல்லூரியில் கால் பதித்தவர். நிமிர்ந்த நன்நடை, நேர் கொண்ட பார்வை, யார்க்கும் அஞ்சா நெஞ்சம் போன்ற இயல்புகளைத் தன்னகத்தே கொண்டமைந்து மாணவர் உள்ளங்களில் அழியா இடம் பிடித்தவர்.

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" எனும் கூற்றிற்கமைய அனைவரிடமும் அன்புடனும் பண்புடனும் மரியாதையுடனும் பழகும் இயல்புடையவர். கல்லூரியின் மகுட வாசகத்திற்கு ஏற்றாற் போலவும் தன்னைப் போலவும் கல்லூரியை அழகுணர்ச்சி மேலோங்கச் செய்ய பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி வாகை சூடியவர். மாணவிகளின் கல்வி வளர்ச்சியில் உயர்ச்சி காணத் துடித்த அதிபர் கற்றல் கவின்நிலைக்கு ஏற்றாற் போல அரும்பணிகள் ஆற்றத் தொடங்கினார். குன்றும் குழியுமாக காணப்பட்ட கல்லூரி வளாகம், ஆலய சுற்றாடல் பாதைகள், பிரதான மண்டபத்தின் பாதை, அலுவலகம் யாவற்றையும் புனரமைக்கும் பணியை பல்வேறு தரப்பினரிடமிருந்தும் நிதி உதவிகளை பெற்று புனரமைப்புச் செய்து கல்லூரியை புதுப்பொலிவுடன் மிளிர வைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கும் உடனுக்குடன் தொடர்பாடல் திறனைச் செயற்படுத்தவும் வகுப்பறைகள் யாவற்றிலும் ஒலிபெருக்கி வசதியை செய்தார். இவ்வாறாக மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் வளர்ச்சி பெறுவதற்கு பல்வேறு வகையில் இன்னோரன்ன பல செயற்பாடுகளை மேற்கொண்டு வெற்றி கண்டவர்.

அகில இலங்கை ரீதியில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பெயரை முன்னிலை வகிக்கச் செய்த நிர்வாகத் திறன் கொண்டமைந்த அதிபராக சிறப்பிற்குரியவர். இணைபாட விதான செயற்பாடுகளான விளையாட்டுப் போட்டி, ஆங்கில தினப்போட்டி, தமிழ்த் தினப் போட்டி என்பவற்றில் தேசிய மட்டச் சாதனை புரிய வைத்த பெருமைக்குரியவர். தமிழ்த் தினப் போட்டியில் 2014ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் அதிகளவான முதலிடத்தை பெற்றுக் கொண்ட மகளிர் கல்லூரியாக விளங்கச் செய்தவர். இரண்டு தனிநடனம், ஒரு குழுநடனம், ஒரு இலக்கியத் திறனாய்வு என நான்கு நிகழ்வுகளும் முதலிடம் பெறச் செய்து மாகாண, வலய கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளின் பாராட்டினைப் பெற்றுக் கொண்டவர். இவற்றுக்கெல்லாம் காரணம் அதிபர் அவர்களின் அயரா முயற்சியும் ஆசிரியர்களுக்கு வழங்கிய ஊக்குவிப்பும் ஒத்துழைப்புமே என்றால் மிகையாகாது.

அடுத்து கல்விப் பெறுபேறுகளை பொறுத்த வரையிலும் அதிபர் கல்லூரிக்கு வருகை தந்த காலத்திலிருந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்து சேவையிலிருந்து ஓய்வு பெறும் வருடமாகிய 2022இல் க.பொ.த சா/த பரீட்சையில் 12 மாணவர் 9A சித்தி பெற்று 89.47 % மான மாணவர்கள் உயர் தரத்திற்கு தகுதி பெற்றும் க.பொ.த உ/தரத்தில் இரண்டு மாணவிகள் மருத்துவத்துறைக்கும், ஒரு மாணவி பொறியியல்துறைக்கு உட்பட 68 மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர். இவரது பத்து ஆண்டுகள் சேவைக் காலம் ஒரு பொற்காலம் என்றே கூறலாம்.

எண்ணிய பணிகளை திண்ணியமாக முடிக்கவல்ல கண்ணியமான எமது அதிபரது சேவைக்காலம் சிறந்து விளங்கியது போல அவரது ஓய்வு காலமும் குடும்பத்துடன் சிறப்புற விளங்க எல்லாம் வல்ல நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகரின் அருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

வாழ்க பல்லாண்டு

**திருமதி.பத்மாவதி தாமோதரகுமார்**
பகுதித் தலைவர் (தரம் II),
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமை மிக்க அதிபர்

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர்கள் வரிசையில்

நிமிர்ந்த நடையும்
நேர் கொண்ட பார்வையும்
தெளிந்த ஞானச் செருக்கும்

கொண்டவர் எமது அதிபர் பத்து வருடங்கள் அவருடன் பணி புரிந்த பசுமையான நினைவுகள் அழியாத கல்விக் கோலங்களாய் கண்ணிலும் கருத்திலும் வந்து நிறைந் திருக்கும் அழகிய இத்தருணங்களில் அவர்கள் பற்றிய சில தடயங்களை பதிவிட விழை கிறேன்.

"நான் இங்கு இருப்பதால் இவ்விடம் அழகாகத் திகழ வேண்டும்" என்னும் கல்லூரியின் மகுடவாசகத்தை தமது மனதிலே இருத்தி அதனை மெய்ப்பிக்கின்ற ஒரு வராகவே எமது அதிபர் செயற்பட்டார். கல்லூரியின் தூய்மை கவின் நிலை என்பவற்றை பேணு வதில் அவருக்கு நிகர் அவரே தான். அதிலும் அழகுணர்வு காண்பவராக தான் திகழ்ந்ததோடு மற்றவர்களையும் திகழ வைத்தார். கல்லூரியின் சூழல் எப்பொழுதும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமைந்திருக்கும். கல்லூரியின் முன்றலில் மட்டு மன்றி அலுவலக முன்பின் பகுதிகளிலும் பூந்தோட்டத்தை அமைத்து தனது நேரடிக் கண் காணிப்பில் காலத்துக்கு காலம் ஏற்ற புதியவகை பூஞ்செடிகளை நாட்டி ரம்மியமான சூழலை ஏற்படுத்தினார். எம் கல்லூரியை தரிசிக்கும் அனைவரும் இது பற்றி கூறிச் செல்வதுண்டு.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கான அளவுச்சுட்டி வெறுமனே கல்விப் பெறுபேறுகள் மட்டுமல்ல. மாணவர்களின் ஒழுக்கம் அடக்கம் கட்டுக்கோப்பு நேர்த்தியான செயற்பாடுகள் என்பவற்றாலும் அளக்கப்படும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி சைவப் பாரம்பரியம் மிக்க எமது கல்லூரியின் மாணவிகளை சைவசமய ஆச்சாரங்களை கடைப்பிடிக்கவும் சைவ விழுமியங்களைப் பேணவும் வழிசமைத்தார்.

அதிபர் பதவியில் அவர் ஆளுமை மிக்க முகாமையாளராக இருந்தது கல்லூரியை வழிநடத்த நல்ல கருவியாய் அமைந்திருந்தது. அவரின் கல்லூரிசார் செயற்பாடுகளுக்கு அவரது அணுகுமுறைகள் தொடர்பாடல் திறன் வசீகரத்தன்மை என்பன சாதகமாக அமைந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம். கல்லூரியின் பெற்றோர், பழைய மாணவிகள், நலன்விரும்பிகள் கல்வி அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகிய அனைத்து தரப்பி னரோடும் மிகவும் நட்புரிமையோடு அன்பாகவும் பண்பாகவும் இனிமையாக கதைத்து காரி யங்களை சாதிக் கும் தனித்திறமை வாய்ந்தவர். அதன் காரணமாக நிர்வாக கட்டமைப்பி லும் பௌதீக வளம் சார்ந்த விடயங்களிலும் பல மாற்றங்களைப் படைத்தவர்.

கற்றல் கற்பித்தலுக்கு அத்திபாரமாய் அமைவது பௌதீக வளங்களாகும். இவர் காலத்தில் வகுப்பறைகள் பல புதுப்பிக்கப்பட்டதோடு புதிய தொழிநுட்ப ஆய்வுகூடமும் நிறு வப்பட்டது. பழைய மாணவிகளின் பங்களிப்புடன் மண்டபம் ஒன்றுடன் கூடிய வகுப்ப றைத் தொகுதிகள் கொண்ட "பவள விழா மண்டபம்" மஹிந்தோதய ஆய்வுகூடம், நவீன வசதிகள் கொண்ட **U.S.A** கட்டடம், நவீன மலசலகூடம் என்பன அமையப் பெற்றன. நூலகப் புனரமைப்பு பிரதான மண்டப புனரமைப்பு என்பவற்றுடன் சேறும் சகதியுமாக காணப்பட்ட கல்லூரியின் உள்ளக வீதிகள் நுழைவாயில் என்பன புதுப்பொலிவு பெற்றன. அத்துடன் பொது நிகழ்வுகளில் ஆசிரியர்களோடு மாணவர்களும் வசதியாக இருந்து பார்ப்பதற்காக பிளாஸ்ரிக் கதிரைகள் பலவற்றையும் பெற்றுக் கொண்டார்.

மாணவர்கள் கல்வியில் மட்டும் ஆற்றல் உள்ளவர்களாக இருக்காமல் இணைபாட விதான செயற்பாடுகளிலும் இயல்பாகவே பங்கேற்கும் வகையில் ஓர் உன்னத ஊக்கு விப்பாளராகச் செயற்பட்டார். தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், விஞ்ஞான மன்றம், இந்து மன்றம், உடற்கல்வி மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், கவின் மன்றம், கணித மன்றம், மனைப்பொருளியல் மன்றம், கணினி மன்றம், உயர்தர மாணவர் மன்றம் விவசாய மன்றம் முதலிய பாடத்துறை சார் மன்றங்களுக்கும் பல கழகங்களுக்கும் செயலுருவம் கொடுத்து மாணவர்களை சமூக இசைவாக்கம் பெறச் செய்வதற்காக ஆசிரியர்களாகிய எம்மையும் ஊக்குவித்து செயற்பட வைத்த எம் அதிபரின் ஆளுமை வியந்து போற்றுதற் குரியது. இதற்கு சான்று பகர்வனவாக தொடர் தேர்ச்சியாக எமது கல்லூரி தமிழ்த்தினப் போட்டிகளில் பல பதக்கங்களை தனதாக்கிக் கொண்டதோடு விளையாட்டுப் போட்டிகள் , ஆங்கில போட்டிகள், சமூக விஞ்ஞான போட்டிகள், அரச நாடக விழாக்கள் என்பவற்றி லும் தேசிய விருதுகள் பலவற்றை எமது மாணவர்கள் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

அதிபர் அவர்களின் கற்றல் நடவடிக்கை சிரத்தையின் ஓர் அங்கமாக க.பொ.த சா/தர, உயர் தர மாணவர்களுக்கான காலை நேர வகுப்புக்கள் நடைபெறுவதற்கு ஆசிரி யர்களும் மாணவர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட்டமையை எடுத்துக்காட்ட லாம். இதன் பயனாக கடந்த காலங்களில் கல்விப் பெறுபேற்றுச் சுட்டிகள் அதிகரித்துள்ளன. க.பொ.த சா/தரத்தில் 9A உட்பட அனைத்துப் பெறுபேறுகளும் உயர்ந்தன. க.பொ.த உயர் தரத்தில் மருத்துவ பீடம், பொறியியல் பீடம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பல்கலைக்கழகங்களுக்கு பல மாணவர்கள் வருடா வருடம் அனுமதி பெறுவது இவரது ஆளுமையின் இன்னோர் அங்கமாகக் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் அவர்களின் நிர்வாகத்திறன் கல்விச்சாதனைகள் இணைபாடவிதானச் சாதனைகள் கருதி கல்வியின் உயர்விருதான 'பிரதீபா பிரபா' விருதினை இருமுறை அரசு வழங்கிக் கௌரவித்தமை பெருமைக்குரிய விடயமாகும்.

அவரிடம் நான் கண்ட இன்னுமொரு இலட்சணம் நேரந்தவறாமை. சாதாரண பாடசாலை நாட்களாக இருந்தாலும் கூட்டங்களோ, விழாக்களோ, வழிபாடோ எதுவாக இருந்தாலும் உரிய நேரத்திற்கு முன்னரே வருகை தந்து விடுவார். மற்றவர்களும் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் கண்டிப்பு மிக்கவர்.

கல்லூரியில் நடைபெறும் விழாக்கள் எதுவாக இருந்தாலும் அவரது நேரடிக் கண்காணிப்பு இருக்கும். அரங்கு தொடங்கி நிகழ்ச்சி நிரல் வரை சகல நிகழ்வுகளையும் முதன் நாளே மேற் பார்வை செய்து ஒழுங்கமைப்பார். எதிலும் தூய்மை, பூரணத்துவம், வழுவின்மை என்பவற்றை எதிர் பார்த்து எங்களது செயற்பாடுகளை நோக்கும் தன்மை கொண்டவர். நாம் பார்த்து பார்த்து ஒழுங்கமைத்து திருப்திப்பட்ட செயற்பாடுகளில் அதிபர் ஒரு பார்வையிலே தவறுகளை இனங்கண்டு சுட்டிக் காட்டி விடுவார். இது அவரது ஆழ்ந்த நிதானமான உற்று நோக்கும் சீர்ப்படுத்தும் தன்மையைக் கண்டு நாம் பிரமித்துப் போனதுண்டு. ஆசிரியர்களோ, மாண வர்களோ தவறுவிடும் சந்தர்ப்பங்களில் அவர்களை திருத்துவதற்காக கண்டிப்புடன் நடந்து கொள்வார். எனினும் எதனையும் மனதிலே வைத்து சாதிக்காது உடனே அவற்றை மறந்து விடும் உயரிய பண்பு கொண்டவர். "காய்க்கின்ற மரம் தான் கல்லெறிபடும்" என்பார்கள். அதேபோல் சகல விதங்களிலும் திறமையாக பணிபுரிகின்ற ஆசிரியர்களே எமது அதிபரின் கண்டிப்புக்கு ஆளாகும் சந்தர்ப்பங்களும் அதிகம். இதனை அதிபர் அவர்களே ஏற்றும் கொள்வார். "வேலை செய்யிற ஆட்கள் தான் வேண்டிக்கட்டிறியள் சரி என்ன செய்யிறது சரியாச் செய்யுங்கோ" என்று கண்டிப்பின் பின் கரிசனை காட்டிய நாட்கள் ஏராளம்.

வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்பதல்ல. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கான ஒழுங்கு விதிகளை மாணவர்களுக்கு எடுத்துக் காட்டுவதிலும் ஆசிரியர்கள் நடை, உடை, பாவனையில் மாணவர்களுக்கு முன்மாதிரியாக திகழ வேண்டும் என்பதிலும் அதிக அக்கறை உடையவராகச் செயற்பட்டார்.

கலைகளை நயக்கும் ஆற்றலிலே அவருக்கு நிகர் அவரேதான். இசை நடன நாடக கலைகளிலே மாணவர்கள் பங்குபற்றும் போது அவர்கள் விடும் தவறுகளை இனங்கண்டு சுட்டிக் காட்டி திருத்துகின்ற கலை ஆளுமை அவரிடம் காணப்பட்டது. இது எமது கல்லூரி தேசிய சாதனைகளை நிலை நாட்ட ஏதுவாய் அமைந்தது எனலாம்.

கடமை நேரங்களில் கண்டிப்போடு திகழும் அதிபர் அவர்கள் தனிப்பட்ட ரீதியில் ஏற்றத் தாழ்வுகள் எதுவுமின்றி அனைவரோடும் கனிவாக இன்முகத்தோடு பேசுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பு கொண்டவர். ஆசிரியர்கள் கல்வி சாரா ஊழியர்கள் இல்லங்களில் இடம்பெறும் இன்ப துன்ப நிகழ்வுகள் எதுவாக இருந்தாலும் எவ்வளவு தொலைவில் அவை நிகழ்ந் தாலும் அதிபரின் பிரசன்னம் நிச்சயம் அங்கே இருக்கும். இவர் இன்னார் இவர் இனி யார் என்ற பேதம் அவரிடம் எப்போதும் இருந்ததில்லை. துன்பக்கடலில் துவளுகின்ற ஆசி ரியர்களை ஆற்றுப்படுத்துகின்ற ஒரு சீர்மையாளராக நான் அவரைப் பார்த்ததுண்டு.

எமது கல்லூரியின் பழைய மாணவியான இவர் 'இது எனது கல்லூரி' என்ற நேரிய சிந்தனை கொண்டவர். தன்னை வளர்த்தெடுத்த தாய்க்கு தன்னாலான பணிகளை செவ்வனே செய்ய வேண்டும் என எண்ணிச் செயற்பட்டவர். இவரது சிந்தனையின் செயலுருவமே எமது கல்லூரி ஸ்தாபகரான விசாலாட்சி அம்மையாரின் சிலை வடி வமைப்பு எனலாம். இவரது சிந்தனைகளில் பல செயலுருவம் பெற்ற போதும் 'மைதான பார்வையாளர் அரங்கு நிறைவு பெறாதமை' மனவேதனைக்கு உரியது என பல சந்தர்ப் பங்களில் மனம் நொந்து கொள்வார்.

பல்துறை ஆற்றலும் நேரிய சிந்தனையும் செயலூக்கமும் கொண்ட அதிபர் அவர்க ளின் பணி நிறைவு இந்து மகளிர் கல்லூரிக்கு ஒரு பேரிழப்பு என்றே நான் கருதுகின் றேன். இவர் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் மாணவர்கள் ஆசிரியர் மனங்க ளில் என்றும் நிறைந்திருப்பார். கல்லூரியின் ஒவ்வொரு அங்கத்திலும் இவரது சுவடுகள் பதிந்திருக்கும்.

மலை போல் இடர் வரினும் இடராது நின்று சாதனைகள் பல படைத்த திண்ணிய நெஞ்சும் திடமான சிந்தனையும் இறையாசியுடன் கூடிய அருளும் கொண்ட அதிபரிடம் நான் கற்றுக் கொண்டவை ஏராளம் ஏராளம். அவை அனைத்தும் என் இதயச் சிறையில் நிறைந்திருக்கும்.

எமது அதிபர் அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றாலும் உடல் ஆரோக் கியத்தோடு கல்வி மற்றும் சமூகப் பணிகளை தொடர்ந்து செய்வதற்கு எல்லாம்வல்ல நடுத் தோட்ட இராஜவரோதய பெருமான் அருள் பாலிக்க வேண்டும்.

வாழ்க வளமுடன்

**திருமதி.கணேஸ்வரி தனமூர்த்தி**
முன்னைநாள் பகுதித் தலைவர் (கலைப்பிரிவு),
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1984இல் ஒன்றாய் இணைந்து கற்றதன் மூலம் ஆரம்பித்த நட்பின் நாயகி மிமலாவே! இன்று வரை எமது நட்பு எவ்வித சஞ்சலமும் இன்றிச் சரளமாகத் தொடர்வது குறித்து மகிழ்ச்சியும் நிறைவும் அடைகின்றோம். தனியே உம்மோடு மட்டும் இல்லாது, எம்மோடு இணைந்து கற்ற உமது காதல் நாயக னாக இருந்து வாழ்க்கைத் துணையாகக் கிடைத்த விமலும் எம்மோடு கற்று எனது வாழ்க்கைத் துணையாக அமைந்த கமலாவுமாக நாங்கள் நால்வருமே ஆழ்ந்த நட்போடு உறவாடும் வாய்ப்புக் கிடைத்தற்கரியதே.

குறிப்பாக உமது துணையான விமல் என்னோடு, எம்மோடு பாராட்டும் நட்புக்குப் பதிலீடே இல்லை எனலாம். இன்பமோ - துன்பமோ நீங்கள் இணையாத எமது வீட்டுச் சம்பவங்கள் எதுவுமே இல்லை. எவ்வளவு சிரமம் என்றாலும் நட்புக்காக அதனைத் தாங் கத் தயாராய் இருக்கும் உங்களின் நட்புக்கு இணையாக எதையும் குறிப்பிட முடியாது. நாற்பது வருடங்கள் தாண்டித் தொடரும் இந்த நட்பு எவரது கண்ணும் படாது, மீதமுள்ள காலமும் இன்றுபோல் தொடர வேண்டும் என இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

கரவெட்டி கப்புதூரில் பிறந்து உயர் கல்வியை யாழ் நகரில் கற்றுப் பட்டங்கள் பெற்று, இன்று கற்ற கல்லூரிக்கே முன்மாதிரியான அதிபராகப் பணியாற்றி முன்னணிக் கல்லூரி யாக இந்து மகளிர் கல்லூரியைக் கொண்டு நடத்திய பெருந்தகையே! உந்தன் பண்பை என்னென்போம்.

கலகலப்பாக நகைச் சுவையோடும், நட்பாகவும், பெருமைக்குணமின்றியும் உறவாடும் பாங்கு தனித்துவமானது. நண்பன் விமலோடு இணைந்து நடாத்தும் இல் லறத்தின் விதம் அது ஒரு தனிவிதம். புத்திரன் சிந்துவைக் கையாளும் வகையும் தனித் துவவமானதே. ஊரோடு, உறவோடு, நட்புக்களோடு நீங்கள் இருவரும் அணுகிக்கொள் ளும் விதம் உங்களுக்கான தனி வழி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் நடந்த இயற்கை, செயற்கை, அனர்த்தங்களான சுனாமியும், யுத்தமும் எங்கள் வாழ்வில் செலுத்திய தாக்கங்கள் எல்லாம் கடந்து இன்னும் இந்த நிலையில் நாம் நிமிர்ந்து நிற்க இறைவன் விட்ட வழிக்கு நன்றி கூறுவோம் நட்புக்களே.

வன்னேரிக்குளம் ம.வி. இல் நான் அதிபராக இருந்த வேளை உறவுகளோடு நீங்கள் இடம் பெயர்ந்து வந்து தங்கியமை, கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளைத் தவிர்த்து நாம் இடம் பெயர்தோர் நலன்புரி நிலையங்களாகப் பாடசாலைகளை நடத்தி யமை, பன்றிக் கறிசமைத்தமை, கூறைச்சேலை உட்பட பாதுகாப்புக்காக நீங்கள் எம்மி டம் வைத்த உடைமைகளை கறையான் சாப்பிட விட்டமையால் நான் கொண்ட கவலை, சொத் துக்களின் இழப்பைப்பற்றி எதுவுமே அலட்டிக்கொள்ளாத நட்பின் தன்மை என இக் கணத் தில் எம் மனத்திரையில் ஓடிய சில பழைய நினைவுப் பதிவுகளை மீட்டிப் பார்க்கி றோம்.

வாழும் காலம் மீதமும் நட்பாய், ஒன்றாய் வாழ்ந்திருப்போம் நட்புக்களே. மணி விழாக் கண்டு சமூகப் பணியில் தன் பொழுதைக் கழிக்கும் விமலுடன், ஓய்வின்பின் நீரும் இணைந்து துணைக்குத் துணையாய் இருப்பீர் என எதிர்பார்க்கிறோம். ஓய்வின் பின்னரான காலமும் துன்பங்கள் இன்றி இன்பமாய் அமைய இறைவன் அருள்புரிய வேண்டுமென அன்புத் தோழியை நட்போடு வாழ்த்தும் நட்புக்கள்.


**குகன் + கமலா**

**(குகானந்தராசா + கமலாதேவி),**

**(கோட்டக்கல்வி பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்)**

**பல்கலைக்கழக நண்பர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகியை மனங்குளிர வாழ்த்துகின்றேன்

கல்வித்துறையில் பணியாற்றியோர் ஓய்வு பெறும் வேளையில் அவர்களை வாழ்த்தி புகழ்மாலை சூட்டி மிக கண்ணியமான கௌரவிப்புடன் அவர்களது ஓய்வுநிலை வாழ்வு சீரும் சிறப்புமாக அமைய வேண்டுமென ஆசிகூறி விடையளிப்பது என்றும் மகிழ் வைத் தரும் செயற்பாடாகும்.

யாழ் நகரின் முன்னணி பாடசாலையில் ஒன்றான இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வு பெறும் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களும் அவரது கணவரும் எமது பல்கலைக்கழக வாழ்வில் ஒன்றாக பயணித்தவர்கள். இன்றும் எங்கள் நட்பு தொடர்ந்த வண்ணமே உள்ளது. அந்த வகையில் எமது பல்கலைக்கழக தோழியின் மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இவர் மாணவர் மீது காட்டுகின்ற அன்பு அவர்களின் கல்வி மீதான அக்கறை அவர்களின் நடத்தையில் காட்டுகின்ற கரிசனை அன்பான பேச்சு ஆசிரியர்களுடன் சகோத ரத்துவ உணர்வுடன் பழகும் விதம் அவரது கல்விப்புலம் சார்ந்த அறிவு என்பன இவர் ஒரு சிறந்த கல்வியியலாளர் என்பதை அறிய முடிகின்றது.

உலகில் மனிதன் மாண்புற கல்வி எனும் கண் சிறப்பு பெறுகிறது. இச்சிறப்பை அறிபவர்கள் குருவாகவும் போற்றப்படுகின்றனர். அவ்வாறு போற்றுதற்குரியவராய் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் விளங்குகின்றார்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபாராட்டும் உலகு"

என்ற வள்ளுவர் கூற்று மணிவிழா நாயகியாகிய திருமதி மிமலாதேவி. விமலநாதனுக்கும் பொருந்துவதாகவே உள்ளது. இத்தகைய பெருமகள் ஓய்வு காலத்தில் வாழ்க்கைத் துணையுடனும் பிள்ளையுடனும் நிறைவான வாழ்க்கை வாழ இறைவனை வேண்டி மனங்குளிர வாழ்த்துகின்றேன்.

**திரு.செ.அல்பிறட்**
**அதிபர்.**
**பல்கலைக்கழக நண்பன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியலின் வழிகாட்டி

அன்பு மகன் வி.சிந்துஜன்



## அம்மாவின் கல்விச் சேவையால் நான் உயர்ந்தேன்....

அம்மா கல்வி கற்று பத்து ஆண்டுகள் அதிபர் பணி புரிந்த கல்லூரி யாழ்.இந்து மகளிர் கல்லூரி. கல்வி விருத்திக்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டதன் விளைவு நான் கல்வியில் ஈடேறக் காரணம் எனலாம். நான் இந்து மகளிர் கல்லூரியின் அதிபரின் மகனென்று வீறுநடை போட முடிந்தது. ஒவ் வோர் முறையும் பொதுப் பரீட்சை முடிவுகள் வெளிவரும் போதும், இணைக் கலைத் திட்ட முடிவுகள் வெளியாகும் போதும், வீட்டிலும் வெளியிலும் அம்மாவின் கல்லூரிப் புகழ் ஓங்கி ஒலிக்கும். அப்போதெல்லாம் அம்மா ஆனந்தத்தில் மூழ்குவது போல நானும் மகிழ்ச்சியில் திளைப்பேன்.

அம்மாவின் ஓய்வு காலம் பொதுச்சேவை செய்வதிலும் எனது கல்வியிலும் செலவாக எல்லாம் வல்ல பரம்பொருள் துணை புரிய வேண்டும். அம்மா ஆரோக்கியமாகவும், மகிழ்வாகவும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை விபரம்

## திருமதி. மிமலாதேவி விமலநாதன் SLPS – I

**(B.A (Hons), PGDE, M.Ed)**

*ஆசிரியர் சேவை*

1. கிளி/ வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
   1989 - 1995
2. கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்
   1995 - 1997
3. வவு/ இறம்பைக்குளம் மகா வித்தியாலயம்
   1997 -
4. தி/ சாம்பல் தீவு மகா வித்தியாலயம்
   1998 -
5. தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி
   1998 - 2002

*அதிபர் சேவை*

1. தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரி
   2002 - 2005
2. யா / நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்
   2005 - 2009
3. யா / சன்மார்க்க வித்தியாலயம்
   2009 - 2012
4. யா / யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி
   2012 - 2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் பாதையில் சாதனைத் தடங்கள்



யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக சேவையாற்றி அகவை அறுபதில் ஓய்வு பெறும் அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்களை கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

அம்மையார் அவர்கள் கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதியினருக்கு 02-08-1962 ஆம் ஆண்டு ஆறாவது புத்திரியாக பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யா/ கப்புதூ ஏகாம்பர வித்தியாலயத்தில் பெற்றார். பின்னர் இடைநிலைக் கல்வியை யா/ வதிரி திரு இருதயக் கல்லூரியிலும் பின்னர் யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் பெற்றார்.

கல்வியில் அதிக ஈடுபாடும் திறமையும் கொண்ட இவர் தனது உயர்தரக் கல்வியை யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் பெற்றார். கல்லூரி விடுதியில் தங்கியிருந்து இவர் கல்வி பயின்றார்.


பின்னர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகி அங்கு சென்று புவியியலை சிறப்புப் பாடமாகக் கற்றார். 1982 - 1986 காலப் பகுதியில் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக்கொண்ட அம்மையார் 1988 - 1989 காலப் பகுதியில் புவியியல் துறையில் கட்டுரை ஆசிரியராக (*Tuitor*) பணியாற்றியமை அவரின் ஆளுமையை வெளிப்படுத்துகிறது.

20-01-1989 ஆம் ஆண்டில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றார். கிளி/ கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்வரின் பசுமையான நினைவுகளில் சில நிழல்கள் ....












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி/ கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயம், வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், தி/ சாம்பல் தீவு தமிழ் மகா வித்தியாலயம், தி/ உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி என்பவற்றில் ஆசிரியராக உன்னத பணியாற்றினார்.



கல்லூரியில் ஆசிரியராக செயற்பட்ட காலத்தில் அம்மையார் புவியியல் பாடத்தை மாணவர்க ளுக்கு திறம்பட கற்பித்து மாணவர்கள் புவியியல் பாடத்தில் 100% சித்தி பெற காரணமாக இருந் தமை குறிப்பிடத்தக்கது.

அம்மையார் அவர்கள் 08-02-1989 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் சகபாடியாக கல்வி கற்ற கந்தசாமி விமலநாதன் அவர்களுடன் இல்லற பந்தத்தில் இணைந்து கொண்டார்.

பாடத்துறைக்கு அப்பால் அம்மையார் அவர்கள் பல்வேறு செயற்பாடுகளை சிறப்பாக இணை பாட செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தவர். இல்லப் பொறுப்பாசிரியர் , உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர் பதவிகளை ஏற்று மாணவருக்கு முன் உதாரணமாக நல் வழிகாட்டியாக செயற்பட்டவர்.

அதிபர் உள்ளிட்ட பாடசாலை முகாமைத்துவ குழுவுடன் இணைந்தும், உயர் தர மாணவர் மன்றம், கலை நிகழ்வுகள், நாடகப் போட்டிகள் என பல நிகழ்வுகளை தன் கணவருடன் இணைந்தும் மேடையேற்றியமை அவரது ஆளுமையின் மற்றொரு பரிமாணம் எனலாம்.

வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் பணியாற்றிய காலத்தில் இல்லங்களுக்கு இடையேயான உடற்பயிற்சிப் போட்டியில் மூன்று வயதுப் பிரிவினரை சம காலத்தில் பயிற்றுவித்து போட்டியிட வைத்தமை அம்மையாரின் விளையாட்டு நிகழ்விலும் சளைக்காத அவரின் ஆற்றலை பறைசாற்றி நிற்கின்றது.

அக்காலத்தில் கல்லூரியின் அதிபராக இருந்த அருட்சகோதரி மருத்தீன் அவர்களால் சிறந்த ஆசிரியர் என்ற பாராட்டையும் அம்மையார் அவர்கள் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி/ சாம்பல்தீவு மகா வித்தியாலயத்தில் பல காலம் நடைபெறாது இருந்த விளையாட்டுப் போட்டியை பூரணமாக நடத்தியதோடு உயர்தர மாணவர் மன்ற ஒன்று கூடலையும் சிறப்பாக நடத்தி அம்மையார் அவர்கள் பாராட்டுப் பெற்றமை அவரது ஆசிரியப் பயணத்தின் சாதனைத் தடங்கள் எனலாம்.

2000 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 01-01-2002 ஆம் ஆண்டு உவர்மலை விவேகானந்த கல்லூரியில் பிரதி அதிபராக இணைந்து கொண்டார். பின்னர் 2005 ஆம் ஆண்டு யா / நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராக இணைந்தார். இக் காலத்தில் மிமலாதேவி விமலநாதன் தம்பதியினர் "சிந்துஜன்" என்ற புத்திரனைப் பெற்று மகிழ்வு பெற்ற காலமாக அமைந்தது. தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு யா/ சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி, 2012 ஆம் ஆண்டு முதல் யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் தனது அதிபர் சேவையயினை நிறைவாக ஆற்றி வருகின்றார்.

யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி வரலாற்றில் இந்து மகளிர் அன்னை பெற்றெடுத்த "முத்து" அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் என்று கூறலாம். காரணம் கல்லூரியின் வளர்ச்சியை பன்மடங்காக்கினார். பாடத் துறை அதற்கு அப்பால் விளையாட்டு உள்ளிட்ட இணைப்பாட செயற்பாடுகள் அனைத்திலும் மாணவர்கள் தேசிய மட்ட சாதனைகளை நிகழ்த்துவதற்கு காரணம் அம்மையார் அவர்கள் கொடுத்த ஊக்கமும் நெறிப்படுத்தலும் என்றால் யாராலும் மறுக்க முடியாது.



பாடசாலைச் சூழலை கவின் நிலையாக்கியதோடு மாணவர்களின் ஒழுக்கம், ஒழுங்கு என்பவற்றில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டவர்.

"பெண் தலைமைத்துவத்திற்கு" சிறந்த ஒரு முன் மாதிரிப் பெண்மணியாக தனது நடைஉடை, பாவனையில் செயற்பட்டவர். தமிழ்ப் பண்பாடு, இறை பக்தி, நல் ஒழுக்கம், இங்கிதமான உரையாடல் பாங்கு, மனங்களை காயப்படுத்தாத பண்பு கொண்ட செயற்பாடு என அனைத்திற்கும் முன் மாதிரியாகச் செயற்பட்ட அதிபர் அம்மையார் அவர்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு நிகழ்வுகளிலும், தமிழ்த்தின நிகழ்வுகளிலும் ஆங்கில தின நிகழ்வு களிலும் ஏனைய போட்டிகளிலும் மாணவர்கள் தொடர்ச்சியாக தேசிய மட்ட சாதனையை நிலைநாட்ட முன்னின்று உழைத்தவர்.



2015 ஆம் ஆண்டு அவரது வினைத்திறனான செயற்பாடுகள் நோக்கப்பட்டு "பிரதீபா பிரபா விருது" பெற்றமை அவருக்கும் பாடசாலைக்கும் கிடைத்த சிறப்பு எனலாம்.

2019 ஆம் ஆண்டு மாகாணத்தால் அதே விருது வழங்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது. பாடசாலையின் எந்த விழாவாயினும் அம்மையார் அவர்களின் ஒத்திகைபாராது அரங்கேறாது.

ஒவ்வொரு செயற்பாட்டையும் கலைநயத்தோடு நுணுகி ஆராய்ந்து செயற்படுத்துவார். கலா ரசிகையாக அவர் பங்கெடுப்பது இக் கல்லூரி பெற்ற வரம் எனலாம்.

முகாமைத்துவ நிலையில் வினைத்திறன் மிக்க ஒருவராக பல்வேறு முகாமைத் துவ தந்திரோபாயங்களை நேர் மனப்பாங்கு முறையில் செயற்படுத்துபவர். ஏனையவர்களுக்கு வியப்பாகவும், அறிய வேண்டியவையாகவும் அவரது முகாமைத்துவ நுட்பங்கள் பரிணமிக் கும்.

நடுத்தோட்ட விநாயகரை நாளும் வணங்கும் அம்மையாரின் பக்தி கல்லூரிச் சமூகத்தையே மெய் மறக்க வைக்கும். கோவில் பூசைகள் விசேட வழிபாடுகளுக்கு முக் கியம் கொடுத்து செயற்படுத்துபவர்.

அவரது செயற்பாடுகளுக்கு அவரது கணவர் விமலநாதனும் தோள் கொடுத்து, கரம் கொடுத்து பக்க துணையாக இருந்து வந்துள்ளார்.

கல்லூரி பாடத்துறையில் 100% அடைவைப் பெற அரும்பணி ஆற்றியவர். மேலதிக வகுப்புக்கள், விசேட செயற்றிட்டங்கள், கல்விச் சுற்றுலாக்கள் என அனைத்திற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்பு வழங்கி அடைவு மட்டத்தை உயர்தியவர். அத்தோடு பல்கலைக்கழகத்திற்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தி கல்லூரி வரலாற்றில் சாதனைத் தளங்களை உருவாக்கியவர்.



அம்மையார் அவர்கள் பாடசாலையில் பௌதீக வளத்தினை பல்வேறு வழிகளிலும் மேம்படுத்தி உள்ளார். பாடசாலை அபிவிருத் திச் சங்க நிதியுடனும் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்புடனும் அரசின் நிதியுதவியுடன் பல்வேறு செயற்றிட்டங்களை செவ்வனே நிறை வேற்றியுள்ளார்.

அம்மையாரின் காலப்பகுதிக்குள் மகிந் தோதய ஆய்வுகூடம் (2015) U.S.A Block, பவளவிழா மண்டபம் (2017) போன்றன உருப்பெற்றன. மேலும் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் கழிப்பறைகள் (Bath rooms) புதிதாக உருவாக்கப்பட்டும், இருந் தவை சீர்செய்யப்பட்டும் உள்ளன. அத்தோடு ஆசிரியர் ஓய்வறை திருத்தம் செய்யப்பட்டு Tiles போடப்பட்டு கவின்நிலையாக்கப்பட்டுள்ளது.

அம்மையார் பாடசாலையைப் பொறுப்பேற்ற போது பெரும்பாலான வகுப்புக்கள் மின்சார வசதி அற்றுக் காணப்பட்டன. இந்நிலையில் அனைத்து வகுப்புகளிற்குமான மின் சார வசதி செய்யப்பட்டதோடு காலத்துக்கு காலம்அவை சீர் செய்யப்பட்டும் வந்துள்ளன.

பாடசாலையின் முகப்பு வாயில் Double gate போடப்பட்டு கவின் நிலையாக்கப் பட்டது. மேலும் அருகில் சிறிய Gate போடப்பட்டு முகப்பு வாயிலை அலங்கரித்துள்ளார்.

மாணவர்கள் மழை காலங்களில் சேற்றுப்பாதைகளை கடந்து வகுப்பறைக்குள் செல்வதை தவிர்க்கும் முகமாக பாதைகள் கொங்கிறீட் பாதைகளாக மாற்றப்பட்டன. மேலும் உள்ளக வீதிகள் , ஆசிரியர் வள நிலையத்திற்குச் செல்வதற்கான பாதை என்பன அமைக் கப்பட்டு வகுப்பறைச் சூழல் உள்ளிட்ட பாடசாலைச் சூழல் தூய்மையாக்கப்பட்டது.

தரம் 11 வகுப்பறைகள் முழுமையாக திருத்தப்பட்டதோடு விடுதி மண்டபத்திற்கு நிலம் போடப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி A/L வகுப்புக்கள், தரம் 8,10 ஆம் வகுப்புக்களுக்கும் நிலம் போடப்பட்டு வகுப்பறைகளை ஒழுங்குபடுத்துவதில் அதிக கவனம் செலுத்தினார்.

கற்றல் - கற்பித்தலை வள மூட்டும் வகையில் பௌதீக நிலையை தமது அதிபர் பதவிக் காலத்திற்குள் செவ்வனே மாற்றினார். அந்த வகையில் விசாலாட்சி மண்டபத்தின் நிலம் Teraso போடப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டது. அத்தோடு அதிபர் அலுவலகம் 2015 ஆம் ஆண்டு முழுமையாக திருத்தம் செய்யப்பட்டது. உள்ளக அமைப்பு சிறப்பான முறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யில் காட்சிப்படுத்தல்கள், கண் காணிப்புக்களுக்கு ஏற்ற வகை யில் ஒழுங்கமைத்தல் சிறப்பான முகாமைத்துவ உபாயம் என்று கூடக் கூறலாம். அம்மையார் அவர்களின் காலத் தில் Tech nology Stream ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு பிர தான மண்ட பத்தில் அமர்வதற்கு வசதியாக 1000 பிளாஸ்ரிக் கதிரைகள் கொள் வனவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு மதில் சுவருக்கு பச்சை வர் ணம் தீட்டப்பட்டு பாடசாலைச் சுவர்கள் கவின் நிலையாக்கப்பட்டதைக் காணலாம்.

மாணவர்களின் தளபாடங்கள் இலக்கம் போடப்பட்டு paint பண்ணப்பட்டன. அத் தோடு 2018ஆம் ஆண்டு அழகியல் கூடம் முழுமையாக புனரமைக்கப்பட்டது. அத் தோடு மாடிப்படிகளுக்கு கதவுகள் போடப்பட்டு முழுமையாக வகுப்பறைச் சூழல் - பகுதிகள் புனர மைக்கப்பட்டன. அம்மையார் அவர்கள் கற்றல் கற்பித்தல் பணிகளை செவ்வனே நிறை வேற்ற வழிசமைத்ததோடு கற்றல் கற்பித்தலை வளமாக்கும் வகையில் பௌதீக வளத்திலும் மிகக் கவனம் செலுத்தி கல்லூரியின் வளர்ச்சிக்கு காத்திரமான பங்க ளிப்பை ஆற்றியுள்ளார்.



அம்மையார் அவர்கள் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நிறை வான சேவையினை இக் கல்லூரிக்கு வழங்கி உள்ளார். இக் கல்லூரியை எவ்விதம் முன்னேற்றி ஒரு உயர்ந்த பாட சாலையாக மாற்ற விரும்பினாரோ அனைத்தும் பூரண மாக நிறைவேற்றிய திருப்தி பெற்றுள்ளார். தேசிய பாடசாலையாக இக்கல்லூரியை உயர்த்த வேண்டும் என்ற உயர் நோக்கோடு பெரும் பணி புரிந்தார். அப்பணியும் நிறை வேறி தேசிய பாடசாலையாக தர முயர்த்தப்பட்ட பாடசாலைகளில் ஒன்றாக யாழ் மாவட் டத்தில் இக் கல்லூரியும் திகழ்கின்றமை அவரது ஒரு கல்விப் பாதையின் சாதனைத் தடம் எனலாம்.

நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகரின் அருளாசியுடன் அம்மையார் தம் குடும்ப தினருடன் நீடூழி காலம் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

**தொகுப்பு :**

**திருமதி. பிரேமலா தங்கறூபன்**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆளுமையின் அணிகலம்

பெண் கல்வி வலுவூட்டலில் தன்னிகர் இல்லாத பணியை ஆற்றிய யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்கள் கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்ற இந்த வேளையில் ஆசிரிய நலன்புரி சங்கம் சார்பாக வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டு மனநிறைவு அடைகின்றேன்.

கல்லூரியின் பழைய மாணவியாக புவியியல் பட்டதாரியாக முன்னுதாரணமான ஆசிரியையாக எடுத்துக்காட்டான அனைத்து தலைமைத்துவ பண்புகளும் ஒருங்கே நிறைந்த முதல்வராக பல பாடசாலைகளிலும் சேவையாற்றி கடந்த பத்து ஆண்டுகளாக எமது கல்லூரியை நேர் மனப்பாங்குடன் வளர்ச்சிப் பாதையில் கல்லூரி தடம் பதிப்பதற்கு முன்நின்று உழைத்தவர். பல தரப்பினரையும் வழிகாட்டியவர் என் பெருமதிப்புக்குரிய அதிபர் என்றால் சந்தேகம் இல்லை.

"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற"

என்ற பொது மறையின் அடையாளமாக கல்லூரி அன்னையை சகல நிலைகளிலும் மனத்தைரியத்தோடு வழிநடத்தி மாணவிகளின் கல்வி அடைவு இணைக்கலைத்திட்ட வளர்ச்சி போன்றவற்றுடன் கல்லூரி பௌதீக வளவிருத்திக்கும் எண்ணம் சொல் செயல் என்ற திரிகரணங்கள் மூலம் உழைத்தவர். எல்லோரும் வாழ்த்தி நிற்கும் எமது அதிபர் என்றால் கருத்து வேறுபாடு இல்லை.

க.பொ.த சா/த, க.பொ.த உ/த போன்ற பொதுப் பரீட்சைகளில் மாணவிகளின் அடைவு சவால் மிக்க கல்லூரிகளுடன் போட்டி போடக்கூடிய நிலையை அடைய மாணவி களையும் ஆசிரியர்களையும் வழிகாட்டி வெற்றி கண்டவர் அதிபர் என்பதை பெறுபேறுகள் சான்று படுத்துவதை இந்த இடத்தில் முன்னிலைப்படுத்துகின்றேன். இணைக்கலைத்திட்டத் திலும் முன்னணிப் பாடசாலைகளுக்கு முன்னுதாரணமான கல்லூரியாக தொடர்ந்து வந்த ஆண்டுகளில் சாதனையை நிலைநாட்ட உழைத்தவர் என்பதை இந்த இடத்தில் பெரு மனத்துடன் சுட்டிக் காட்ட முனைகின்றேன்

கல்வி சார்ந்த நிறுவனங்களையும் கல்வி சாரா நிறுவனங்களையும் கல்லூரி யுடன் பொருத்தமான வகையில் இணைத்து மாணவிகளின் மேம்பாட்டுக்கு வள விருத்தியை ஏற்படுத்த உழைத்தவர் அதிபர். ஓய்வு காலத்தில் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புமாக வாழவும் தொடர்ந்து எமது கல்லூரிக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டலை யும் வழங்கவும் எல்லாம்வல்ல பரம் பொருளை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

**திரு.வி.குகநாதன்**
தலைவர் - ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

எமது யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் அன்பிற்குரிய அதிபர் திருமதி .மிமலாதேவி விமலநாதன் அவர்கள் 31.12.2022 அன்று ஓய்வு பெற இருப்பது பாடாசாலை சமூகத்திற்கு பேரிழப்பாகும். கடந்த பத்து வருடங்களாக இப்பாடசாலையின் அதிபராகப் பணியற்றி பல வெற்றிகளுக்குப் பாத்திரமாகத் திகழ்ந்தவர்.

இக் கல்லூரியின் எல்லாத்துறைகளின் வளர்ச்சிகளுக்காகவும் பழைய மாணவர் சங்கங்களினதும், கல்வித் திணைக்களங்களத்தினதும் ஒத்தாசைகளைப் பெற்று ஒழுக்க முடன் பணியாற்றியவர்.

அத்துடன் யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையுடன் அடிக்கடி தொடர்பினை ஏற்படுத்தி கல்லூரியின் பல்வேறு தேவைகளுக்கான உதவிகளைப் பெற்று அதில் வளர்ச்சி கண்டார்.

கல்விப் பணியில் இருந்து ஓய்வு பெறும் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அதிபர் அவர்கள் தேக ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல திருக்கேதீஸ்வரப் பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.

**திருமதி. அபிராமி கைலாயபிள்ளை,**
தலைவர்,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசிகள்



யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் ஓர் தசாப்தமாக (2012-2022) அதிபராக கடமை யாற்றி ஓய்வு பெறும் திருமதி. மிமலாதேவி விமலநாதனின் சேவை மிகவும் பாராட்டுக் குரியது. இவர் எங்கள் கல்லூரியின் பழைய மாணவி என்ற பெருமைக்கும் உரியவர்.

கல்லூரியின் வளர்ச்சிக்காக அதன் பழைய மாணவிகள் சங்கங்கள் யாவற்றுட னும் நல்லுறவை பேணி செயலாற்றிய திறமையுள்ளவர்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் கனடா கிளையின் போஷகராக அவருடன் நன்கு பழகும் சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்துள்ளது. தொலைபேசி மூலமாகவும் நேரிலும் சந் தித்து பேசும் பொழுது மிகவும் அன்பாகவும் பணிவுடனும் உரையாடும் இவரின் பண்புகள் என் மனதை கவர்ந்தன. கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கங்கள் யாவும் கூட்டாக ஒன்றிணைந்து வகுப்பறைகளுடன் மண்டபம் கொண்ட மூன்று மாடி பவளவிழா மண்ட பம் இவரின் காலத்தில் நிறைவுபெற்றது பெருமைக்குரியது. மேலும் கல்லூரியின் பவள விழாவினை சிறப்பாக நடத்தியமை, கல்லூரியின் ஸ்தாபகர் விசாலாட்சி சிவகுருநாதர் அம்மையாருக்கு சிலை எடுத்தமை யாவும் இவரின் பதவிக் காலத்தில் நடைபெற்ற நற்பணி களாகும்.

கடந்த சில ஆண்டுகளாக கல்லூரியின் க.பொ.த சாதாரண, உயர்தர பரீட்சைக ளில் சிறந்த பெறுபேறுகளிலும் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களின் தொகையிலும் முன்னேற்றம் காணப்பட்டது. இது எமக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் தந்துள்ளது. எந்தவொரு சூழ்நிலைகளிலும் விளையாட்டுதுறை நிகழ்ச்சிகள், இயல் இசை நிகழ்ச்சிகள், பரிசளிப்பு விழாக்கள், ஏனைய கல்லூரி நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்துவதில் சிரத்தை யுடையவராக காணப்பட்டார்.

இவரின் நற்சேவையை பாராட்டி, எங்கள் பழைய மாணவிகள் சங்கம் கனடா கிளையின் சார்பிலும் எனது சார்பிலும் வாழ்த்தி, கல்லூரியின் ராஜவரோதய பிள்ளையாரின் ஆசி யோடு நீண்ட ஆயுளுடன் சிறப்பாக வாழ உள்ளம் நிறைந்த நல் ஆசிகளை தெரிவிக்கின்றேன்.

**செல்வி.நல்லம்மா குழந்தைவேலு**
முன்னாள் ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி
போஷகர் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழாக் காணும் திருமதி. வி. மிமலாதேவி அதிபர்

மணிவிழா காணக்கூடிய அருமையான அனுபவத்தை எட்டியுள்ள திருமதி. மிமலாதேவி விமலநாதன் அதிபர் அவர்களின் ஆரோக்கியம் நிறைந்த நல்வாழ்வுக்காகவும் பூரண மனித மாண்பு மிக்க சேவைக்காகவும் எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரன் பாதங்களைப் பணிந்து பிராத்திக்கின்றேன்.

அர்பணிப்பு மிக்க ஆசிரிய சேவையால் நிறைந்த ஆசீர்வாதங்களால் உயர்ந்து இன்று வட மாகாணத்தில் பெயர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மகளிர் பாடசாலைகளின் வரிசையில் உச்சம் தொடத்துடிக்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் மதிநுட்பம் நிறைந்த நிருவாகியாகி. தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்துவதற்கு அரும்பணியாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் மணிவிழாக் காண்பது பெருமைக்குரியதும் பாராட்டிற்குரியதுமாகும்.

பாடசாலையின் மனித வளங்களை விருத்தி செய்வதிலும் பௌதீக வளங்களை விருத்தி செய்வதிலும், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக்கும் வகையிலும் மதிநுட்பமும் மனித நேயமும் கொண்ட செயல் வீரியாக அவர் சிரித்த முகத்துடன் மல்லிகைப் பூ மணங்கமல ஆசிரியர்களையும் மாணவர்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களையும் அரவணைத்து செயற்படும் பாங்கு அவருக்கே உரிய தனித்துவம் வாய்ந்த பண்பாகும்.

திருமலை தந்த திருமகளாய் விளங்கி இந்துப் பெண்கள் மட்டுமல்லாமல் ஏனைய சமயத்துப் பெண்களும் தமிழ்ப் பண்பாட்டை பேணும் வகையில் மாணவர்களை வழி நடத்துவதில் எப்போதும் கண்ணும் கருத்துமாய் செயற்படுவதோடு மட்டுமல்லாமல் தமிழர் கலைகளையும் வளர்ப்பதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்பவர். கல்லூரியில் கற்கும் பெண்கள் எதிர்காலத்தில் சிறந்த குடும்பத் தலைவிகளாக சமூகத்தில் மிளிர்வதற்கும் வழிகாட்டுகின்ற அவரின் வார்த்தைகள் என்றென்றும் மனங் கொள்ளத்தக்கவை. இந்த மணிவிழா நாளிலே அவரும், அவரது குடும்ப உறுப்பினர்களும் சீரும் சிறப்புமாக வாழ பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.ம.சத்தியகுமார்,**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லாசிகள்

குறள் 981:
கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

விளக்கம்:
கடமை இவை என்று அறிந்து சான்றாண்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்.

எமது கல்லூரி அதிபர் 2013, 2015ஆம் ஆண்டுகளில் நேரில் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. அவரின் கம்பீரமான தோற்றமும் பண்பான, அமைதியான சுபாபமும் அதிபர் சேவைக்கு மிகவும் மெருகூட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்க சான்றாகும்.

இளைப்பாறும் எமது கல்லூரி அதிபர் திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்கள் நீண்ட ஆயுளுடனும், சந்தோசத்துடனும் வாழவேண்டுமென நல்லூர் கந்தனை வேண்டி பழைய மாணவிகள் சங்கம் சார்பாகவும் எனது சார்பாகவும் வாழத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

**திருமதி. வாசுகி ஜயேந்திரன்**
தலைவி - பழைய மாணவிகள் சங்கம் - கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா மங்கைக்கு மனமாற்ந்த வாழ்த்துக்கள்



யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் முதல்வி திருமதி. மிமலாதேவி விமலாநாதன் அவர்களுக்கு அகவை அறுபதில் பழைய மாணவிகள் சார்பாக வாழ்த்து வதில் பெரு மகிழ்சியடைகின்றேன்.

எமது கல்லூரித் தாயின் புகழுக்கும் வளர்ச்சிக்கும் தனது சேவைக்காலத்தில் அதிபராக ஆற்றிய அயராத பணிக்கு நன்றி கூறுவதோடு, கல்லூரி மென்மேலும் வளர்ச்சி யடையவும், அதிபர் அவர்கள் உடல், உள ஆரோக்கியத்தோடு நீடூழி வாழவும் நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகரை வணங்கி வாழ்த்தி நிற்கின்றேன்.

வாழ்க பல்லாண்டு
வளர்க நும்பணி

**திருமதி. ஓம்சக்தி யசோதன்,**
செயலாளர்,
பழைய மாணவிகள் சங்கம்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்

தமிழர் தாயகத்தின் தலையாய பட்டினமாம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் தலை சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. யாழ் இந்து மகளிர் கல்லூரி. இது 1943ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி அரசடி வீதியில் நிலைக்கத் தொடங்கி யது. எமது கல்லூரிக்கான காணியினை அன்பளிப்புச் செய்த திருமதி. விசாலாட்சி சிவகுருநாதனை அன்புடன் நினைவு கூருவது மிகவும் அவசியம் எனக் கருதுகின்றேன்.

எமது கல்லூரியின் மேம்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் பங்காற்றிய அதிபர்களுள் திருமதி.மிமலாதேவி விமலநாதனுக்கும் சிறப்பிடம் உண்டு. கலைப்பட்டதாரியான இவர் எமது கல்லூரியின் பழைய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் 2012ஆம் ஆண்டு அதிபராகப் பதிவியேற்றார். போர் அனர்த்தங்களிலிருந்து மீண்டெழுந்து கொண்டிருந்த வேளையில் கொரோனாத் தொற்று 2019ஆம் ஆண்டு ஆரம்பமானது. இத்தகைய இக் கட்டான காலகட்டத்தில் பாடசாலையைச் செவ்வனே நிர்வகித்து வழிநடத்திய பெருமை இவருக்குரியது. 2000ற்கும் மேற்பட்ட மாணவிகளையும், 125க்கும் மேற்பட்ட ஆசிரியர் களையும் சிறந்த ஆளுமையுடன் நிர்வகித்தார்.

இவரது பதவிக்காலத்தில் அவுஸ்ரேலியா, கனடா, லண்டன், கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள பழைய மாணவிகள் சங்கங்களின் ஒத்துழைப்புடன் “பவளவிழா மண்டபம்” கட்டியெழுப்பப்பட்டமை பெருமையான விடயமே. அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சாவின் பதவிக்காலத்தில் “மகிந்தோதயா” என்ற கட்டிடமும், அமெரிக்க உதவியுடன் கட்டப்பட்ட கட்டடமும் குறிப்பிடத்தக்கதாகும்.

மிகவும் அன்பாகவும், ஆதரவாகவும் நடந்து ஆசிரியர்கள், மாணவிகள் அனைவர தும் மனங்களை வென்று பத்தாண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து தற்பொழுது ஓய்வு பெறுகின்ற திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்களை எமது சங்கத்தின் சார்பில் வாழ்த் துகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் ஓய்வுபெறும் அதிபர் உடல் ஆரோக்கியத்துடன் நீண்டநாள் வாழ்ந்து, தனது ஓய்வு காலத்தை மகிழ்வுடன் கழிக்க வாழ்த்தி இறைவனை பிரார்த்திக் கின்றேன்.

**திருமதி.ஸ்ரீமாதங்கி சாந்தகுமார்**
தலைவி,
பழைய மாணவிகள் சங்கம்-சிட்னி கிளை,
யாழ் இந்து மகளிர் கல்லூரி .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவத்தின் தரமான அணிகலன்



விக்கினங்கள் தீர்க்கும் மருதடி விநாயகனின் பாதார விந்தங்களை பணிந்து பெண் கல்விக்கு பெறுமதி வாய்ந்த கல்விச் சேவையை வழங்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் தலைவர் பெருமதிப்புக்குரிய திருமதி.மிமலாதேவி விமலநாதன் அவர்கள் மாண்பான கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெறுபவதை இட்டு வழங்கும் வாழ்த்துச் செய்தியை எழுதுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்துக்கு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

கல்லூரித்தாய் உளப்பூரிப்பு அடையக் கூடிய வகையில் வாடிக்கையாளர் ஆகிய மாணவிகளின் உடல் உள ஆன்மீகரீதியான எழுச்சிக்கு உச்சப்படியான சேவையை தனது முதல்வர் பணிக் காலத்தில் சேவை செய்தவர். எல்லோராலும் புகழப்படும் அதிபர் என்றால் மிகையில்லை.

முதல்வர் பணி என்பது காத்திரமான கடினமான பணி அந்தப் பணியை நேர்த்தியாக உயர்வாக நிறைவேற்றியவர். கல்லூரி சார்ந்த, கல்லூரி சாராத பணியாளரிடம் இருந்து உச்சப் பயனை பெற்று கல்லூரி வளர்ச்சிக்கு அடித்தளமாக்கியவர். வளங்களில் இருந்து உச்ச விளைவை பெறல் அபிவிருத்தி எனலாம். அந்த தாரக மந்திரத்தை தனது பத்தாண்டு கல்லூரியின் சேவைக்காலத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளை முன்னிலைப்படுத்தி சேவையாற்றிய பெருமை தலைவணங்கக்கூடிய அதிபரையே சாரும்.

பெற்றோர் ஆகிய எமது திருப்தி என்பது பன்முகப்பட்டது. கல்விவிருத்தி மாணவிகள் ஒழுக்கம், இணைக்கலைத்திட்ட விருத்தி அத்தனையிலும் மாண்பான சேவையை செய்தவர் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் என்றால் மிகையில்லை.

நான் ஒரு தொழில் நிறுவனத்தின் தொழிலதிபர் என்ற முறையில் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு நாம் எதிர்கொள்ளும் தடைகள், சவால்கள், போட்டிகள், செயல் ஒழுங்குகள், முடிவு எடுக்கும் திறன் போன்ற பல முகாமை விடயங்களையும் நன்கு அறிவேன். அந்த வகையில் யாழ் மாவட்டத்தில் பெண் கல்விக்கு முன் உதாரணமான தங்கள் கல்லூரியை வளப்படுத்திய அதிபரை பெருமனதுடன் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன். அதன் தலைவரான தங்கள் பணியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியவில்லை. மாணவிகளின் சேவையை மகேசன் சேவையாக நிறைவேற்றி திருப்தியான மன நிறைவுடன் ஓய்வு பெறும் எங்கள் அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் ஓய்வு காலத்தில் பலதும் பெற்று பல்லாண்டு வாழ விநாயகனை பணிகின்றேன். வாழ்க வளமுடன்.

நன்றி.

**திரு. தம்பிராசா தர்பாகரன்,**
**பெற்றோர்.**
**ஐங்கரன் மோட்டஸ், மானிப்பாய்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிப் பயணத்தில் எம் அதிபர்!!!

இந்து மகளிர் கல்லூரியின் முதல்வியே!
இன்றைய நன்நாளின் மணிவிழா நாயகியே!
அவையோரே!
அறிவுடைப் பெருமக்களே!
ஆசான்களே!
அனைத்து நல் உள்ளங்களுக்கும் - என்
இனிய காலை வந்தனங்கள்.

கல்லூரி முதல்வியின் அகவை அறுபது - இன்று
பணி நிறைவு அன்றி.
பணிதனில் மணிவிழா காணும் பாக்கியம்
தொடரும் சேவைதனுக்கு தலை வணங்கி
மாணவத் தலைவியாய் - எம்
உள்ளத்தின் உதிர்வுகளை
நினைவுத் தடங்களை
பெற்ற அனுபவப் பகிர்வுகளை - இங்கே
சொற்களால் கவி புனைய உவக்கின்றேன்.

சீர்பூத்த கல்விதனை சிறப்புடனே கற்று
பல்கலைக் கழக பட்டதாரியாக உயர்வு பெற்று
ஆசிரியராய், அதிபராய் பொறுப் பேற்று
மூன்று தசாப்தமாய் கல்விப் பாதையில் தடம் பதித்து
ஒரு தசாப்தத்திற்கும் மேலாக
இந்து மகளிர் கல்லூரியின் மாண்புமிகு அதிபராக
நிமிர்வு பல கண்டவர் - நம் அதிபர்

பாடசாலைச் சூழலதனை கவின் நிலையாக்கி
பாடத் திட்டமதை செவ்வனே நெறிப்படுத்தி
கடமை கண்ணியம் கட்டுப்பாடு - எனும்
மூன்றையும் தன் அணிகலனாக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிய சிந்தனையுடன் பண்புடை வார்த்தைகளால்
பாலர் எம்மை பக்குவமாய் வழிநடத்தி
பள்ளிப் பருவமதை பயனுறு பருவமாய் - நாம்
பெற்றிட வழிபல சமைத்தவர் - எம் அதிபர்

முதல் வராய் பாடசாலைக்கு வருகை தந்து
முன்மாதிரியாய் அனைவருக்கும் வழிகாட்டி
பாடஅடைவை நூறு வீதமாக்கியதோடு
இணைப்பாட செயற்பாட்டில் உந்து சக்தியாய் தானும்! உழைத்து

முத்தமிழோடு மும்மொழிக் கல்வியும்
சிறப்பாய் ஓங்க உத்திபல வகுத்திட்டீர்
தமிழ்,ஆங்கில, விளையாட்டு நிகழ்வுகளில்
தேசியத்தில் கல்லூரி முத்திரை பதிக்க
ஆணி வேராய்
ஊன்று கோலாய்
உந்து சக்தியாய்
அமைந்தது நும் அதிபர் பணி அன்றோ!

வாழ்த்தொலிகளும் கரகோசங்களும் வான் வரை - செல்ல
வெற்றிகள் பல கொண்டாடி மகிழ்ந்தோம்
அழகோவியமாய்
அழகுக் கலை தெய்வமாய்
தயை கொண்ட வதனமாய்
காலைப் பிரார்த்தனைகளில் காட்சி
தந்திடுவார் - எம் அதிபர்

சத்தமின்றி முழக்கமின்றி வகுப்பறைகள் சுற்றி வந்து
ஓங்கி ஒலிக்காது தவறுகள் சரி செய்வீர்
உதவி கேட்டுவரின் இன்முகம் காட்டி
இயன்ற நலன்பல புரிவீர்
அழுது துவண்டு நாம் ஓடி வந்தால்
ஆற்றுப்படுத்தி சிரிக்கவைத்து அனுப்பிடுவீர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களப் பயணங்களா?
கலை விழாக்களா ? - எம்
தோளோடு தோள் நின்று
குழந்தையென உங்கள் மனம் குதூகலிப்பது - கண்டு
நாமும் மறைவாக குதூகலித்தோம்

இந்து மகளிர் கல்லூரி - இன்று
தேசிய பாடசாலையாக தலை நிமிர்வு காண
சளைக்காது
துவளாது
சவால்களுக்கு முகம் கொடுத்து
தலை நிமிரச் செய்தீர்
தலைமுறை தாண்டி - நும் பணியை
பாடசாலைச் சமூகம் வாழ்த்தும்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நனி சிறந்தன என்றான் பாரதி
கற்ற பாடசாலையும் கிடைத்த அதிபரும்
நனி சிறந்தன என்கின்றோம் - கல்லூரி மாணவிகள்

கல்லூரி வரலாற்றில் சாதனைப் பெண்ணாய்
தடம் பதித்த கல்லூரி முதல்வியே!
தங்கள் பணி மென் மேலும் தொடர
கரம் குவித்து சிரம் தாழ்த்தி
இறை ஆசி வேண்டி நிற்கின்றோம்.

நீங்கள் போதித்த பாதையில்
நன் மாணவ மணிகளாய் - என்றும்
திகழ்வோம் - இதுவே நாம் தரும்
அன்புக் காணிக்கை...!

*நன்றி வணக்கம்*

**செல்வி. விதுஷா விஜயகுமார்**
விஞ்ஞானப்பிரிவு-2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**தர்மப்பிரியா :-** *கயல்விழிகள் வரம்பாய் இரு புருவம், பட்டுடலம், முத்துப்பல், கருங் கூந்தல், தேனைப்பழிக்கும் மொழி, கட்டிளமைப் பருவம் கவிதை வனப்பு கொண்ட உங்களை சந்திப்பது எனக்கு ஓர் இனம் புரியாத பரவச உணர்வைத் தருகிறது.*
*வணக்கம் அம்மா ! வணக்கம்*

**யா/நங்கை :-** *வந்தனங்கள் (புன்முறுவல் பூக்கிறார்) என்ன கேட்கப் போகிறீர்கள் என்னிடம்*

**தர்மப்பிரியா :-** *காவியம் போல் இனிக்கிறது உங்கள் சிரிப்பு அந்த போதையில் நான் ஆயத்தமாகி வந்த வினாக்களையே மறந்து விடுவேன் போல் இருக்கிறது. உங்கள் சிரிப்பை ஓர் வார்த்தையாக சேர்த்துக் கொள்ள அகராதி ஆசைப்படும். "அந்த சிரிப்பின் இரகசியம் என்ன? " என்பதையே முதலாவது வினாவாக தொடுக்கிறேன்.*

**யா/நங்கை :-** *நீங்கள் தானே சொன்னீர்கள் கட்டிளமைப்பருவம் என்று. மனிதர்களுக்கு கட்டிளமைப்பருவம் ஏழு வருடங்கள் நீடிக்கும் என உளவியல் சொல்கிறது. எனக்கு கடந்த பல தசாப்தங்களாக நீடிக்கிறது. இன்னும் தொடரப் போகிறது. அது தான் இரகசியம்.*

**தர்மப்பிரியா :-** *மழை கண்ட கழனியாய் பூரித்து உள்ள உங்கள் வாழ்வின் ஒரு பகுதியை (2012-2022) முழுமையாக பார்க்க ஆசைப்படுகின்றேன். நீங்கள் எங்கே பிறந்தீர்கள்?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யா/நங்கை :-** எனது பிறப்பிடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினுடைய மைதானம். ஆனாலும் ஒரு சில ஆண்டுகள் தான் அங்கு வாழ்ந்தேன். பின் அரசடி வீதியில் உள்ள விசாலாட்சி அம்மையார் தந்த காணியில் குடியேறி வாழ்ந்தேன். அந்தக் காலத்தில் ஆஸ்பத்திரி வசதிகள் குறைவு தானே.



**தர்மப்பிரியா :-** உங்களுக்கு சீதனம் எவ்வளவு தந்தார்கள்?

**யா/நங்கை :-** யாழ்ப்பாணத்தில் ஏக்கர் கணக்காக. நான் 1943ஆம் ஆண்டு பிறந்தேன் ஏன் என்னுடைய முழுமையான காலத்தையும் பேட்டி காண முற்படவில்லை?

**தர்மப்பிரியா :-** 2012 உங்கள் பாடசாலைக்கு புதிய முதல்வர் ஒருவர் வந்தாராமே. அவரைப் பற்றி உங்களுடைய அபிப்பிரா யம் என்ன?

**யா/நங்கை :-** என்னுடைய மடியில் தவழ்ந்து நானூட்டிய பாலை பருகி நான் உணவு ஊட்டி வளர்த்த பிள்ளை உங்கள் மொழியில் சொல்வதனால் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவி லட்சுமி கடாட்ஷம் ஆளுமைப் பண்புகள் நிறைந்த எனது வளர்ப்பு பிள்ளை கல்லூரியின் முதல்வர் பதவியை 2012இல் வகிக்க வருவது எனக்கு இனம் புரியாத மகிழ்வையும் பரவசத்தையும் ஏற்படுத்தியது. அந்த ஆனந்தத்தை வார்த்தைகளில் வடித்து விட முடியாது. ஏனென் றால் அவள் என் பிள்ளை. தாயினுடைய உயர்ச்சி யிலே தரமான சேவை செய்வாள் என்ற நம்பிக்கை.




**தர்மப்பிரியா :-** பேட்டியினுடைய தேவை பேட்டி காண்பவராகிய எனக்குள்ள அறிவு போன்றவற்றை கருத்திற் கொண்டு இப்பேட்டியை முன் நகர்த்த விரும்புகின்றேன். பொருத்தமான ஒருவர் முழுமையாக பேட்டி காண்பது எனக்கு மகிழ்ச்சியே அதற்கு காலம் பதில் சொல்ல வேண்டும். ஆனாலும் எனது சிற்றறிவோடு (2012-2022 ) காலப்பகுதியை மாத்திரம் பேட்டி காண முற்படுகிறேன். எமது கல்லூரியைப் பொறுத்த மட்டில் மாணவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அறுவடைகளான க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் காணப்படுகிறது. கடந்த பத்தாண்டில் உங்களுடைய க.பொ.த சாதாரண தர பெறுபேறுகள் எவ்வாறு காணப்படுகின்றது?

**யா/நங்கை :-**

| 2012-2021 வரையான காலப்பகுதியில் க.பொ.த. (சா/த) சாதனைகள் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
| சித்திவீதம் | 97% | 96% | 87% | 81.90% | 85% | 86% | 96.56% | 88% | 93% | 89.47% |
| 9A | 4 | 1 | 1 | 4 | 3 | 8 | 4 | 7 | 9 | 12 |
| 8A | 4 | 14 | 4 | 5 | 7 | 10 | 13 | 8 | 10 | 13 |
| 7A | 5 | 8 | 7 | 12 | 9 | 11 | 6 | 9 | 13 | 16 |
| 6A | 9 | 8 | 7 | 10 | 15 | 23 | 8 | 11 | 16 | 12 |
| TOTAL | 22 | 31 | 19 | 31 | 34 | 52 | 31 | 35 | 48 | 53 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எனது க.பொ.த. சா/த பெறுபேறு மாகாணப் பாடசாலைகளோடு சவால் விடக்கூடியவாறு உள்ளதை பெருமையோடு பதிவு செய்கிறேன்.

**தர்மப்பிரியா :-** க.பொ.த உயர் தரத்தில் கடந்த பத்தாண்டு சாதனைகள் எப்படி காணப்பட்டது?

**யா/நங்கை :-**

2012-2021 வரையான காலப்பகுதியில் க.பொ.த. (உ/த) சாதனைகள்

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணித விஞ்ஞானப்பிரிவு | 16 | 13 | 23 | 23 | 10 | 10 | 15 | 31 | 32 | 28 |
| வர்த்தகம் | 8 | 4 | 3 | 3 | 14 | 16 | 19 | 12 | 19 | 14 |
| கலை | 29 | 15 | 24 | 24 | 21 | 20 | 30 | 27 | 24 | 21 |
| தொழில்நுட்பம் | - | - | - | - | - | - | 2 | 2 | 4 | 5 |




எனது கல்லூரியின் க.பொ.த. உ/த பெறுபேறு மெச்சக் கூடிய சாதனையை நிலை நாட்டி உள்ளது.

**தர்மப்பிரியா :-** குறித்த காலப்பகுதியில் (2012-2022) மாணவர்களின் பல்கலைக்கழக / உயர் கல்வி வாய்ப்பு பற்றிய கருத்துகள் என்ன சொல்வீர்கள்?


**யா/நங்கை :-**

2012-2021 வரையான காலப்பகுதியில் க.பொ.த. (உ/த) சாதனைகள்

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சித்திவீதம் (பல்கலைக்கழக தகுதி) | 69% | 63% | 65% | 71.00% | 61% | 86% | 71.00% | 67% | 61% | 89.47% |
| கணித விஞ்ஞானப்பிரிவு | 16 | 13 | 23 | 23 | 10 | 10 | 15 | 31 | 32 | 28 |
| வர்த்தகம் | 8 | 4 | 3 | 3 | 14 | 16 | 19 | 12 | 19 | 14 |
| கலை | 29 | 15 | 24 | 24 | 21 | 20 | 30 | 27 | 24 | 21 |
| தொழில்நுட்பம் | - | - | - | - | - | - | 2 | 2 | 4 | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




துறை ரீதியாக பல்கலைக்கழகம் தெரிவானோர்.

மாணவிகளின் பல்கலைக்கழக அனுமதியில் தரமான சேவையை எமது கல்லூரி நல்கி உள்ளது.

**தர்மப்பிரியா :-** தமிழ் தின தேசிய மட்ட போட்டிகளில் முன் உதாரணமான கல்லூரி களோடு போட்டி போட்டு பல முறை தேசிய மட்ட சாதனைகளை நிலை நாட்டினீர் களாமே ஆதாரம் தர முடியுமா?

**யா/நங்கை :-**



2022 தமிழ் தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் பதக்கம் வென்றோர்
மூன்றாம் இடம் - பிரிவு 5 இலக்கிய திறனாய்வு செல்வி. துஷிந்தா சிறிகாந்தன் (எழுத்தாக்கம்)
1ஆம் இடம் - பிரிவு 4 - நடனம் : செல்வி. லாவண்யா தட்சணாமூர்த்தி
1ஆம் இடம் - பிரிவு 5 - தனி நடனம் செல்வி. சீனுஜா இராஜேந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைபாடவிதானசெயற்பாடுகளில் தேசிய மட்ட பெறுபேறுகள்

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்த்தினம் | 2ம் இடம் தனிநடனம் | - | 1ம் இடம் - திறனாய்வு, 1ம் இடம் - தனி நடனம், 1ம் இடம் - தனி நடனம், 1ம் இடம் - குழு நடனம் | 2ம் இடம் - தனிநடனம், 2ம் இடம் - தனிநடனம், 1ம் இடம் - 3, 2ம் இடம் - 3, 3ம் இடம் - 2 (தேசிய கலை இலக்கிய போட்டி) | 1ம் இடம் - தனி நடனம், 2ம் இடம் - தனிஇசை, 1ம் இடம் - நாட்டிய நாடகம் | 1ம் இடம் - தனி நடனம், 1ம் இடம் - தனி நடனம், 1ம் இடம் - நாட்டிய நாடகம், 1ம் இடம் - விவாதிவினா | 1ம் இடம் - நடனம் பிரிவு -2, 1ம் இடம் - நடனம் பிரிவு -5, 1ம் இடம் - நாட்டிய நாடகம் | 1ம் இடம் - சிறுகதை, 2ம் இடம் - கவிதை -5, 4ம் இடம் - பேச்சு, 1ம் இடம் - தனிநடனம், 1ம் இடம் - தனிநடனம், 1ம் இடம் - நடனம், 1ம் இடம் - நாட்டிய நாடகம் | | | 1ம் இடம் - நடனம் பிரிவு -4, 1ம் இடம் - தனி நடனம் பிரிவு -5, 3ம் இடம் - திறனாய்வு |
| விளையாட்டு | பங்குபற்றியமை | பங்குபற்றியமை | பங்குபற்றியமை | பங்குபற்றியமை | 4ம் இடம் - கரம் | 3ம் இடம் - பழுதூக்கல் | 1ம் இடம் - பழுதூக்கல், 2ம் இடம் - பழுதூக்கல், 4ம் இடம் - கரம் | 2ம் இடம் - பழுதூக்கல் | | | பங்குபற்றியமை |
| ஆங்கிலமொழி | - | - | பங்குபற்றியமை | பங்குபற்றியமை | பங்குபற்றியமை | 1ம் இடம் - Copy Writing | 3ம் இடம் - Cursive Writing, 3ம் இடம் - Hand Writing | பங்குபற்றியமை | போட்டிகள் நடைபெறவில்லை | | பங்குபற்றியமை |
| ஓவியம், இசை, நடனம் | - | - | - | - | பங்குபற்றியமை | - | 1ம் இடம் - வயலின், 1ம் இடம் - மிருதங்கம், 2ம் இடம் - வீணை, 1ம் இடம் - நாடகப் பிரதியாக்கம், 1ம் இடம் - லையன்ஸ் கிளப், 1ம் இடம் - வர்ணம் நிறைந்த பிள்ளைகள் | 2ம் இடம் - நாட்டார் பாடல், 1ம் இடம் - மிருதங்கம், 1ம் இடம் - வீணை, 1ம் இடம் - வயலின், 2ம் இடம் - ஓவியம், 1ம் இடம் - ஓவியம் | | | குழு நடனம் - 1ம் இடம் தனி நடனம் - 1ம் இடம் தனி ஜதீஸ்வரம் 1ம் இடம் |
| கணித ஒலிம்பியாட் | - | - | பங்குபற்றியமை | - | - | 1ம் இடம் - கீழ் பிரிவு, 4ம் இடம் - மேற்பிரிவு | - | - | | | - |
| சமூக விஞ்ஞான போட்டி | | - | - | 1ம் இடம் - 1, 2ம் இடம் - 1 | 1ம் இடம் - 1 | 7ம் இடம் | - | 5ம் இடம், 7ம் இடம் | | | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தர்மப்பிரியா** :- சர்வதேச மொழியாகிய ஆங்கில மொழியில் உங்களுடைய பிள்ளைக ளின் தரம் எப்படி காணப்படுகி றது?

**யா/நங்கை :-** மேலேயும் குறிப்பிட்டுள்ளேன். 2017 - 1ஆம் இடம் *Copy writing* , 2018 - 3ஆம் இடம் *Cursive writing* , 3ம் இடம் *Hand writing* என பல...

**தர்மப்பிரியா :-** விளையாட்டு துறையிலும் பெண்கள் சாதிக்க முடியும் என்பதை உங்கள் பிள்ளைகள் தேசிய மட்டம் வரை நிலைநாட்டி இருக்கிறார்களாம். குறித்த காலத்தில் இதன் நிலைப்பாடு என்ன?

**யா/நங்கை :-** திறனாய்வு போட்டிகள், உள்ளக விளையாட்டுகள், பழு தூக்கல் என பல...



**Tharankini Partheepan**
National Level
Winner - 2018
Weight Lifting,
Under 17, 1st Place



2019 - மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றியோர் (தேசிய மட்டம்)



**Bajeena Jegatheeswaran**
National Level
Winner - 2018
Weight Lifting,
Under 17, 2nd Place



**2022 Netball under 16, provincial participation**



**2022 badminton under 18, national participation**



**2022 basketball under 17, national participation**

**தர்மப்பிரியா :-** உங்கள் பிள்ளைகளின் தலைமைத்துவ பண்புகள் வளர்ச்சியடையச் செய்வதற்கு என்ன நடவ டிக்கை எடுக்கப்பட்டது?

**யா/நங்கை :-** தலைமைத்துவ பண்புகள் ஏராள மான போட்டிகள் மூலம் இயல்பா கவே வளர்க்கப்படுகிறது. ஒழுக்கமும் பெண் ணிய பண்புகளும் கொண்ட மாணவ தலைவிகள் உரிய பயிற்சிகள் ஆலோசனைகள் அறிவுரைகள் வழங்கப்பட்டு வருடா வருடம் தெரிவு செய்யப்படுகி றார்கள். பல நியதிகள் அடிப்படையில் இவர்கள் தெரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படுவதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். நீங்களும் (பேட்டி காண்பவர்) அவ்வாறாக தெரிவு செய்யப்பட்ட ஒரு முதல்வி தானே.



**தர்மப்பிரியா :-** பௌதிக வள அபிவிருத்தியில் கட்டட அபிவிருத்தி தொடர்பாக இக் காலத்தில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**யா/நங்கை :-** பல்வேறு வகையில் மாற்றம் கண்டது. 1000 பாடசாலை அபிவி ருத்தி திட்டத்தின் கீழ் மஹிந் தோதய ஆய்வுகூடம் அமைக்கப்பட்டது. மேலும் America specific commanders இன் உதவியின் கீழ் U.S.A கட்டடம் 100 x 25 அமைக்கப் பட்டது. பவள விழா மண்டபம் பழைய மாணவர்கள் அனைவரும் ஒருமித்து 108 x 35 அடி கட்டடம் சிறப்பாக அமைக் கப்பட்டது. மேலும் அழகியற் கூடங்கள் ஆசிரியர் ஓய்வறை, அலுவலகம், பிரதான மண்டபம் என்பன புனரமைக்கப் பட்டன. விஞ்ஞான ஆய்வுகூடங்கள் விஸ்தரிக்கப்பட்டன.



கோயில் மூலஸ்தானம் விருத்தி செய்த தோடு எலி வாகனம் வழங்கப்பட்டது. நூலக அபிவிருத்தி வாயிற் கதவுகள் மாற்றியமை அனைத்து வகுப்புகளுக்கான மின்சார வசதி என பல மாற்றம் கண்டது.



DCM Robert Hilton and Northern Chief Minister Wigneswaran cut the ribbon for the new building funded by the United States Pacific Command.

**தர்மப்பிரியா :-** மாணவிகளின் உடற் தகைமை வலுவாக்க மைதான விஸ்தரிப்புக்கள் ஏதாவது மேற்கொள்ளப் பட்டதா?


**யா/நங்கை :-** மைதான விஸ்தரிப்புக்காக பாழடைந்திருந்த தரம் 6 மாணவர்கள் கற்ற வகுப்பறை தொகுதி இடிக்கப்பட்டு மாணவிகளின் உடற்தகமையை விருத்தியாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பார்வையாளர் அரங்கிற்கான ஆரம்பக் கட்ட வேலைப்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. மிகுதி இனிவரும் காலங்களில் விருத்தி செய்ய வேண்டியுள்ளது.

**தர்மப்பிரியா :-** நவீன கற்றல் கற்பித்தல் நடைமுறைகளுக்கு இக்காலப் பகுதி யில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யா/நங்கை :-** Smart class room மாணவிகளு டைய கற்றல் மேம்பாட்டுக்காக ஆறு வகுப்ப றைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. முக்கிய பாடங்களை நேர ஒழுங்கில் மேற்கொள்ள ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மஹிந்தோதய திட்டத்தின் கீழ் கணினி அறை ஒன்று மேலதிக வசதிகளுடன் முன்பு இருந்த இரண்டு அறை களுடன் மூன்றாவதாக நிர்மாணிக்கப்பட்டது. ஏற்கனவே இருந்த கணினி ஆய்வு கூடங்க ளிற்கு புதிய கணினிகள் தருவிக்கப்பட்டன.





**தர்மப்பிரியா :-** இக்காலப்பகுதியில் மாணவிகள் இப்பாடசாலையை அதிகமாக தேடி வந்தார்களாமே?



**யா/நங்கை :-** தரமான ஆசிரியர்களை கொண்டு தரமான கல்வி வழங்குவதற்கு ஏற்ப முகாமைத்துவ பொறிமுறைகள் சிறப்பாக உருவாக்கப்பட்டது. இந்த இடத்தில் அதிபரோடு சேர்ந்து உழைத்த பிரதி அதிபர், உதவி அதிபர்கள் நேரடிக் களத்திலே உழைத்த ஆசிரியர்கள் அத்தனை பேரும் என்னுடைய பிள்ளைகள் அதிகரிப்பிற்கு அல்லது இங்கு படிக்க வேண்டும் என்ற கேள்வி அதிகரித்தமைக்கு காரணமாக அமைந்தது.

கடந்த தசாப்த காலத்தில் மாணவர் விபரம் ( 2012 - 2022 )

| தரம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 - 11 | 1627 | 1310 | 1681 | 1480 | 1408 | 1548 | 1560 | 1566 | 1572 | 1569 | 1607 |
| 12 - 13 | 447 | 749 | 498 | 791 | 792 | 560 | 574 | 565 | 618 | 579 | 626 |
| TOTAL | 2074 | 2059 | 2179 | 2271 | 2200 | 2108 | 2134 | 2131 | 2190 | 2148 | 2233 |

**தர்மப்பிரியா :-** இக்காலத்தில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

**யா/நங்கை :-** சென்ற வினாவுக்கான விடையிலே அதற்கான விடை ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. 2022ஆம் ஆண்டு 120 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கிறார்கள். முதுகல்விமாணி, முதுகல்விமாணி பட்டதாரிகள் உட்பட பலதரப்பட்ட பயிற்சியும் ஆற்றலும் வாய்ந்த ஆளணியினர் என்பதை இந்த இடத்தில் நான் பெருமையோடு பதிவு செய் கின்றேன். கற்றல் கற்பித்தல் என்றால் யாழ் இந்து மகளிர் கல்லூரி என்பது எனது அபிப்பிராயத்தோடு சமூக மட்ட அபிப்பிராயமும். (புன்முறுவல் பூக்கிறார்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த தசாப்த காலத்தில் அசிரிய ஆளணி விபரம் ( 2012 - 2022)

| தரம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பட்டதாரி | 51 | 56 | 44 | 78 | 91 | 72 | 72 | 76 | 77 | 94 | 71 |
| ஏனையோர் | 36 | 30 | 44 | 20 | 20 | 30 | 34 | 30 | 31 | 31 | 55 |
| TOTAL | 87 | 86 | 88 | 98 | 111 | 102 | 106 | 106 | 108 | 125 | 126 |

**தர்மப்பிரியா :-** *உங்கள் பாடசாலையில் ஆசிரியர் தினம் எவ்வாறான அடிப்படையில் இடம்பெறும்?*

**யா/நங்கை :-** கல்விக்கு நேரடியான பங்களிப்பு வழங்கும் ஆசிரியர்களை கௌரவிக்க வேண்டியது முக்கியமானது. அந்த அடிப்படையில் வருடாவருடம் சிறப்பாக ஆசிரியர் தினம் கொண்டாடப் படுகிறது. கொரோனா நோயின் இடர்பாட்டின் போது மாத்திரம் ஒரு சில ஆண்டு தடைப்பட்டது.
குறிப்பாக அந்நாளிலே ஆசிரியர்களை மையமாக கொண்ட நாடகங்கள் பட்டிமன்றங்கள் ஏனைய கலைநிகழ்வுகள், மாணவிகளின் நிகழ்வுகள் இடம்பெறும்...
இதோ ஆதாரம்...

**தர்மப்பிரியா :-** *உங்கள் பாட சாலை அபிவிருத்திச்சங்கம் பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?*

**யா/நங்கை :-** சிறப்பாக செயற்படும் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஒழுங் கான திட்டமிடலுடன் குறிப்பாக பௌதீக வள மேம்பாட்டுக்கு உச்சப்படியான விளைதிறன் உடன் கூடிய வினைத்திறனான சேவையை ஆற்றுகின்றது. கல்லூரிச் சூழல் கற்றலுக்கேற்ற பொறி முறையுடன் விளங்க ஆவன செய்யப்பட்டது.



**(2022)**

**தர்மப்பிரியா :-** *உங்கள் பாடசாலையின் பழைய மாணவிகளின் செயற்பாடு பற்றி யாது கூறுகிறீர்கள்?*

**யா/நங்கை :-** மிடுக்கான சிரிப்புடன்... அவுஸ்ரேலியா கிளை, லண்டன் கிளை, கனடா கிளை, கொழும்பு கிளை, யாழ்ப்பாணக் கிளை என இயங்குகின்ற எமது பழைய மாணவிகள் பல்வேறு முன் உதாரணமான செயற்பாடுகளை செய்கிறார்கள். மாணவிகளை மையம் கொண்ட கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கும் பௌதிக வள அபிவிருத்திக்கும் வினைத் திறனுடன் சேவை ஆற்றப்படுகிறது. பெருமிதத்தோடு இந்தச் சந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ப்பத்திலே பவள விழா மண்டபம் முழுமையாக பழைய மாணவிகளின் நிதிப் பங் களிப்போடு உருவாக்கப்பட்டது. அளவுத்திட்டம் 108 x 35 அடி கட்டடம் என்பதைப் பதிவு செய்கிறேன்.



பவளவிழாமண்டப திறப்புவிழாவின் போது.



பழைய மாணவர்களின் பங்களிப்புடன் Smart Board பொருத்தப்பட்டபோது...

**தர்மப்பிரியா :-** கல்லூரியின் நிறுவுனரை நினைவு கூரும் முகமாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?



**யா/நங்கை :-** எனது வளர்ச்சிக்கு ஏக்கர் கணக்காக காணி தந்து வளர்ச்சியில் உதவிய ஸ்தாபகரான திருமதி.விசாலாட்சி அம்மையார் அவர்களை மறக்க முடியுமா?
கல்லூரி வாயிலில் அம்மையாரின் திருவுருவ சிலை 2018ஆம் ஆண்டு பெற்றோரின் பங்களிப்புடன் புதுப் பொலிவுடன் நிமிர்ந்து நிற்கிறது. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண் டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவனின் வாசகத்தை அம்மையார் பணிக்கு சமர்ப்ப ணம் ஆக்குகின்றேன்.

**தர்மப்பிரியா :-** மாணவிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இக்காலப்பகுதியில் விசேட நடவடிக்கைகள் ஏதாவது மேற்கொள்ளப்பட்டதா?

**யா/நங்கை :-** இது ஓர் பெண்கள் கல்லூரி. பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு என்பது முக்கியமானது. காலையில் மாணவிகள் வரும் போது ஆசிரியர்கள் நேர அட்டவணையின் அடிப்படையில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத் தப்பட்டார்கள். யாழ்ப்பாணம் காவல் துறையினரின் பங்களிப்பையும் இந்த இடத்தில் சுட்டிக் காட்டுகின்றேன். விசேடமாக C.C.T.V கண்காணிப்பு கமராக்கள் கல்லூரியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ இக்காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்டுள்ளன. பிள்ளைகளின் பாதுகாப்போடு கல்லூரியின் பாதுகாப்பும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**தர்மப்பிரியா :-** இக்காலப்பகுதியின் கல்லூரியை அழகுபடுத்துவதற்கு ஏதாவது முக்கிய செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதா?

**யா/நங்கை :-** கற்றலுக்கான புறச்சூழலை ஏற்படுத்துவதில் கல்லூரியின் கவின் நிலை என்பது மிக முக்கியமானது. மேலும் இது ஒரு பெண்கள் கல்லூரி. அந்த அடிப்படையில் கல்லூரியின் முகப்பு பிரதேசம் உட்பட ஏனைய பொருத்த மான இடங்கள் எல்லாவற்றிலும் விதம் விதமான பூங்கன்றுகள் நாட்டப் பட்டு இயற்கையை எழில் பொருந்திய பிரதேசமாக மாற்றப்பட்டது. மைதானத் தின் கிழக்குப் பகுதியில் நிழல் மரங்கள் நாட்டப்பட்டுள்ளது. எமது கல்லூரியில் ஏற்கனவே உள்ள பாரிய மரங்களுடன் இவை மேலும் சூழலில் அழகை அதிகரித் துள்ளது என்பதை சுட்டிக் காட்ட முயல்கிறேன்.

**தர்மப்பிரியா :-** உங்கள் கல்லூரி யில் சமய விழாக்கள் ஆலய அபிவி ருத்தி தொடர்பாக ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா?



**யா/நங்கை :-** எமது கல்லூரி விசேட மாக சைவ பெண் பிள்ளைகள் கல்வி பயிலும் இடம். ஏற்கனவே நடை முறையில் இருந்த நவராத்திரி விழா, தைப் பொங்கல் விழா, பிள்ளையார் கதை, குருபூசை தினங்கள், வெள்ளிக் கிழமை போன்ற விசேட காலங்க ளில் விசேட வழிபாடு ஆராதனைகள் நடை பெறும். இது பொதுவாக அன்று தொட்டு இன்று வரை காணப் படும் நிலைமை. ஆலய அபிவிருத்தி என்ற வகையில் இக் காலப் பகுதியில் ஆலயம் புனருத் தானம் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டு முகப் புத் தோற்றம் அலங் கரிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது முக்கிய அம்சமா கும். எங்கள் கல்லூரியின் அதிபர் தனது தலைமையிலே விநாயகரது அருள் வேண் டிய பின் தான் கல்லூரிச் செயற்பாடு களை நடை முறைப் படுத்துவார். விக்கினங்கள் தீர்ப்ப வன் அல்லவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**தர்மப்பிரியா :-** உங்கள் கல்லூரியில் பாடசாலை நேரம் தவிர மேலதிக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் என்ன நிலையில் காணப்படுகிறது?

**யா/நங்கை :-** எமது கல்லூரி யாழ்நகரில் அமைந்தாலும் இங்கு வரும் மாணவிகள் மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகளுக்கு புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளிகளுக்கு கூடுதலான புள்ளிகள் பெற்றவர்கள். தேசிய பாடசாலைக்குச் செல்ல மிஞ்சும் மாணவிகளே எமக்கு வருவார்கள். ஆதலால் கல்லூரி நேர சூசி நிறைவடைந்த பின் அல்லது முன் அவர்களுக்கு விசேட செயற்றிட்டம் அவசியம். இந்த அடிப்படையில் கல்லூரி அதிபரின் திட்டமிடலுடன் ஆசிரியர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் இச்செயற்றிட்டம் இக்காலப்பகுதியில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இந்த இடத்தில் களத்தில் நின்ற ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் தலை சாய்க்கிறேன். "அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழை எழுத்தறிவித்தல்" என்ற தாரக மந்திரத்தை அதிபர் ஆசிரியர்கள் இக்காலத்தில் கெட்டியாக கடைப்பிடித்தார்கள். இது தொடர வேண்டும்.....

**தர்மப்பிரியா :-** உங்கள் கல்லூரியில் பல துறைகளிலும் மாணவிகள் வெற்றிவாகை சூடி வந்தார்கள் அந்தச் சூழலில் அதிபரின் வகிபாகம் பாராட்டு எப்படிக் காணப்பட்டது?

**யா/நங்கை :-** நீங்கள் குறிப்பிட்ட வெற்றியின் நடுநாயகமே மதிப்பார்ந்த அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் பொருத்தமான திட்டமிடல், செயல் ஒழுங்கு, பின்னூட்டல், மேற்பார்வை போன்றவற்றை தளம் பிசகாமல் நெறிப் படுத்தினார். இதற்கு ஏற்றாற் போல் களத்தில் செயற்பட்ட ஆசிரியர்கள் மாணவிகள் செயற்பட்டார்கள். மாணவிகளை போட்டிக்கு அனுப்புதல் பாதுகாப்பு போன்ற அத்தனை செயற்பாடுகளிலும் கண்ணும் கருத்துமாக செயற்படுத்தியவர் மாண்புமிகு அதிபர்.

**தர்மப்பிரியா :-** ஆசிரியர்களிடம் கல்விச் சேவையை வினைத் திறன் ஆக்க உங்கள் அதிபர் எவ்வாறான முகாமை அணுகு முறைகளை பொது வாக பின் பற்றுவார்?

**யா / நங்கை :-** அதிபரின் சிரிப்பே ஆளுமையின் திறவு கோல் பொதுவாக பங்கு பற்றல் முகாமை (Participle Management) அவர் கையாளும் தந்திரோபாயம் எல்லா விடயங்களையும் பொருத் தமான ஆளணி மூலம் மாணவிகளின் வெற்றிக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன்னை உட்படுத்தி செயற் பட்ட தன் விளைவே இன்றைய வெளியீடு (Output) என்றால் மிகையில்லை. இனிய பேசி இதமான சேவை செய்து கல்லூரியை மாட் சிமைப்படுத் தியவர் இக்கால முதல்வர்.

**தர்மப்பிரியா :-** உங்கள் கல்லூரி மாணவிகளை கல்விச் சுற்றுலா கொண்டு செல்லும் செயற் றிட்டம் எப்படிக் காணப்பட்டது?

**யா/நங்கை :-** பொதுவாக எமது கல்லூரி உயர்தர மாணவிகளை வருடா வருடம் கல்விச்சுற்றுலா கொண்டு செல் வது வழக்கம். (Covid –19 நோய்க் காலம் தவிர) இக் காலப் பகுதியில் பொருத் தமான ஆசிரியர் மேற்பார்வையில் அதி பர் தலைமையில் இக்கல்விச் சுற்றுலா அமையும். மாணவிகளின் கற்றலுக்கு ஊக்குவிப்பு வழங்க இச் சுற்றுலா திட்டமிடப்படுவதை சுட்டிக் காட்ட முனைகிறேன். மேலும் பாட அடிப்படையில் கீழ்ப்பிரிவு மாணவிகளும் பொருத்த மான இடங்களுக்கு தேவையின் நிமிர்த்தம் சுற்றுலா சென்றார்கள்.



**தர்மப்பிரியா :-** ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிவித்தல்களை நவீன முறை யில் வழங்க ஏதாவது நடவ டிக்கை எடுக்கப்பட்டதா?

**யா/நங்கை :-** காலத்திற்கு ஏற்றாற் போல நாம் மாற வேண்டும். வளர்ச்சி அடைய வேண்டும். அந்த வகையில் அறிவித்தல் ஒலிவாங்கி ஊடாக பொருத் தமான இடங்க ளில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கிகள் ஊடாக ஒரே நேரத் தில் அறிவித்தல்கள் வழங்கப்படும்.

**தர்மப்பிரியா :-** கல்வி தொழில் போன்றவற்றிற்கு அப்பால் மாணவிகளை வாழ்க்கைக்கு ஆயத்தமாக்கும் செயற்றிட்டம் எவ்வாறு காணப்பட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யா/நங்கை :-** எமது கல்லூரி பெண்கள் கல்லூரி ஆதலால் அவர்களை அடுத்த படிநிலைக்கு ஏற்ற வகையில் உருமாற்றம் பெற பயிற்சி வழங்குவது முக்கியமானதாகும். அந்த வகையில் பெண்மைக்கு இயல்பாக இருக்க வேண்டிய விடயங்களில் ஆலோசனை வழிகாட்டல்கள் ஊடாக பயிற்சி வழங்கப்பட்டது. விசேடமாக மனைப்பொருளியில் கற்கும் மாணவிகள் சமையல் கலையில் தேர்ச்சி வழங்கப்படுவதோடு செய்முறை தொழிநுட்ப பாடம் ஊடாக அனைத்து மாணவிகளுக்கும் அதிபரின் விசேட வழிகாட்டலோடு சமையல் கலைக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தர்மப்பிரியா :-** இலங்கையில் மும்மொழித்திட்டம் நடைமுறையில் உள்ளது. தமிழ் ஆங்கிலம் பற்றி ஏற்கனவே கூறி உள்ளீர்கள். உங்கள் மாணவிகளின் சிங்கள மொழி (2nd Language) எவ்வாறு காணப்படுகிறது?

**யா/நங்கை :-** நாம் இலங்கையர் என்ற அடிப்படையில் இங்கு புழக்கத்தில் உள்ள மொழி அறிவை பெற வேண்டியது முக்கியமானது. அந்த அடிப்படையில் க.பொ.த சா/தர மாணவிகள் சிங்கள பாடத்தை விருப்பத்திற்குரிய பாடமாக தெரிவு செய்கிறார்கள். தரம் 6 முதல் தரம் 9 வரை அனைவரும் சிங்கள பாடத்தை சிறப்பாக தேர்ச்சி பெற அதிபரின் ஆலோசனையோடு ஆசிரிய ஆளணியால் மாணவிகளுக்கு தேர்ச்சி அளிக்கப்படுகிறது. சிங்களப் போட்டிகளில் மாணவிகள் பங்குபற்றி பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்று வந்தார்கள். எத்தனை மொழிகள் தெரிந்தாலும் அவை அறிவுக்கு பலம் சேர்க்கும் அல்லவா?

**தர்மப்பிரியா :-** இக்காலப்பகுதியில் அதிபரின் உள்ளக மேற்பார்வை என்ன ஒழுங்கில் காணப்பட்டது?

**யா/நங்கை :-** கற்றல் கற்பித்தல் செயல் ஒழுங்கை நெறிப்படுத்த உள்ளக மேற்பார்வை இன்றியமையாதது. பிரதி, உப அதிபர்கள், பகுதித்தலைவர்கள் இப்பணியை நேர்த்தியாக அதிபரின் நெறிப்படுத்தலில் செயற்படுத்துவார்கள். எங்கள் அதிபர் பொருத்தான நேரங்களில் கல்லூரியை வலம் வருவார். அப்போது கல்லூரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை கணிப்பீடு செய்வார். எமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை கணிப்பீடு செய்வார். எமது கற்றல் தேர்ச்சிகள் உயர் மட்டத்தில் காணப்பட உள்ளக மேற்பார்வையும் துணைபுரிந்திருக்கிறது என்பதை இந்த இடத்தில் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

**தர்மப்பிரியா :-** கல்லூரி விழாக்களுக்கு ஒத்திகை எவ்வாறு பார்க்கப்பட்டது?

**யா/நங்கை :-** யாழ் மாவட்டத்தில் தரமான நிகழ்வுகள் மேடையேற்றும் கல்லூரி என்றால் எனது கல்லூரி என பெருமையாக சொல்லுவேன். காரணம் எங்கள் அதிபர் ஆசிரியர்கள் மாணவிகளுடன் சேர்ந்து பயிற்சிகள் ஆலோசனைகள் அறிவுறுத்தல்கள் போன்றவற்றை அள்ளி வழங்குவார்கள். நல்ல தரமான நிகழ்வுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


போட்டிக் காயினும் சரி மேடை ஏற வேண்டுமாயினும் சரி உரிய நியதியில் அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார் மதிப்பார்ந்த அதிபர்.

**தர்மப்பிரியா :-** உங்கள் கல்லூரியின் பாண்ட் வாத்திய குழு பற்றி யாது கூறுவீர்கள்?

**யா / நங்கை :-** உண்மையில் இந்த வினா விற்கான விடையை எமது கல்லூரி க்கு வருகை தந்த பிரதம விருந் தினர்கள் சிறப்பு விருந்தினர்கள் கௌரவ விருந்தினர்கள் நலன் விரும்பிகளிடம் கேட்க வேண்டும். ஆனாலும் கல்லூரியில் உள்ள சிரேஸ்ட கனிஸ்ட பிரிவு பாண்ட் குழு மாணவி கள் பாண்ட வாத் திய முழக்கம் வானைத் தொடும் அளவி ற்கு தாளம் பிசகா மல் ஓங்கி ஒலிக்கும். நேர்த்தியான உடை அணிந்து அணிவகுத்து வரும் அவர்கள் வழங்கும் வரவேற்பு அனைவர் உள்ளங்களையும் தொடும்.

**தர்மப்பிரியா :-** உங்கள் கல்லூரியில் உளவள ஆலோசனை என்ன நிலையில் காணப்பட்டது?

**யா / நங்கை :-** இது பெண்கள் கல்லூரி. பல குடும்பப் பின்னணிகளில் இருந்து பல பிரச்சினைகளுடன் மாணவிகள் கல்லூரிக்கு வருவார்கள். கட்டிளமைப்பருவ மாணவிகளை நெறிப்படுத்துவது என்றால் சவால் ஆன விடயம் தானே. இந்த விடயத்தை பொறுப்பான ஆசிரியைகள் கவனிப்பார்கள். மேலதிக ஆலோசனை வழி காட்டல்கள் தேவையாக இருந்தால் அதி பரின் பணி அங்கு முன்நிற்கும். இந்த விடயத்தில் மிக வும் காத்திரமான பணி செய்யப்பட்டது என்று சொல்லலாம்.



**தர்மப்பிரியா :-** கல்லூரியின் முகப்புத் தோற்றம் கவின்நிலை பெற ஏதாவது நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதா?


**யா/நங்கை :-** அக அழகும் , புற அழகும் கல்லூரி வளர்ச்சிக்கு இன்றியமையாதது. முகப்புத் தோற்றம் புதிய வாயில் கதவுகள் போடப்பட்டு கல்லூரியின் வெளித் தோற்றப்பாடு கவின்நிலை பெற கல்லூரி சமூகத்தின் உதவியுடன் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தர்மப்பிரியா :-** உங்கள் இலட்சியம் என்ன?

**யா/நங்கை :-** கல்லூரியின் பணிக் கூற்றுக்கும் நோக்கக் கூற்றுக்கும் இயைபாக எமது கல்லூரி வளங்க ளில் இருந்து உச்ச விளைவை தொடர்தேர்ச்சியாக அடைய நடு-த்தோட்ட விநாயகன் அருள் பாலிக்க வேண்டும்.




**தர்மப்பிரியா :-** இக்காலப் பகுதியில் உங்கள் கல்லூரி தேசிய கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டதாமே?

**யா/நங்கை :-** தேசிய கல்லூரி ஆவ தற்கு கல்வி அமைச்சு பல நியதி களை எதிர் பார்கின்றது. மாணவர்கள் தொகை, கல்வி வெளியீடு, இணைக் கலைத்திட்ட நடை முறை போன்ற அத்தனையிலும் நான் தலை நிமிர்ந்து நிற்கின்றேன். அந்த வகையில் தேசிய கல்லூரி ஆவதற்கு என்ன தடை இருக்கிறது? இதற்கேற்ற முன் ஏற்பாடுகள் நடை பெறுகின்றன.

**தர்மப்பிரியா :-** தங்கள் கல்லூரியின் நூல் நிலையம் இக்காலப் பகுதியில் என்ன பணி ஆற்றியது?

**யா/நங்கை :-** வாசிப்பு மனிதனை பூரணமாக்கின்றது. வாசிப்பவன் அறிவில் செல்வ னாக உள்ளான். மாறாக வாசிக்காதவன் ஏழையாக இருக்கிறான். அந்த வகையில் எமது கல்லூரி நூலகம் முன்பு இருந்ததை விட அபிவிருத்தி செய்யப்பட்டு புதிய நூல் கள் தருவிக்கப்பட்டு நூலகரின் மேற்பார்வையில் நேர அட்டவணைப்படி மாணவிக ளும் பொருத்தமான நேரங்களில் ஆசிரியர்களும் சென்று தமது அறிவுத் தேட்டத்தை வாசிப்பின் ஊடாக பெருக்கிக் கொள்கின்றார்கள்.

**தர்மப்பிரியா :-** ஓய்வு பெற்ற உங்கள் வளர்ப்புப்பிள்ளை இக்காலப்பகுதியில் அதிப ராக இருந்தவருக்கு என்ன சொல்ல ஆசைப்படுகிறீர்கள்?

**யா/நங்கை :-** எனக்கு அவள் செய்த கல்விச் சேவைக்கு தலை சாய்க்கின்றேன். கல்லூரியை சகல வழிகளிலும் செழுமை பெற உழைத்த உத்தமி ஓய்வுக் காலத் தில் குடும்பத்துடன் சீரும் சிறப்புமாக பல நூறு ஆண்டுகள் வாழ வேண்டும். ஓய்வுக் காலத்தில் என் வளர்ச்சியில் முன்னாள் அதிபர், பழைய மாணவி எனும் அடிப்படை யில் புதிய அதிபருக்கு உறுதுணையாக அமைய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்லூரியில் இறுதி நாள் மாணவர்களின் அன்பு மழையில்

**தர்மப்பிரியா :-** உங்கள் எதிர்காலம் பற்றி ஏதாவது கூற முடியுமா?

**யா/நங்கை :-** "ஒளிமயமான எதிர்காலம் என உள்ளத்தில் தெரிகிறது..." என்ற சினிமாப் பாடலை முன்னிலைப்படுத்தி நான் முன்பு சொன்னதைப் போல கட்டிளமைப் பருவத்தோடு தொடர் கல்வி மிடுக்குடன் மாவட்ட கல்வி உயர்வுக்கு குறிப்பாக பெண் கல்வி அபிவிருத்திக்கு மட்டற்ற சேவை செய்ய வேண்டும். அதற்கு அனைவரதும் ஒத்துழைப்பையும் நாடி நிற்கிறேன்.


முதல்வர் வீட்டில்

கல்லூரி சேவையின் இறுதி நாள் மாணவர்களால் கௌரவிக்கப்பட்டபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தர்மப்பிரியா :-** *எப்படியான புதிய அதிபரை 2023இல் எதிர்பார்க்கின்றீர்கள்?*

**யா/நங்கை :-** எமது கல்லூரி இலட்சியத்திற்கு உயிர் கொடுக்கக் கூடிய புதிய அதிபரை எதிர்பார்க்கின்றேன். "நிறைந்த நுண்மாண் நுழை புலம்" கொண்ட முகாமைத்துவ ஆளுமைகள் நிரம்பிய கல்விச் சேவையை மகேசன் சேவையாக நிறைவேற்றக் கூடிய முன்னாள் அதிபரின் பணியை முன்னகர்த்தக் கூடிய அதிபரை கல்லூரி விநாயகன் தருவான் என்பதில் எனக்கு துளி அளவும் சந்தேகம் இல்லை.

**தர்மப்பிரியா :-** நான் வினாவிய பல கோண வினாக்களுக்கும் பரிவுடன் பெண்ணுக்குரிய அடக்கத்துடன் நிதானமாக தாங்கள் விடை பகிர்ந்தீர்கள். உங்கள் மனம் போல கல்லூரி செழுமை பெறும் உயர்வுறும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

**யா/நங்கை :-** வணக்கம் போய் வாருங்கள் சகோதரி! மீண்டும் நாங்கள் சந்திப்போம். (என்னுடன் வாசல் வரை நடந்து வந்து சிரித்து வணங்கி வழி அனுப்பி வைக்கிறார்.)

**தர்மப்பிரியா :-** நன்றி உடன் பிறப்பே போய் வருகிறேன். (கை அசைத்தபடி)



மாணவர்கள் முன்னிலையில் விடைபெற்றபோது...

நன்றி

நெறியாள்கை :

**திரு. A. லிங்கராஜ்**

(ஆசிரியர்) யாழ்.இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ பீட மாணவிகளின் வாழ்த்துச் செய்தி



தர்ஷி ஞானசேகரம், கஜவாணி ஞானேந்திரன், சாலிஹா நிஜாமுதீன் ஆகிய நாங்கள் மதிப்புக்குரிய எமது அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் கடமை ஆற்றிய காலப் பகுதியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை (2018) விஞ்ஞான பிரிவில் சித்தி பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகி இருந்தோம். எமது கற்றல் செயற்பாடு களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்து நம்பிக்கை அளித்த எமது அதிபருக்கு இத் தருணத்தில் மனமார்ந்த நன்றிகளை யும், மற்றும் அவரது 60 ஆவது அகவை பூர்த்திக்கு எமது வாழ்த்துக்களையும் தெரி விக்கிறோம்.

அவரது ஓய்வு காலம் சிறப்புற அமை வதுடன் அவர் நீண்ட ஆயுளுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக் கிறோம்.



கஜவாணி ஞானேந்திரன் தர்ஷி ஞானசேகரம் சாலிஹா நிஜாமுதீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பெறுபேறு பெற்ற 2016 வர்த்தகபிரிவு மாணவிகளின் வாழ்த்து

எமது பாடசாலையின் மதிப்பிற்குரிய அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்கள் அகவை அறுபதை அடைவதை ஒட்டி வாழ்த்துவதில் பெருமையும் மகிழ்வும் அடை கின்றோம். தன்னலமற்ற சேவை தளரா முயற்சி அனைவரையும் அரவணைக்கும் அன்புடைமை போன்ற விழுமியங்களுடைய எமது அதிபர் எமது பாடசாலையின் வளர்ச் சிக்கு மிக வும் கடமையுணர்வுடன் செயற்பட்டார். இவர் கடமையாற்றிய காலப் பகுதி யில் க.பொ.த உயர்தர பரீட்சையில் (2016) பதினான்கு மாணவர்கள் வர்த்தக பிரிவில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி இருந்தோம். அந்த ஆண்டில் பத்துப்பேர் 3A வர்த்தகப் பிரிவில் பெற்றுக்கொண்டோம்.

எமது பாடசாலை காலங்களில் எமது கல்வி செயற்பாடு களுக்கு மிகவும் உறு துணையாக இருந்தார். இவரின் விடாமுயற்சிக்கு எமது வெற்றியே சான்றாகும். எமது அதி பரின் அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கு நன்றி கூறுகின் றோம். ஓய்வு பெறும் எமது அதிபர் பல நலங்கள் பெற்று இறையருளுடன் வாழ வாழ்த்துகின்றோம்.


Kirubalini


Tharshana


Siyana


Kabishka


Sarunja


Vishali


Kajabalini


Abinuka


Mithusha


Thanusha


Brannavi


Sunmukajini


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபரை மனமார வாழ்த்துகிறோம்

மதிப்பிற்குரிய எமது அதிபர் திருமதி.விமலநாதன் அவர்கள் தனது சேவைக்காலம் முழுவதும் எமது பாடசாலை மீதும் மாணவர்கள் மீதும் மிகுந்த அக்கறையும் கவனமும் கொண்டு எம்மை வழிநடத்தும் ஒரு சிறந்த தலைமை ஆவார். பாடசாலைச் சூழலினை என்றும் தூய்மையாகவும் அழகுடனும் பேண வேண்டும் என்பதுடன் எம் மாணவர் மத்தியில் ஒழுக்கத்தை நிலைநாட்டுவதிலும் அவர் முனைவுடன் செயலாற்றியிருந்தார். இவர் எம் மாணவர்கள் அனைவரிற்கும் ஒரு சிறந்த முன்னுதாரணம் ஆவார்.

கல்வி, கல்வி சாரா செயற்பாடுகள் என அனைத்திலும் மாணவர்களை மிளிரச் செய்வதில் பெரும் ஊக்குவிப்பினைச் செய்வார். எமது பாடசாலைக் காலத்தில் நாம் பெற்ற சிறந்த பெறுபேறுகளுக்கும் மாவட்டத்தில் முதல் நிலையைப் பெறுவதற்கும் எமது அதிபரின் பங்களிப்பு இன்றியமையாதது ஆகும். இவ்வாறு எம்மை நல்வழிப்படுத்திய எமது அதிபரிற்கு எமது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**செல்வி.சாம்பவி ஜெயதிலக**
வர்த்தக பிரிவு - 2018
(மாவட்ட நிலை 01)



**செல்வி.கௌசனா பாலசுந்தரம்**
வர்த்தக பிரிவு - 2014
(மாவட்ட நிலை 01)



**செல்வி.மதுஜா கமலநாதன்.**
உயிரியல்
தொழில்நுட்பபிரிவு-2020
(மாவட்ட நிலை -01)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தரத்தின் உயர் அடைவிற்கு வழிகாட்டி

எமது கல்லூரியின் ஆளுமை மிக்க நிர்வாகத்தால் விஞ்ஞானப் பிரிவு, கணிதப் பிரிவு, கலைப் பிரிவு, வர்த்தகப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு மாணவிகள் உயர்ந்த பெறுபேறுகளை தொடர் தேர்ச்சியாகப் பெறுவதற்கு உழைத்த எங்கள் மரியாதைக்குரிய அதிபர் திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்ற இந்த வேளையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உயர்தர மாணவிகளாகிய நாம் மகிழ்ச்சி யடைகின்றோம்.

உயர்தர மாணவிகள் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியை பெறுவதற்கு க.பொ.த உயர்தரத்தில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெறுவது முக்கியமானது. மாணவி களுக்கும், ஆசிரியர்களுக்கும் பொருத்தமான ஆலோசனைகளை வழங்கி மேலதிக கற்றல் செயற்பாடுகளை நெறிப்படுத்தி ஏனைய உயர்தர பாடசாலைகளோடு ஒப்பிடக் கூடிய பெருமையை தனது பத்தாண்டு சேவைக்காலத்தில் நெறிப்படுத்தி செயற்படுத்தியவர் கல்லூரி அதிபர் என்றால் மிகையாகாது. எமது வாழ்நாள் முழுவதும் நினைவுகூரக்கூடிய ஒப்புயர்வற்ற சேவையை கல்லூரிக்கு நல்கியவர் மதிப்பார்ந்த அதிபர் அவர்கள். பழைய மாணவியாக தனது தாய் வீடான கல்லூரிக்கு நல்கிய சேவையை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

எங்கள் அதிபரின் ஓய்வுக்காலம் நோய்நொடியின்றி மகிழ்வாகவும், ஆரோக்கிய மாகவும், சிறப்பாகவும் காணப்பட கல்லூரி விநாயகரைப் பணிகின்றோம்.



Sivapragasam Sivapriya
District rank 10
Island rank 144
Engineering
Moratuwa



Sripriya Thurairasasingam
Bio 2021batch 13A
Jaffna University Medicine



Jasveena Arulnathan
3A , 26 -rank
Medicine



Rathini Rajendran
District rank- 100
Island rank - 1376
Z score- 1.8914
Engineering
university of jaffna

(கணித - விஞ்ஞானப் பிரிவு - 2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையின் மகுடம்!

2022 ஆம் ஆண்டு வெளியாகிய க.பொ.த சாதாரண தர பரீட்சை முடிவுகளின் படி எமது பாடசாலையின் 12 மாணவிகள் 9A சித்தியையும் ஏனைய மாணவிகள் சுட்டிக் காட்டத்தக்க உயர் பெறுபேறுகளையும் பெற வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களை இந்த இடத்தில் என் மனக்கண் நிலைநிறுத்தி, எமது கல்லூரியின் அதிபர் எங்கள் மதிப்பிற்குரிய திருமதி. மிமலாதேவி விமலநாதன் அவர்கள் ஓய்வு பெறுவதை முன்னிட்டு வழங்கும் வாழ்த்துச் செய்தியில் வாழ்த்து தெரிவிப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.



ஒரு படகு சரியான இலக்கை நோக்கி பயணித்து கரையை அடைவது மாலுமியின் கையிலேயே தங்கியிருக்கிறது. யாழ்.இந்து மகளிர் கல்லூரி என்கின்ற படகினை இலக்கை நோக்கி கொண்டு சென்ற பெருமை கல்லூரியினுடைய முதல்வர் அவர்களையே சாரும். சர்வதேச மொழியாகிய ஆங்கில மொழி உட்பட அனைத்து பாடங்களிலும் ஏனைய முன்னணி பாடசாலைகளிற்கு நாம் எவ்விதத்திலும் சளைத்தவர் அல்ல என்பதை அண்மைக்கால பெறுபேறுகள் வெளிக்காட்டி நிற்கின்றன. இந்த வெற்றிகளுக்கு நேரடி பங் காளிகளாக மாணவிகள், ஆசிரியர்கள் இருந்தாலும் அவர்களை சரியான முறையிலே திசைமுகப்படுத்தி தொடர் வெற்றிக்கு தன் அதிபர் பணிக்காலத்தில் அல்லும் பகலும் சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களால் திறந்து வைக்கும்போது...






பவள விழா மண்டப திறப்பு விழாவின் போது....





U.S.A கட்டட திறப்பு விழாவும், U.S.A அதிகாரி முதல்வரால் கௌரவிக்கப்பட்டமை.



பவளவிழா கட்டடத் தொகுதியும் விளையாட்டு அரங்கு மைதான பார்வை அரங்கும்



துணைவேந்தர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டபோது...

கல்லூரி முதல்வரின் இறுதி பரிசளிப்பு விழாவில் (2022)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவர் பெருமதிப்பிற்குரிய எமது அதிபர் என்றால் அது மிகையாகாது. இணை கலைத் திட்ட செயன்முறைகளான விளையாட்டு, தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலதினப் போட்டி, ஏனைய போட்டிகள் அத்தனையிலும் இந்து மகளிர் கல்லூரியின் புகழ் ஓங்கி ஒலிக்க காரணகர்த்தாவாக திகழ்ந்தவர். மாணவிகளாகிய நாம் தலைவணங்கும் எம் அதிபர் அவர்களே.

எங்கள் அதிபர் கல்லூரி விநாயகரின் அருளால் சீரும் சிறப்புமாக வாழ இறைஞ்சுவதோடு அவரது சேவை, ஆலோசனை வழிகாட்டல்கள் தொடர்ந்து எம் கல்லூரிக்கு கிடைக்க இறைவனை வேண்டுகின்றோம்.

நலம் பெற்று வாழ பணிவன்புடன் வாழ்த்துவோர்,

**செல்வி. ச.அருணா**

(2021 (2022) க.பொ.த சா/த 9A சித்தி பெற்ற மாணவிகள் சார்பாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய மட்ட பரீட்சைகள், இணைபாட செயற்பாட்டின் முடிவுகள் (2022 இல் நிகழ்ந்தவை)

O/L பாட ரீதியான அடைவு -2021

| No. | Name OF the Candidate | Grade Count | Results |
|---|---|---|---|
| 1 | SATHTHIYAN ARUNA | 90000 | |
| 2 | AMUTHASINGAM MANJULA | 90000 | |
| 3 | MURUGATHAAS SANGAVI | 90000 | |
| 4 | MANIRASAN THUJANI | 90000 | |
| 5 | NAGESWARAN YANANI | 90000 | |
| 6 | SUTHAHARAN THUSHARA | 90000 | |
| 7 | SHANMUGATHAS GAJANIKA | 90000 | 9A |
| 8 | BALAKUMAR MATHUSHANA | 90000 | |
| 9 | CHANDRAMOHAN THILAKSHINI | 90000 | |
| 10 | BASKARAN BRINCHIKA | 90000 | |
| 11 | MALARKANNAN NITHARSHA | 90000 | |
| 12 | SASEETHARAN MATHUMITHA | 90000 | |
| 1 | RANJAN KESHANA | 81000 | |
| 2 | RAVEENDRAN ABISHANA | 81000 | |
| 3 | SRIKISNAMENAN DARSHANA | 81000 | |
| 4 | LORANCHI SUJANI | 81000 | |
| 5 | KAPILAN GAJANI | 81000 | |
| 6 | RAJENDRAN DISHARUJA | 81000 | |
| 7 | SRIVARATHAN KAYANA | 81000 | 8A |
| 8 | SRIKANTHAN GAJALUXSY | 81000 | |
| 9 | CHANDRASEKARAN RAMYA | 81000 | |
| 10 | PRIYATHARSHANA PRIYANKA | 80100 | |
| 11 | SURESHKUMAR SENTHURI | 80100 | |
| 12 | KUMARAKULASINGAM MATHUSAGIKA | 80100 | |
| 13 | JEYAKUMAR SHARMIKA | 80100 | |
| 1 | MOHANARAJ MENAGA | 72000 | |
| 2 | VASEEKARAN ABINAYA | 72000 | |
| 3 | RAVEENDRAN KAVIYA | 72000 | |
| 4 | ARIHARAN YASVINI | 72000 | |
| 5 | SELVARASA DANOYA | 72000 | 7A |
| 6 | THARMALINGAM JATHUSHA | 72000 | |
| 7 | MANMATHARASAN AKALYAH | 72000 | |
| 8 | VARATHARASA DASHVEENA | 72000 | |
| 9 | JOHNSTMATSUEKER DILTRESA | 72000 | |
| 10 | KURUS BAVISNA | 72000 | |
| 11 | LINGESWARAM JAATHAVI | 71100 | |
| 12 | THILAGARATNAM THILAKSHIGA | 71100 | |
| 13 | SHANTHAKUMAR RAMMIYA | 71100 | |
| 14 | SIVANESAN SIVATHANUSIYA | 71100 | |
| 15 | RAJANADESWARAN HARRNY | 71100 | |
| 16 | RANJITHKUMAR DANUSHIYA | 71100 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 1 | PALANIKUMAR SAUNDARIYADEVI | 63000 | |
| 2 | JEYAKUMAR EZHILINY | 63000 | |
| 3 | SELVA AJIBA | 63000 | |
| 4 | KANTHARUPAN MATHURI | 63000 | |
| 5 | TENEES SUVATHIKA | 62100 | |
| 6 | VISAYARUBAN MITHUSHANA | 62100 | 6A |
| 7 | SUTHAKAR THISANA | 62100 | |
| 8 | THAVARASA KAYATHTHIRY | 62100 | |
| 9 | THAVARASA KAMSAJINI | 62100 | |
| 10 | KOKULAN SARITHA | 61200 | |
| 11 | SURENTHIRAN THILUXIGA | 61200 | |
| 12 | ELANGOVAN MAYOORIKA | 61200 | |
| 1 | RAVIVARMAN SOWMIYA | 54000 | |
| 2 | ARIVARASAN ABARNA | 54000 | |
| 3 | RAJINTHAN LAXSHAJINI | 54000 | |
| 4 | MAHALINGAM LISHARUJA | 53100 | |
| 5 | RAVEENDRAN ARCHCHITHA | 53100 | |
| 6 | RAMESHAN LATHUSHA | 53100 | |
| 7 | SIVAGANESHAN NILAKSIGA | 53100 | |
| 8 | SIVALINGAM BANUJA | 53100 | |
| 9 | SRITHARAN PRAVEENA | 53100 | 5A |
| 10 | SANTHAKUMAR THIVAHARI | 53100 | |
| 11 | GUNASINGAM JAYANTHINI | 53100 | |
| 12 | SELVARANJAN ABINAA | 52200 | |
| 13 | KANAGARATNAM ABIRA | 52200 | |
| 14 | SIVATHAS VAISHNAVI | 51300 | |
| 15 | KUMARACHANDRAN SHAANUJAH | 51300 | |
| 16 | KANTHASAMY KISHOPIKA | 51300 | |
| 17 | NANTHAKUMAR SIPITHA | 51300 | |
| 18 | NAVASEELAN SHETHURSHANA | 51210 | |
| 19 | KUNAPARAN RUBIKA | 50400 | |
| 1 | JEYARAJ THARANIYA | 45000 | |
| 2 | SELVASENAKURUKKAL SARUKA | 44100 | |
| 3 | SHIREETHARRAN PRIYANKA | 44100 | |
| 4 | RAVICHANDRAN KAVIYARASI | 43200 | |
| 5 | MURALITHARAN SHANTHIYA | 43200 | |
| 6 | JEYATHEEPAN JESINTHA | 43200 | |
| 7 | SIVANANTHAN SOWMIYA | 43200 | |
| 8 | THINESWARAN THILAKSHIKA | 43200 | |
| 9 | JEYANTHIRAN KOVIKA | 43200 | 4A |
| 10 | THARMAKUMAR JANUSHA | 43110 | |
| 11 | VARATHARAJAN PAVITHTHIRAGINI | 42300 | |
| 12 | MUGUNTHAN SUVASTHIGA | 42300 | |
| 13 | VIGNARAJ VARSHANAA | 42300 | |
| 14 | KATHIRKAMASEGARAM MATHUSALINI | 42300 | |
| 15 | THANGESWARAN SUTHANTHIRA | 41310 | |
| 16 | AMPIKAIPAKAN RAHINE | 41310 | |
| 17 | NESHAN THEEPIKA | 41310 | |
| 18 | DANISHKUMAR LAKSHIGA | 41220 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ் இந்து மகளிர் கல்லூரியின் சாதனையில் 3 தங்கங்கள் தேசிய கலை கலாசார போட்டியில் (பொலநறுவை - 28.12.2022) - தேசிய மட்டம்**



குழு வர்ணம் - 1ம் இடம்

**2022 தமிழ் தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் பதக்கம் வென்றோர்**

**3ஆம் இடம் - பிரிவு 5**
**இலக்கிய திறனாய்வு**
செல்வி. துஷிந்தா சிறிகாந்தன்
(எழுத்தாக்கம்)

**1ஆம் இடம் - பிரிவு 4 - நடனம் :**
செல்வி. லாவண்யா தட்சணாமூர்த்தி

**1ஆம் இடம் - பிரிவு 5 - தனி நடனம்**
செல்வி. சீனுஜா இராஜேந்திரன்



தனி ஜதீஸ்வரம் 1ம் இடம் - லாவண்யா



தனி பதம் 1ம் இடம் - நிவேதனா



2021 / 2022 க.பொ. த (சா/த) பரீட்சையில் உயர் பெறுபேறு பெற்றமையிட்டு கௌரவிக்கப்பட்டபோது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மைதானத்தில் வீரர்களுடன்...



அணி வகுப்பை ஏற்றுக் கொள்ளல்


மெய்வல்லுனர் போட்டியின் போது...


விருந்தினர்களை அழைத்து வரல்...



சின்னம் சூட்டும் வைபவம்


பரிசளிப்பு தின நிகழ்வில்....


மணிவிழா நிகழ்வுகள்



ஆங்கில தின நிகழ்வில்...




விருந்தினர்களை அழைத்து வரல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/ JAFFNA HINDU LADIES'COLLEGE

## DETAILED INFORMATION ON COURSE SELECTION UNIVERSITY ADMISSION-ACADEMIC YEAR 2021/2022

**PHYSICAL SCIENCE**

| No. | NAME OF THE CANDIDATE | COURSE & UNIVERSITY |
|---|---|---|
| 1 | SIVAPRAGASAM SIVAPRIYA | ENGINEERING-UNIVERSITY OF MORATUWA |
| 2 | PATHMANATHAN THARSHIKA | COMPUTER SCIENCE & TECHNOLOGY-UVA WELLASSA UNIVERSITY |
| 3 | THAYAPARAN VISHNUJA | APPLIED SCIENCES (PHYSICAL SCIENCE)-UNIVERSITY OF VAVUNIYA |
| 4 | RAJENDRAN RATHINI | ENGINEERING-UNIVERSITY OF JAFFNA |
| 5 | THAVANESWARAN NIKETHA | APPLIED SCIENCES (PHYSICAL SCIENCE)-UNIVERSITY OF VAVUNIYA |
| 6 | SUNTHARAMPILLAI KIRUBALINI | SCIENCE AND TECHNOLOGY-UVA WELLASSA UNIVERSITY |
| 7 | SUTHAHARAN THARABI | APPLIED SCIENCES (PHYSICAL SCIENCE)-WAYAMBA UNIVERSITY |

**BIOLOGICAL SCIENCE**

| | | |
|---|---|---|
| 8 | THURAIRASASINGAM SRIPRIYA | MEDICINE-UNIVERSITY OF JAFFNA |
| 9 | ARULNATHAN KISHALINI | AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT-UNIVERSITY OF PERADENIYA |
| 10 | ARUTSELVAR DANUSHIYA | AGRICULTURE-UNIVERSITY OF JAFFNA |
| 11 | JEYANTHAN NIVETHIGA | AGRICULTURE-SABARAGAMUWA UNIVERSITY |
| 12 | RAMANAN HAMSHIGA | AQUATIC RESOURCES TECHNOLOGY-UVA WELLASSA UNIVERSITY |
| 13 | PALNIPPALAM PAVAPRAGASHINI | BIOLOGICAL SCIENCE-UNIVERSITY OF JAFFNA |
| 14 | ESWARAN SNEKA | APPLIED SCIENCES (BIOLOGICAL SCIENCE)-RAJARATA UNIVERSITY |
| 15 | VIJAYAKUMAR NITHUSHA | EXPORT AGRICULTURE-UVA WELLASSA UNIVERSITY |
| 16 | ARULNATHAN JASVEENA | MEDICINE-UNIVERSITY OF SRI JAYEWARDENEPURA |
| 17 | THANGARASA NILANI | SIDDHA MEDICINE AND SURGERY-UNIVERSITY OF JAFFNA |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 18 | BALACHANDRAN ABINAYA | BIOLOGICAL SCIENCE-UNIVERSITY OF JAFFNA |
| 19 | PUSHPARAJ PRIYANGA | AYURVEDIC MEDICINE AND SURGERY-INSTITUTE OF INDIGENOUS MEDICINE |
| 20 | SUNDARALINGAM SANJIKA | NURSING-UNIVERSITY OF JAFFNA |
| 21 | THARMATHAYALAN SARUGA | NURSING-UNIVERSITY OF JAFFNA |
| 22 | KAPILAN PIRANAVI | BIOLOGICAL SCIENCE-UNIVERSITY OF JAFFNA |
| 23 | KUNALAN SIVAUMA | SIDDHA MEDICINE AND SURGERY-UNIVERSITY OF JAFFNA |
| 24 | MOHANARAJ SUSANTHIKA | APPLIED SCIENCES (BIOLOGICAL SCIENCE)-UNIVERSITY OF VAVUNIYA |
| 25 | SATKUNARAJAH SURABA | AGRICULTURE-UNIVERSITY OF JAFFNA |
| 26 | BALASUPRAMANIJAM KAJANISHA | SIDDHA MEDICINE AND SURGERY-UNIVERSITY OF JAFFNA |
| 27 | SAYANTHAN SHANKAVI | AGRICULTURAL RESOURCE MANAGEMENT AND TECHNOLOGY-UNIVERSITY OF RUHUNA |
| 28 | THILLAINATHAN SUVETHIKA | AGRICULTURE-UNIVERSITY OF JAFFNA |

**COMMERCE**

| | | |
|---|---|---|
| 29 | SATKUNANANTHASARMA SUWASHYANTHI | MANAGEMENT-UNIVERSITY OF COLOMBO |
| 30 | SINGARASA SONIYA | BUSINESS INFORMATION SYSTEMS (HONOURS) (BIS)-UNIVERSITY OF SRI JAYEWARDENEPURA |
| 31 | MOHAMED NAZAR FATHIMA SIYANI | MANAGEMENT-UNIVERSITY OF JAFFNA |
| 32 | GENKATHARAN SUBAVATHANI | MANAGEMENT-UNIVERSITY OF RUHUNA |
| 33 | SIRISKANTHARASA SATHURJA | MANAGEMENT-UNIVERSITY OF JAFFNA |
| 34 | VAIKUNTHANATHAN THARSIGA | MANAGEMENT-UNIVERSITY OF JAFFNA |
| 35 | SASEETHARAN LUXEGA | MANAGEMENT-UNIVERSITY OF PERADENIYA |
| 36 | NIRMALANATHAN NILAKSANA | MANAGEMENT-UNIVERSITY OF JAFFNA |
| 37 | SHANDRAKUMAR PENUJA | MANAGEMENT-UNIVERSITY OF JAFFNA |
| 38 | SIVASOTHY RANJANI | MANAGEMENT-UNIVERSITY OF JAFFNA |
| 39 | SRIKANTHAN DISHALINI | MANAGEMENT-UNIVERSITY OF JAFFNA |
| 40 | ROBERT GNANATHAS THASMIKA | MANAGEMENT-UNIVERSITY OF JAFFNA |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்தினத்தில் தேசிய மட்டத்தில்
பதக்கம் பெற்றோருடன்



பதக்கம் பெற்ற மாணவிகள்




பதக்கம் வென்ற கராத்தே
அணியினர்




வலைப்பந்தாட்ட அணியினிருடன்



மாணவ தலைவிகளுடன்




சாதனை மாணவிகளுடன்



பதக்கம் வென்ற
மாணவியுடன்

தமிழ் தினத்தில் வெற்றி பெற்றோருடன்






பதக்கம் வென்ற
மாணவியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆலய கும்பாபிஷேக நிகழ்வில்


மாணவர் பாராளுமன்ற அமர்வில்


மாணவர் பாராளுமன்ற தேர்தல் - 2022


ஆசிரிய தினத்தில் ஆசிரியர்கள் கௌரவிப்பு - 2022


சிறுவர் தினம் - 2022

ஓய்வு பெற்று, இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களின் சேவை நயப்பின் போது - 2022





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 41 | THAYALAN KANAGALOGINI | COMMERCE-EASTERN UNIVERSITY |
| 42 | THILAKANATHAN KOSIYA | MANAGEMENT-UNIVERSITY OF JAFFNA |

**ARTS**

| | | |
|---|---|---|
| 43 | KRISHNAKUMAR THARUSHANA | ARTS-UNIVERSITY OF PERADENIYA |
| 44 | ATPUTHARASA SUWASTHIKA | PLEASE CALL THE UGC (0112695301/0112695302/0112692357/0112675854) |
| 45 | SURESHKUMAR AATHMIKA | PLEASE CALL THE UGC (0112695301/0112695302/0112692357/0112675854) |
| 46 | SIVAKUMAR ANOGIKA | ARTS-UNIVERSITY OF JAFFNA |
| 47 | THAEVAMAJURAN GAJAPOOSANY | ARTS-UNIVERSITY OF JAFFNA |
| 48 | VASANTHAKUMARAN VAISNAVI | ARTS-UNIVERSITY OF JAFFNA |
| 49 | SABESAN VARSHANA | ARTS-UNIVERSITY OF JAFFNA |
| 50 | BALESWARAN KANISHYA | ARTS-UNIVERSITY OF PERADENIYA |
| 51 | SURESHKUMAR THIRUSTIGA | PLEASE CALL THE UGC (0112695301/0112695302/0112692357/0112675854) |
| 52 | THAYAPARAN THARANIKA | ARTS-UNIVERSITY OF PERADENIYA |
| 53 | SUTHARSHAN THUSHARA | ARTS-UNIVERSITY OF JAFFNA |
| 54 | ANANTHARAJAH ABIRAMY | PLEASE CALL THE UGC (0112695301/0112695302/0112692357/0112675854) |
| 55 | BALASINGAM THIVYA | ARTS-UNIVERSITY OF JAFFNA |
| 56 | NADESAN KABINAYA | ARTS-UNIVERSITY OF JAFFNA |
| 57 | VIKNESWARAN KOKILA | ARTS-UNIVERSITY OF JAFFNA |
| 58 | SELVANAYAKAM SAAMINA | ARTS-EASTERN UNIVERSITY |
| 59 | KULENTHIRANATHAN BAVATHARANY | ARTS-UNIVERSITY OF JAFFNA |
| 60 | SATHEESKUMAR THARSHIKA | ARTS-EASTERN UNIVERSITY |
| 61 | JEKATHESWARAN BAJEENA | PHYSICAL EDUCATION-UNIVERSITY OF JAFFNA |
| 62 | LINGESWARAN KARUNIKA | ARTS-EASTERN UNIVERSITY |
| 63 | MANOKARAN SANJIKA | ARTS-UNIVERSITY OF JAFFNA |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TECHNOLOGY**

| | | |
|---|---|---|
| 64 | SELVARATHNAM KETHUSHA | INFORMATION COMMUNICATION TECHNOLOGY-UNIVERSITY OF VAVUNIYA |
| 65 | KIRUPAKARAN RENSHIKA | ENGINEERING TECHNOLOGY (ET)-UNIVERSITY OF JAFFNA |
| 66 | MANOHARAN THIVYA | BIOSYSTEMS TECHNOLOGY (BST)-UNIVERSITY OF JAFFNA |
| 67 | BALASUBRAMANIAM ABISHAJINI | BIOSYSTEMS TECHNOLOGY (BST)-EASTERN UNIVERSITY |
| 68 | JOKENTHIRA KIRUJALINY | BIOSYSTEMS TECHNOLOGY (BST)-EASTERN UNIVERSITY |

| STREAM | NO OF STUDENTS |
|---|---|
| PHYSICAL SCIENCE | 7 |
| BIOLOGICAL SCIENCE | 21 |
| COMMERCE | 14 |
| ARTS | 21 |
| TECHNOLOGY | 5 |
| **TOTAL** | **68** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனுசரணை: ANDRA 379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 8929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org